
www.padippakam.com

# மண்

ல்வி-கலை-இலக்கிய-சமூக இருமாத இதழ்



யேர்மனி

இதழ்- 97

தை-மாசி

January-February

2003

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்






வாசகப் பெருமக்களுக்கு!...

உள்ம்கனிந்த நத்தார்,



புதுவருட


நல்வாழ்த்துக்களைத்

தெரிவித்துக் கொள்கிறோம்!





சமாதானம் தொலைந்து பாரில்
அழுகைச் சத்தங்களே கேட்கின்றன
சுற்றம் சொந்தமெல்லாம்
சுடுகாடே தஞ்சமெனச் சென்றுவிட்டார்
விடியல் பொழுதும் இங்கே
வெறும் வெடியுடனே புலர்கிறது
விண்ணில் புதல்வரே
வாரும் இங்கு எமைக்காக்க!...



வாசகப் பெருமக்களுக்கு
தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களைத்

## உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர் உலகம்
- ஆத்திசூடி, திருக்குறள்
- கவிதை, கட்டுரை
- வாசகர்கடிதம்
- சிறுகதை, தொடர்கதை
- அறிவியல், பொதுஅறிவு
- குறுக்கெழுத்துப்போட்டி
- செய்திச்சரம்
- ஐரோப்பிய செய்திகள்
- தாயகச் செய்திகள்
- மருத்துவக்குறிப்புகள்
- கத்தோலிக்க விடையங்கள்
- சாதுாரியத்திறன் போட்டி
- நற்சிந்தனை, தகவல்துளிகள்
- அமரர் குமார் பொன்னம்பலம்
- ஆதரவற்றோர் உதவிநிதி


### „மண்“ சஞ்சிகையின் தொடர்புகள்


அசிரியர்கள்: வ. சிவராசா
ப. சௌந்தரராசா
முகவரி: V.Sivarajah
Angertaler Str.98
47249 Duisburg - Germany
தொலைபேசி: 0203/706480
தொலைநகல்: 0203/6080581
மின்னஞ்சல்: mann_erde_sivarajah@hotmail.com
வங்கிவிபரம்: Stadtsparkasse Duisburg
*Kontonummer:* 225000421

www.padippakam.com



# எங்கள் கருத்து

அரசு – விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையின் பலனாக வடக்கு – கிழக்குப் பிரதேசங்களில் வாழும் தமிழ், முஸ்லீம்மக்களுக்கு ஓரளவு நிம்மதிவாழ்வு கிடைத்ததுள்ளது எனக் கூறலாம். நோர்வே உட்படப் பல வெளிநாட்டு நிறுவனங்கள் வடக்கிழக்குப்பதிகளில் நிலை கொண்டு பல சமூக அபிவிருத்தித் திட்டங்களை உடனடி மனிதாபிமான புனர்வாழ்வுத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி–வருகின்றன.

இந்நிலையில் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள „சிரான்“ அலுவலகமானது துரிதகதியில் இயங்கி வடக்கு. திழக்குப்பகுதியில் தமது ஆய்வுகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு. மக்கள் பலன்களை அனுபவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியமாகின்றது. மக்கள் போரினால் பாதிக்கப்பட்டு பலவகையானதுன்ப துயரங்களின் பின் தமது பூர்வீக நிலங்களில் திரும்பி மீளக்குடியமர்வதர்குரிய சூழ்நிலையை அரசும், விடுதலைப்புலிகளும் தோற்றுவித்தல் வேண்டும் அரபடைகளின் நிலையிருப்பு, கண்ணிவெடி அகற்றப்படாமை மீள்குடியேற்றத்திற்கு தடையாக இருந்துவருவது இங்கே பல பிரச்சனைகளை ஏற்படுத்திவருகின்றன.

மக்களின் புனர்வாழ்வுத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் போரினால் சிதைந்து போயிருக்கின்ற மக்களின் கல்வி, சுதாதாரம், உணவு, வீடு போன்ற அடிப்படை வசதிகள் சீரமைக்கப்படுதல் அவசியமாகும் இவற்றை மீழ் புனரமைப்பதன்மூலம் மக்களின் பழைய நல்வாழ்வு நிலையை மீளக்கட்டி எழுப்பலாம். இதன் மூலம் சமூகம் வளர்ச்சிபெறும். மறுபுறம் நம்பிக்கை ஒளிபிறக்கும். இந்தவகையில் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட திட்டமிட்டவகையில் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொண்டு மக்களுக்கான உதவிகள் விரைவாக வழக்கப்படல் வேண்டும்.


தமிழர்பிரதேசங்களில் இன்று அரசபடைகளின் கட்டுப்பாடு — கட்டுப்பாடற்ற என இருபிரதே சங்கள் காணப்படுகின்றன. கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் குடியிருப்பு அபிவிருத்தி நடிவடிக்கைகளில் பிரச்சனைகள் ஏற்படாது. ஆனால் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் இதற்குமாறாக நிலமை இன்றும் கவலைதரும் வகையில் உள்ளது. மக்களின் சுந்திர, புரைமைப்பு, நல்வாழ்விற்கு இடையூறாகவுள்ளது. இந்த நிலையில் யாழ்குடாவில் இன்னமும் தமிழ்மக்கள் முழுமையாக மீளக்குடியமரமுடியாத நிலை இருக்கின்றது இது முழமையான சமாதாரனத்திற்கு, புரைமைப்புக்கு இடையூறாகவே இருக்கின்றது. சமாதானப் பேச்சுக்கள் தீர்க்கமான இலக்குகளை நோக்கி நகரும் போது இராணுவத்தினர் தமது பாதுகாப்புக்காரணங்களைக் காட்டி மக்களின் இயல்பு வாழ்வுக்குத் தடையாகவே இருந்துவருகிறார்கள்.

எனவே தமிழர்கள் தமது சொந்த பூர்வீக நிலங்களின் மீற்குடியேறி, அமைதியாகவும், சுதந்திரமாகவும், சுமூகமாகவும் இயல்பு வாழ்வு வாழ்வதற்கு இலங்கைப் படைகள் பொதுமக்கள் வாழும்பிரதேசங்களிலுள்ள படைமுகாம்களை, தடை முகாம்களை உடனடியாக அகற்றுதல் வேண்டும். மீண்டும், மீண்டும் யுத்த நடிவடிக்கைகளை கைவிட்டு சகலதரப்பினரும் சமாதான உடன்படிக்கைகளுக்கு மதிப்புக்கொடுத்து அமைதியாக, சுதந்திரமாக, ஜக்கியமாக வாழ்வதையே நொந்துபோன நம்மக்களின் இன்றைய விருப்பமாகும்.

– ஆசிரியர் –

www.padippakam.com






## தமிழ்மொழியும் தாய்நாடும்

நான் பிறந்த நாடு இலங்கை. இலங்கை இயற்கை வளங்கள் பொருந்திய மிகவும் அழகானதொரு நாடு ஆகும். இது இந்து சமுத்திரத்தின் மத்தியில் உள்ளது. இலங்கையின் தலைநகரம் சிறிஜெயவர்த்தினபுரவாகும். இலங்கையிலிருந்து வாசனைத்திரவியங்களும், பிற உற்பத்திப்பொருட்களும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதுமட்டுமன்றி தேயிலை, தென்னை, கோப்பி என்பன இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

சைகையிலிருந்து மொழி தோற்றுவிக்கப்பட்ட போது பிறந்த மொழிக ளுள் தமிழ்மொழியும் ஒன்று. இந்துமா சமுத்திரத்தில் மூழ்கிமறைந்த குமரிக் கண்டத்தில் தமிழ் பேசப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. கி.மு. ஐம்பத்திரண் டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்மொழி தோற்றுவிக்கப்பட்டதாக வரலாறு கள் கூறுகின்றன. பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்புவரை தமிழ்மொழி பேச்சு மொழியாகவே இருந்தது. எழுத்துவடிவமில்லாது தனித்துப் பேசப்படும் மொழிக ள் அழிந்துபொய்விடுகின்றன. இலக்கணத்துடன் கூடிய எழுத்து வடிவிலான பேசப்படும் மொழிகளுக்கு அழிவே இல்லை.

தமிழ் முச்சங்ககாலத்தில் இலக்கணத்துடன் கூடிய எழுத்துருவிலான வளர்ச்சிபெற்று இன்றுவரை வாழ்ந்து வளர்ந்துவருகிறது. பாண்டிய மன்னர்கள் சங்கம்வைத்து தமிழ் வளர்த்தனர். முதல்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் ஆகியன முச்சங்கங்களாகும். முதற்சங்க, இடைச்சங்க நூல்கள் பெரும்பா லனவை கடல்அழிவுகளினால் அழிந்துபோயின. கடைச்சங்க நூல்கள் எஞ்சியுள் ளன. தமிழ் இயல், இசை, நாடகம் என மூன்றாக வகுக்கப்பட்டது.

www.padippakam.com



அகத்தியம் என்பது முற்சங்க நூல்களுள் ஒன்றாகும். தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியம் இடைச்சங்க நூல்களுல் ஒன்றாகும். கடைச்சங்க நூல்களை எட்டுத்தொகை பத்துப் பாட்டு என வகுத்துள்ளனர். பழந்தமிழரின் ஒழுக்கம் நிறைந்த காதல், வீரம் நிரம்பிய வாழ்வியலை படம்பிடித்துக் காட்டும் சிறப்பு நூல்கள் அகநானூறு, புறநானூறு ஆகும்.

அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல் இவை எட்டுத்தொகையாகும். திருமுருகாற்றுப்படை, பெருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைப்படுகடாம் ஆகிய பத்தும் பத்துப்பாட்டாகும்.

தமிழில் தோன்றிய முதல் காப்பியநூல் சிலப்பதிகாரம். இதனை இளங்கோ அடிகள் இயற்றினார். கடவுளையும், மன்னர்களையும் போற்றத் துதி பாடி இதிகாசங்களும், புராணங்களும் இயற்றப்பட்ட தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு சாதாரண குடும்பப்பெண்ணான கண்ணகியை கதாநாயகியாக்கி படைக்கப் பட்ட முதற்காப்பியம், பெண்ணை முதன்மையாக்கி படைக்கப்பட்ட முதல் இலக்கியம் சிலப்பதிகாரமாகும். சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி ஆகிய ஐந்தும் ஐம்பெரும் காப்பியங்களாகும்.

வீரமாமுனிவர், கால்டுவெல், ஆறுமுகநாவலர், இராமலிங்க சுவாமி கள், சுவாமிநாதஐயர் ஆகியோர் உரைநடைத் தமிழை வளர்த்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுமுகநாவலர் அவர் கள் ஓலைச்சுவடிகளாக இருந்த தமிழ் நூல்களை அச்சு இயந்திரம் மூலம் புதிப்பித்து வெளியிட்டதில் பெரும் பங்காற்றியவர். தமிழில் முதல் வெளிவந்த அகராதி சதுர அகராதியாகும். இதனை வீரமாமுனிவர் இயற்றினார்.

*செல்வன் பிரசன்னா செல்வராஜா*
Castrop-Rauxel

## நூல்களின் அறிமுகம்



01. ஆத்திசூடி தமிழ் மூதாட்டியான ஔவையார் அருளியது. இரண்டு மூன்று சொற்களால் ஆனது. 108நீதி மொழிகளைக் கொண்டது.

02. கொன்றை வேந்தன்- இந்நூல் ஔவையாரால் அருளப்பட்டது.4 சொற்களைக் கொண்ட 91 நீதி முறைகளை உணர்த்துவது.

03. வெற்றி வேட்கை- பாண்டி நாட்டரசன் அதிவீரராம பாண்டியனால் அருள்ப்பட்டது. 82 நீதி மொழிக்ளைக் கொண்டது.

04. உலக நீதி: உலக நாதர் எனும் முருகபக்தரால் எதிர்மறையாக கூறப்பெற்றது. 72 அறிவுரைகளைக் கூறுகிறது.

தி.ஸ்ரீராஜீவன் கிளி/இந்துக்கல்லூரி.


படிப்பகம்

www.padippakam.com



# வீண் பெருமை துன்பம் தரும்

ஒரு காட்டின் அருகில் கழுதை மேய்ந்து கொண்டிருந்தது. அருகில் இருந்த குடிசையில் பெரிய சேவல் ஒன்று இருந்தது. அதுவும் இரைதேடி அலைந்து கொண்டிருந்தது. திடீரென்று அங்கு ஒரு சிங்கம் வந்தது. சிங்கத்தைக் கண்ட சேவலும் கழுதையும் மிரண்டு பலமாகக் கூவின.



சிங்கத்திற்கு கழுதையின் குரல் புதிதல்ல. ஆனால் அச்சிங்கம் சேவலின் கூவல் கேட்டதில்லை. அதனால் அது பயந்து அங்கிருந்து திரும்பி ஓட ஆரம்பித்தது.

சிங்கம் ஓடுவதைக் கண்ட கழுதை தன் குரலைக் கேட்டுத்தான் சிங்கம் ஓடுவதாக நினைத்தது. தன்னைப்பற்றி பெருமையாக எண்ணிக் கொண்டது. தனக்கு அதிக பலம் இருப்பதாக நினைத்தது. உடனே சிங்கத்தைத் துரத்திக் கொண்டு ஓடிற்று.

படிப்பகம்


www.padippakam.com



சிறிது தூரம் சென்றதும் சிங்கம் திரும்பிப் பார்த்தது. கழுதை தூரத்தில் ஓடிவருவதைக் கண்டது. அருகில் சேவலைக் காணவில்லை. அதனால் அதன் பயம் நீங்கிற்று. திரும்ப ஓடி வந்து கழுதையின்மேல் பாய்ந்து அதை கொன்று தின்றது.

## 3. கர்வம் கொண்டவர் துன்பமே அடைவர்

காட்டில் ஒரு நாள் பெரிய பூனை ஒன்றும் நரியும் சந்தித்தன. அவை இரண்டும் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தன.



அப்பொழுது நரி பூனையிடம், "நண்பரே! தந்திரத்திற்குப் பேர் போனவன் நான் என்னை எவரும் ஏமாற்ற முடியாது நான் எவ்விதத் தீங்கிலிருந்தும் தந்திரமாய் தப்புவேன்." என்று இறுமாப்புடன் கூறியது.


அதற்கு பூனை, "நண்பரே! தங்களைப் போல் பல தந்திரங்கள் எனக்குத் தெரியாது. சில

படிப்பகம்

தந்திரங்கள் தான் தெரியும். தங்களைப் போல் சாமர்த்தியம் எனக்குக் கிடையாது" என்று அடக்கத்துடன் பதில் கூறியது.

பூனையைக் கண்டு நரி ஏளனமாய் "ஒன்றும் தெரியாத நீ எவ்வாறு ஆபத்திலிருந்து தப்புவாய்" என்று ஏளனம் செய்தது.

அச்சமயம் திடீரென்று அப்பக்கம் சில வேட்டை நாய்கள் வந்தன. உடனே பூனை ஒரு பெரிய மரத்தின் மேல் ஏறிக்கொண்டது. ஆனால் நரியினால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அங்கிருந்து ஓட ஆரம்பித்தது. ஆனால் வேட்டை



நாய்கள் வேகமாய் ஓடித் தாவி நரியைப் பிடித்துக் கொன்றன. பூனையோ தப்பிப் பிழைத்தது. கர்வம் கொண்டவர் துன்பமே அடைவர்.







## 7 எண் எழுத்து இகழேல்

எண் என்றால் கணிதம்— கணக்கு. எழுத்து என்றால் இலக்கணம். கணக்கும் இலக்கணமும் கற்பதற்குக் கடினமானவை. கடினம் என்று நினைத்து அவற்றைக் கற்காமலிருக்கக் கூடாது. வெறுத்து ஒதுக்கவும் கூடாது. ஏன் தெரியுமா? கணக்கும் இலக்கணமும் இரண்டு கண்களைப் போன்றவை. கண்கள் இல்லாவிடில் உன் வாழ்க்கை வளம் பெறாது. அதேபோல, கணக்கும் இலக்கணமும் இல்லாவிடில், உன் கல்வி அறிவும் வளம் பெறாது. அவற்றை நன்கு கற்றால்தான் உன் அறிவு பெருகும், திறமை பெருகும். பிரபல விஞ்ஞானிகளும் அறிவாளிகளும் உலகம் புகழும் செயல்களைச் செய்தது எதனால்? கணிதத்தையும் இலக்கணத்தையும் அவர்கள் கற்றதினால்தான். ஆகவே கண் எனத் தகும் எண்ணையும் எழுத்தையும் இகழாமல் நன்கு கற்றுக் கொள்.

## 8 ஏற்பது இகழ்ச்சி

நீதி நூல்களில் எளிமையானது ஆத்திசூடி. ஒரு வாக்கியத்தில் உலக மக்கள் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய நீதிகளை கூறும் நூல்.

ஆத்திசூடியில் வரும் இரண்டு நீதிகள் மேலோட்டமாகப் பார்த்தால் ஒன்றுக்கொன்று முரண்பட்டது போலத் தெரியும். அதை வைத்துக் கேலியாகக் கூடச் சிலர் பேசுவார்கள்.

ஏற்பது இகழ்ச்சி என்பது ஒரு நீதி வாக்கியம். பிறரிடம் எதையும் யாசிப்பது இழிவான செயல் என்று இதற்குப் பொருள். ஆனால், இதே ஔவைப்பாட்டி 'அறம் செய விரும்பு' என்கிறார். ஏழை எளியவர்களுக்குத் தருமம் செய் என்கிறார். அப்படியானால் ஏழை எளியவர், ஏற்பது, இகழ்ச்சியான செயலா? இப்படி முரணான நீதியைத் தமிழ்ப் பாட்டி போதிப்பாரா? மாட்டார். அடுத்த ஆத்திசூடியைப் பாருங்கள்.

www.padippakam.com



## எழுத்துகளின் புதுமை

மயக்கும் எழுத்து - பூ
பறக்கும் - ஈ
பல் இடிக்கும் எழுத்து - ஹி
அழைக்கும் - வா
திருப்பும் எழுத்து - போ
அலறும் எழுத்தும் - ஆ
அதிகார எழுத்து - ம்
குறிக்கும் - நீ
வெறுக்கும் - சீ
உமிழும் எழுத்து - தூ

## நீதிவெண்பாவில் இருந்து

### அறிவுடைய பகைவன் நல்லவன்

*அறிவன் பகையேனும் அன்பு சேர் நட்பாம்*
*சிறுவன் பகையாம் தெரிந்த அறிவுடைய*
*வென்றிவனரசன் தான் வேதியனைக் காத்தான் முன்*
*கொன்றதொரு வேந்தைக் குரங்கு.*

அதாவது அரசன் ஒருவன் தான் வளர்த்த குரங்கின் கையில் வாளைக் கொடுத்து யாரையும் உள்ளே விடாமல், காவலிருக்கு மாறு சொல்லி உறங்கினான். அவன் உறங்கிக் கொண்டிருந்தபோது, அவன் மீது ஈயொன்று பறந்து வந்து உட்கார்ந்தது. அது கண்ட அறிவற்ற குரங்கு ஈயை வெட்டு வதாக எண்ணி அரசனையே வெட்டிக் கொன்று விட்டது.

## அறங்கள் பத்து

மெய்ம்மை பொறையுடைமை மேன்மை தவம் அடக்கம்,
செம்மையொன்று இன்மை துறவுடைமை நன்மை, திறம்பா
விரதம் தரித்தலோடு இன்ன அறம்பத்தும் ஆன்ற குணம்.

1. மெய்ம்மை - உண்மை 2. பொறை உடைமை - பொறுமை 3. மேன்மை - சிறப்பு 4. தவம் - முயற்சி 5. அடக்கம் - பணிவு 6. செம்மை - மனக்கோட்டம் 7. இன்மை - இல்லாமை 8. துறவுடைமை - பற்றுக்களைத் துறத்தல் 9. நம்மை - நன்மை புரிதல் 10. திறம்பாவிரதம் - மாறுபடாத விரதம் அனுஷ்டித்தல் ஆகியன.

# உங்களுக்குத் தெரியுமா?



01. இந்தியாவின் வாயில்-பம்பாய்
02. இருண்ட கண்டம்-ஆபிரிக்கா
03. புனித நாடு- பாலஸ்தீனம்
04. மத்தியதரைக் கடலின் திறவுகோல்- ஜிப்றோல்ரர்
05. ஏழுமலை நகர்- உரோம்
07. ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம்- சுவிற்சர்லாந்து
08. பொற்கோவில் நகரம்- அமிர்தசரஸ்
09. ஆயிரம்வாவி நாடு-பின்லாந்து
10 அட்றியாற்றிக் இளவரசி-வெனிஸ்
11 வங்காளத்தின் துயரம்-தாமோதரர் நதி
12. ஐரோப்பாவின் நோயாளி-துருக்கி
13. அதிகாலை அமைதி நாடு- கொரியா
14. நள்ளிரவுச் சூரிய நாடு-நோர்வே
15. நைலின் கொடை-எகிப்து
16. மஞ்சள் ஆறு- குவாங்கோ நதி
17 கங்காரு நாடு -அவுஸ்ரேலியா
18. உலகின் கூரை -திபெத்

வ.விஜயகலா
கிளி/பிரமந்தனாறு ம.வி

---

# இன்ரபோல்



சர்வதேச பொலிஸ் அமைப்பான இன்ரபோல் அமைப்பானது 1923 ல் International police commsion எனும் பெயரில் உருவாக்கப்பட்டது. 1ம், 2ம் உலகப் போர்களின் போது அதிகளவில் செயற்படாது விட்டாலும் பின்னர் தனது செயற்பாட்டை அதிகரித்தது. 1956 ல் இன்ரநேசனல் பொலிஸ் ஆக்கனேசன் என பெயர் மாற்றப்பட்டது. இதில் 135 ற்கு மேற்பட்ட உலக நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இதிலுள்ள உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் தனது நாட்டில் தேசிய அலுவலகம் ஒன்றை (National central Beiredu) வைத்து உயர் காவலதிகாரிகளை உருவாக்க வேண்டும். இது இன்ரபோலுடன் நெருக்கமான தொடர்புகள் வைத்து இருக்க வேண்டும் என்பது பொதுவான நடைமுறை. இதன் தலைமையகம் பிரான்சின் பாரிசிற்கு அண்மையில் செயின் கிளவுட் எனுமிடத்தில் 6மாடிகளைக்கொண்டுள்ளது. இது $7^1/_2$ லட்சத்திற்கு மேற்பட்ட குற்றவாளிகளது புகைப்படம், கைரேகை, அடையாளம் போன்ற இதர தகவல்களைச் சேகரித்து வைத்துள்ளது.

V.வாசுகி
மல்லாவி

www.padippakam.com



## 100 சொற்கள்

ஜேர்மனி Göttingen நகரைச் சேர்ந்த செல்வி. பிரியந்தா யோகீஸ்வரனும் Soest நகரைச் சேர்ந்த செல்வன் சந்துரு அற்புதராசாவும் நூறு சொற்களை எழுதி அனுப்பியுள்ளார். இவருக்கும் "மண்" சஞ்சிகை பாராட்டையும், நன்றியை யும் தெரிவிக்கின்றது.

மாணவமணிகளே!.......
நீங்களும் நூறு சொற்களை கண்டுபிடித்து எழுதி 20.02.2003க்கு முன்னர் அனுப்பிவையுங்கள்......

## "ப" வரிச்சொற்கள்

001) பல
002) பனி
003) பசை
004) பசி
005) பலி
006) படை
007) பகை
008) பனை
009) பந்து
010) பன்றி
011) பகிடி
012) பகல்
013) பச்சை
014) பறவை
015) பங்கு
016) பசளை
017) பசுமை
018) பயறு
019) பயன்
020) பண்பு
021) பதம்
022) பட்டு
023) பழம்
024) பயிர்
025) பரிசு
026) பரிவு
027) பலன்
028) பற்று
029) படம்
030) பழைய
031) பழுது
032) பலகை
033) பரன்
034) பவனி
035) பலம்
036) பக்கம்
037) பச்சடி
038) பகட்டு
039) பசுமை
040) பங்காளி
041) படிவம்
042) பட்டம்
043) படைவீடு
044) பணயம்
045) படையல்
046) பண்டம்
047) பதநீர்
048) பண்ணை
049) பதுங்கி
050) பயணம்
051) பருப்பு
052) பந்தம்
053) பதுமை
054) பலகணி
055) பருமன்
056) பளிங்கு
057) பள்ளம்
058) பறைதல்
059) பறை
060) பரிசம்
061) பருவம்
062) படித்தல்
063) பறத்தல்
064) படுத்தல்
065) பருகுதல்
066) பகலவன்
067) படைத்தல்
068) பட்டியல்
069) பண்டிகை
070) பந்தயம்
071) பயிலுதல்
072) பத்திரம்
073) பத்தியம்
074) பறிமுதல்
075) பச்சையரிசி
076) பறட்டை
077) பழித்தல்
078) பவ்வியம்
079) பல்லக்கு
080) பரிமளம்
081) பலகாரம்
082) பழமொழி
083) பரிணாமம்
084) பல்லாண்டு
085) பட்டாளம்
086) பகிரங்கம்
087) பனிக்கட்டி
088) பவித்திரம்
089) பரிகாரம்
090) பரிசுத்தம்
091) பரிச்சயம்
092) பரிவாரம்
093) பரிதாபம்
094) பட்டிமன்றம்
095) பலாத்காரம்
096) பராமரித்தல்
097) பள்ளிக்கூடம்
098) பந்தம்
099) பதில்
100) பக்தி

செல்வி பிரியந்தா - யோகீஸ்வரன் - Göttingen

www.padippakam.com



## "தி" வரிச்சொற்கள்

001) திருச்சிற்றம்பலம்
002) திங்கள்
003) திருநீறு
004) திருமதி
005) திருவள்ளுவர்
006) திரை
007) திட்டம்
008) திருமணம்
009) தில்
010) திருக்குறள்
011) திரைப்படம்
012) தில்லானா
013) திசை
014) திறப்பு
015) திருச்செல்வம்
016) திருமகள்
017) திருமலை
018) திருகணை
019) திருஞானசம்பந்தர்
020) திருநாவுக்கரசர்
021) திக்கம்
022) திருட்டு
023) திருப்புகழ்
024) திருமந்திரம்
025) திருவெண்பா
026) திருடன்
027) திருவருள்
028) திருப்புராணம்
029) திருத்தணி
030) தினம்
031) திக்கு
032) தினை
033) திரும்பு
034) தின்னும்
035) திண்ணம்
036) திருப்பதி
037) திருவிழா
038) திருப்பு
039) திருச்சபை
040) திண்டுக்கல்
041) திரைமாலை
042) திருநெல்வேலி
043) திருப்பம்
044) திருவாரூர்
045) திருச்சி
046) திறமை
047) தினங்கள்
048) திருத்தணிகை
049) தித்திக்கும்
050) திருத்தலம்
051) திட்டு
052) திவாகரன்
053) தினத்தந்தி
054) தினத்நாள்
055) திடம்
056) திடல்
057) திரைவிருந்து
058) திறப்புவிழா
059) திண்மம்
060) திருகோணம்
061) திருமாங்கலியம்
062) திருவாத்திரை
063) திரு
064) திருவாரம்
065) திருப்பரம்குன்றம்
066) திருப்பம்
067) திட்டி
068) திருவாளர்
069) திகதி
070) திரைக்கதை
071) திவசம்
072) திரைப்படவிழா
073) திருத்தம்
074) திராட்சை
075) திருக்கரம்
076) திவாசரி
077) திரவம்
078) திகில்
079) திகைப்பு
080) தியானம்
081) திரைக்களம்
082) திருப்பணி
083) திருத்தொண்டு
084) திரட்டு
085) திறந்து
086) திருமுகன்
087) திருடாதே
088) தியாகி
089) திலீபன்
090) திருநாள்
091) திருப்தி
092) திருடி
093) திருகுதல்
094) திகைப்பு
095) திரி
096) திரேசா
097) தில்லை
098) திணித்தல்
099) திரும்பிப்பார்
100) திரவியம்

*செல்வன் சந்துரு- அற்புதராசா*-Soest

எப்பொழுதும் ஏதோ ஓர் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதே இன்பம் தருவதாகும். இன்பம் என்பது தேங்கிக் கிடக்கும் குட்டை அல்ல ஓடிக்கொண்டிருக்கும் நீருற்று.

ஜோன் மேசன்குட்

வாழ்கை என்பது ஒரு போராட்டம், மனிதன் போராடிக்கொண்டே இருக்க வேண்டும். நான் போர் புரிந்தே வாழ்வேன், போர் புரிந்தே மடிவேன்.

விவேகானந்தர்

www.padippakam.com



# வினாவிடைப்போட்டி முடிவு – 85
(கார்த்திகை + மார்கழி 2002)

1. ஈழவிடுதலைப்போராட்டத்தில் உண்ணாநோம்பு இருந்து உயிர்நீத்த தியாகிகள்:
   1. தியாகி திலீபன் – யாழ்மாவட்டம்
   2. தியாகதீபம் அன்னை பூபதி – மட்டக்களப்பு மாவட்டம்

2. ஜேர்மனியின் அதிபரின் (Bundeskanzler) பெயர் Gerhard Schröder.
ஜேர்மனியின் தலைவரின் (Bundespräsident) பெயர் Johannes Rau.

3. பாரசூட் (Parachute), இதனை 1776ம் ஆண்டு A.J. கனேரின் என்பவர் கண்டுபிடித்தார். இவர் பிரான்ஸ் நாட்டவர்.

4. பொருத்தமான ஒத்தகருத்துச்சொற்களின் கீழ்க்கீறிடுக.
   1. தேசம் – உலகம்
   2. பெற்றோர் – தாய்தந்தையர்
   3. மன்னிப்பு – பொறுத்துக்கொள்ளல்
   4. குணம் – பண்பு
   5. பரிசு – அன்பளிப்பு

5. „தாய்நாடு“ என்னும் தலைப்பில் 5 வசனங்களை எழுதுக.
   1. எமது தாய்நாடு இலங்கையாகும்
   2. எமது தாய்நாடு கடலால் சூழப்பட்ட தீவாகும்.
   3. எமது தாய்நாட்டிற்கு ஈழம், இலங்காபுரி, ஸ்ரீலங்கா எனப் பல பெயர்கள் உண்டு.
   4. எமது தாய்நாட்டில் சிங்களவர். தமிழர், இஸ்லாமியர், பறங்கியர், வேடர் இனத்தவர்கள் வாழ்கிறார்கள்.
   5. எமது தாய்நாட்டில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் பேசும் மக்கள் வசிக்கிறார்கள்.

*விபரம் தெரியா வீணர்களிடம் வீண் விவாதம் செய்து உங்கள் காலத்தை விரயம் செய்யாதீர்கள்.

*வாழ்க்கையை நேசிப்பவர்களாக இருந்தால் நேரத்தை வீணாக்காதீர்கள். ஏனெனில் வாழ்க்கை நேரத்தால் ஆனது.

படிப்பகம்

www.padippakam.com



# வினாவிடைப்போட்டி — 86
## (தை + மாசி 2002)

1. 2002 ஆண்டின் சர்வதேச சமாதானத்துக்கான நோபல்பரிசு பெற்றவர் யார்? இவர் எந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்தவர்?

2. இலங்கை அரசுக்கும் தமிழீழவிடுதலைப்புலிகளுக்குமிடையே ஐரோப்பிய நாடொன்றில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அந்த நாட்டின் பெயர் என்ன? அதன் தலைநகரத்தின் பெயர் என்ன?

3. இலங்கையின் தற்போதைய ஜனாதிபதியின் பெயர் என்ன?
இலங்கையின் தற்போதைய பிரதமமந்திரியின் பெயர் என்ன?

4. பாரமானி (Barometer) இக்கருவியைக் கண்டுபிடித்தவர் யார்? எந்த நாட்டவர்? எத்தனையாம் ஆண்டு?

5.

| <u>சேர்த்தெழுதுக:</u> | <u>பிரித்தெழுதுக:</u> |
|---|---|
| குரல் + இனிமை = | நூற்றாண்டு = |
| மரம் + செடி = | அறிவுடைமை = |
| கல் + உடைத்தான் = | தேங்காய் = |
| பலா + பழம் = | பூஞ்சோலை = |
| மீன் + கூடை = | தமிழ்ப்பாடம் = |

6. „தமிழ்மொழி" என்னும் தலைப்பில் 5 வசனங்கள் எழுதுக...

- சரியான விடைகளை எழுதி „மண்" சஞ்சிகையின் முகவரிக்கு 20.02.2003க்கு முன்னர் அனுப்பிவைக்கவும். அதிஸ்டசாலிக்குப் பரிசு வழங்கப்படும்.

*ஏதோ ஒரு துறையிலாவது உனக்குள் ஒளித்திருக்கும் திறமைக்கு ஊக்கம் கொடுத்து, அதை வளர்த்துக்கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டு.

www.padippakam.com



## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி – 17

(தை – மாசி 2003)

| | | | |
|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 |
| 05 | 06 | 07 | 08 |
| 09 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ.–வ.:

01-04: மாணவர்கள் இங்கு சென்றும் தமது கல்விக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

13-14: உடலுறுப்பு ஒன்று.

வ.–இ.:

08-05: இதுவும் ஒரு நோய் எனலாம்.

கீ.–மே.:

13-05: கல்வியை இதற்கும் ஒப்பிடுவார்கள்.

04-16: நாம் வாழும் இடம். (கு)

மே.–கீ.:

01-05: புத்தகம் என்றும் கூறுவார்கள், பட்டம் விடுவதற்கும் பயன்படுத்துவார்கள்.

03-15: தைப்பொங்கல் திருநாளில் தம்நாட்டில் இதையும் படையல் செய்து உண்பார்கள்.

10-14: ஜேர்மனியில் 13 வருடங்களாக தொடர்ந்து வெளிவரும் சஞ்சிகை.

- முடிவுதிகதி 20.02.2003 -

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு – 16

(கார்த்திகை – மார்கழி 2002)

| | | | |
|---|---|---|---|
| சி | று | வ | ர் |
| ன் | ய | ள | ழீ |
| க | ப | னி | க |
| ம் | ல் | அ | மை |

# சிறுவர்போட்டி முடிவுகள்

(கார்த்திகை — மார்கழி 2002)

பங்குகொண்டவர்களும் பரிசு பெறுபவர்களும்:

| | | | கண்டுபிடியுங்கள் | வினாவிடைப்போட்டி | குறுக்கெழுத்துப்போட்டி |
|---|---|---|---|---|---|
| செல்வி: | பானுரதி புவனேந்திரன் | - Duisburg | ✓ | | ✓ |
| செல்வி: | கீர்த்தனா ஞானக்கிருஷ்னன் | - Sinsheim | ✓ | | |
| செல்வி: | பிரியந்தா. யோகீஸ்வரன் | - Göttingen | ✓ | ✓ | ✓ |
| செல்வி: | மிலிஜானா குயின்ரன் | - Arnsberg | ✓ | | |
| செல்வி: | மிதுனா நாகேஸ்வரன் | - Eslohe | ✓ | | |
| செல்வி: | றொமினா தவராஜ் | - Wadgassen | ✓ | | ✓ |
| செல்வி: | சுகிதா தவராஜ் | - Wadgassen | ✓ | | ✓ |
| செல்வி: | ஆன்வினோலினி நடேசன் | - Havixbeck | ✓ | ✓ | ✓ |
| செல்வி: | றூபிகா தவராசன் | - Menden | ✓ | | |
| செல்வி: | ரஜனி கமலநாதன் | - Solingen | ✓ | ✓ | |
| செல்வி: | தர்சினி கமலநாதன் | - Solingen | ✓ | ✓ | |
| செல்வி: | சுகானா புத்திசிகாமணி | - Sundern | ✓ | | ✓ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செல்வன்: | பானுஸ்கந்தா புவனேந்திரன் | - Duisburg | ✓ | | |
| செல்வன்: | வியாசன் செல்வராசா | - Castrop-Rauxel | ✓ | ✓ | ✓ |
| செல்வன்: | ஜக்ஸன் ஜீவரட்ணம் | - Böblingen | ✓ | | ✓ |
| செல்வன்: | றோனால்டோ குயின்ரன் | - Arnsberg | ✓ | | |
| செல்வன்: | விதுசன் நாகேஸ்வரன் | - Eslohe | ✓ | | |
| செல்வன்: | தினேஸ் சிறிஸ்கந்தராசா | - Duisburg | ✓ | | ✓ |
| செல்வன்: | றுசான் தவராசா | - Menden | ✓ | | |
| செல்வன்: | சுரதா புத்திசிகாமணி | - Sundern | ✓ | | |
| செல்வன்: | சுந்துரு அற்புதராசா | - Soest | ✓ | | ✓ |
| செல்வன்: | இலிங்காதரன் கமலநாதன் | - Solingen | ✓ | ✓ | |
| செல்வன்: | பார்த்தீபன் பாலசுந்திரன் | - Differten | | ✓ | ✓ |

~ **கண்டுபிடியுங்கள் போட்டியில் பரிசு பெறுபவர்:**
**செல்வி. மிலிஜானா. குயின்ரன் ~ Arnsberg**

~ **வினாவிடைப்போட்டியில் பரிசு பெறுபவர்:**
**செல்வன். வியாசன். செல்வராசா ~ Castrop Rauxel**

~ **சிறுவர்குறுக்கெழுத்துப்போட்டியில் பரிசு பெறுபவர்:**
**செல்வன். ஜக்ஸன். ஜீவரட்ணம் ~ Böblingen**

**இம்மாதம் சிறுவர்வட்டப்பகுதியில் பரிசு பெறுபவர்**
செல்வன் சுந்துரு. அற்புதராசர் - Soest

www.padippakam.com



## சாதுரியத் திறன் கேள்வி

1. சாக்லட்டின் மூலப்பொருளான கொக்கோவை அதிகமாக விளைவிக்கும் நாடு எது?
2. உலகிலேயே மிகப்பெரிய ஏரி எது? எங்கு உள்ளது?
3. வெள்ளை யானைகளின் நிலம் என்று அழைக்கப்படும் நாடு எது?
4. உலகின் மிகச்சிறிய பறவை எது?
5. யப்பானின் பாராளுமன்றத்தின் பெயர் என்ன?
6. லைக்கா என்ற நாயின் சிறப்பு என்ன?
7. விட்டமின் சி குறைபாட்டால் ஏற்படும் நோய் எது?
8. சீனப்பெருஞ் சுவரை கட்டியவர் யார்?
9. யூதர்களின் மதநூலின் பெயர் என்ன?
10. அதிகவெப்பமுள்ள இரண்டாவது கிரகம் எது?

பக்கங்களைப் புரட்டுங்கள் விடைகள் கிடைக்கும்.

## ஷேக்ஸ்பியர் சிந்தனைகள்

1. தன் குற்றங்கள் மன்னிக்கப்படவேண்டும் என்று விரும்புபவன், பிறரைக் கருணையுடன் விடுதலை செய்ய வேண்டும்.
2. பித்தன், காதலன், கவிஞன் இம்மூவரும் கற்பனை ஆற்றல் மிக்கவர்கள்.
3. சினம் ஓர் அடங்காக்குதிரை, அதனை அதன் போக்கில் விட்டால் அதனை அடக்குவது அரிது.
4. வறுமைக்குத் திறவுகோல் சோம்பல்.
5. உன் ஞானமே உனக்கு நல்ல வழிகாட்டி.
6. உன் உள்ளத்தைத் தட்டிப்பார், உள்ளத்தைக் கேள் உனக்கென்ன தெரியும்.
7. தன் மயக்கத்தால் தலை சுற்றுகின்றவன், உலகமே சுழல்கிறது என்றுதான் எண்ணுகின்றான்.

MRS. Ranjana Thavaraj
Wadgassen / Saar

www.padippakam.com





# ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை

(இலங்கைப் பாடத்திட்டத்திற்கு அமைய)

Tamilischer Bildungsverein Deutschland e.V.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

## பொதுப் பரீட்சை - 2002 / 2003
## தமிழ்மொழி

ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை ஆண்டுதோறும் ஐரோப்பா தழுவிய முறையில் நடாத்தும் தமிழ்மொழிப் பொதுப் பரீட்சை, எதிர்வரும் 2003ஆம் ஆண்டு தை மாதம் 18ஆம் திகதி நடைபெறவுள்ளது. சகல மாணவர்களும் இப்பரீட்சையில் தோற்றித் தங்கள் திறமைகளை வெளிப்படுத்திச் சான்றிதழ்களையும், பரிசுகளையும் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். பாடசாலைப் பரீட்சார்த்திகளாயின், ஆசிரியரின் உதவியுடன் பாடசாலை மூலமும்; தனிப்பட்ட பரீட்சார்த்திகளாயின், பெற்றோரின் உதவியுடன் தனிப்பட்ட முறையிலும் விண்ணப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

பரீட்சைக்கான செலவுக் கட்டணமாக பாடசாலைப் பரீட்சார்த்திகள் 7 ஒயிறோவும், (7,- €) தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 10 ஒயிறோவும் (10,- €) அனுப்புதல் வேண்டும்.பரீட்சைகள் ஆண்டு 2 தொடக்கம் ஆண்டு 11 வரையான வகுப்புகளுக்கு நடைபெறும். விண்ணப்பங்கள் 2002.12.10ந் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாகக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.;

முகவரி:-

Tamilischer Bildungsverein Deutschland e.V.
Postfach 1646
59159 Kamen.
Deutschland.

பணம் அனுப்ப வேண்டிய வங்கி விபரம்:-

Tamilischer Bildugsverein Deutschland e.V.
Konto Nr: 5053335 Bankleitzahl: 443 513 80
Städtische Sparkasse Kamen. Deutschlan.

இங்ஙனம்
ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை

www.padippakam.com





Ragulan Srijeevaghan
Schiedsrichterwart
Germaniastraße 34
59174 Kamen
Tel. 0 23 07 / 29 93 84
Handy 0162 - 6179381

## Die Schiedsrichter im TVG Kaiserau !



## தமிழ்மாணவனின் திறமை

ஜேர்மனி - Kamen நகரில் வசிக்கும் செல்வன் ராகுலன் - சிறீஜீவகன் கைப்பந்தாட்டத்தில் (Handball) சாதனை படைத்துவருகிறார். Kamen Kaiserau TVG விளையாட்டுக்கழகத்தில் கடந்த 5 வருடமாக விளையாடிவரும் இவர். கடந்த 2 வருடங்களாக இக்கழகத்தின் விளையாட்டுப்பயிற்சியாளராகவும், நடுவராகவும் (Schiedsrichter) கடமைபுரிந்து வருகின்றார். அம்மாணவன் தனது கழக நடுவர்களோடு எடுத்துக் கொண்ட படத்தை இங்கே காணலாம் அத்தோடு ஜேர்மனியில் பல பாகங்களுக்கும் சென்று விளையாடி வருவதுடன், நடுவராகவும் கடமைபுரிந்துவருவது குறிப்பிடத்தக்க விடையமாகும். புலம் பெயர் நாட்டில் இப்படிப்பட்ட தமிழ் மாணவர்களை ஊக்கு வித்து புகழடையச் செல்வதில் பெற்றோரின் பங்கும் முக்கிய இடம் வகிக்கிறது. இம்மாணவனின் பெற்றோருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும். அம்மாணவனின் விளையாட்டுத்துறை விருத்தியடைந்து புகழ்பரப்ப மணி சஞ்சிகை வாழ்த்துகின்றது.

12ம் வகுப்பில் ஜேர்மன் கல்லூரியில் கல்விபயிலும் இம்மாணவன் 11 வகுப்பில் தமிழ் கற்று வருகிறார். அத்துடன் தமிழ்க் கல்வித்திறன் போட்டிகளிலும் பல பரிசில்களைப் பெற்றுவருவதுடன் மணி சஞ்சிகையில் சிறுவர் போட்டிகளிலும் பலதடவை பங்கு கொண்டு பல பரிசில் களையும் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே அம்மாணவனைப் போல் ஜேர்மனியில் சாதனைபடைத்துவரும் மாணவ்மணிகளே... உங்கள் திறமைகளையும் எமக்கு அறியத்தாருங்கள், கல்வி, கலை விளையாட்டு எதுவாக இருப்பினும் எமக்கு அனுப்பிவையுங்கள். மணி சஞ்சிகையில் பிரசுரிக்கும் போது ஏனைய மாணவமணிகளுக்கும் உற்சாகம் ஏற்பட்டு வளர்ந்து முன்னேற வாய்ப்பளிக்குமல்லவா...ஆகவே உங்கள் திறமைகளை எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

- ஆசிரியர் -

படிப்பகம்

www.padippakam.com



# "தாய்க்கு ஒரு மடல்"

"பெறும் அவற்றுள் யாம் அறிவது இல்லை அறிவு அறிந்த மக்கள் பேறு அல்ல பிற" இதன் விளக்கம் இல்லறத்தை ஒரு தவம் போல் இயற்றி, அறிவுள்ள மக்களைப் பெறுவதே, பெறற்கரிய பேறாகும்.

ஒரு குழந்தை நல்லவன் ஆவதும் கெட்டவனாவதும் அன்னை வளர்ப்பதில்தான் என்று ஒரு கவிஞன் பாடி உள்ளார். ஒரு குடும்பம் பல்கலைக்கழகமாக மாற ஒரு தாயின் பங்கு அளப்பரியது.

பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பினால் போதும், அவன் படித்து விடுவான் என்று எண்ணி விடக்கூடாது. ஒரு திறமையுள்ள ஆசிரியர் எப்படி போதித்தாலும் அந்த மாணவன் நன்றாக படிப்பது அவனின் பெற்றோர் கையில்தான் உள்ளது. பள்ளியில் நல்ல முறையில் பயிலும் மாணவன் வீட்டில் சீடி, வீடியோ என்று பார்க்க ஆரம்பித்து விட்டால், பிறகு யாரை நாம் குறை கூறுவது? ஒரு "ஜெமினி"யையோ ஒரு "ஶ்ரீ"யைபோதான் பார்க்க முடியும்!

ஒரு தாயாக இருக்கும் நாம் எப்படி நம் பிள்ளைகளை நல் வழியில் இட்டுச் செல்ல முடியும்? முதலில் "சினிமா" பார்ப்பதை நிறுத்துவோம். அக்கம் பக்கத்து வீட்டிற்குச் சென்று கதை அடிப்பதை நிறுத்துவோம்.

"சினிமா" நம் சமுதாயத்திற்கு ஒரு சீர்கேடான கருவியாகும். இந்த சினிமாதான் நம் இளம் சமுதாயத்தில் வன்முறையையும், காதலையையும் ஏற்படுத்தி தரும் சாதனம். இது நம் வீட்டிற்குத் தேவையா? தாய் வீடு வீடாக சென்று கதை அடிக்கும்போது பிள்ளைகளும் நண்பர்கள் என்று வீடு வீடாக செல்ல நாமே வழி வகுத்து கொடுக்கலாமா?

"தாய் எவ்வழியோ பிள்ளைகள் அவ்வழி" என்பதை தாயாக இருக்கும் நாம் மறந்து விடக் கூடாது.

ஆக கடைசியாக ஒரு குழந்தை இந்த சமுதாயத்தில் நல்ல குடிமகனாக வாழ ஒரு தாய் பல தியாகங்கள் செய்ய வேண்டும்: பிள்ளைகளுக்காக பல மணி நேரங்கள் செலவிட வேண்டும். அப்பொழுதுதான் "சான்றோர் பாராட்டும் அறிஞனாக, பண்பாளனாகத் தம் பிள்ளைகளை உருவாக்குவதே ஒரு தாய் தான் வாழும் சமுதாயத்திற்குச் செய்யும் நன்மையாகும் என்பது உண்மையாகும்.

கு. அமுதா உத்திராபாதி, ஜவாங்.

## இல்வாழ்க்கை

ஒரு பெண்ணினால் எனக்கு என்ன நேர்ந் தாலும் சரி, மேலும் மேலும் அவள் எதைச் செய்தாலும் சரி, நான் என்னால் முடிந்தவற்றை எல்லாம் செய்து அவளுக்கு மகிழ்ச்சியையும், திருப்தி யையும் உண்டாக்குவேன். இதை நான் செய்யத் தவறினால், இதை விட எனக்குத் துன்பத்தைத் தரக்கூடிய செயல் வேறு ஒன்றும் இருக்க முடியாது.

-ஆப்ரகாம் லிங்கன்.

ஒவ்வொரு மனிதனுக்கும் தன் கருத்தைக் கூற உரிமை இருக்கிறது. ஆனால் எந்த மனிதனுக்கும் தன் கருத்து பிறரை ஆட்சி புரிய வேண்டும் என்று எதிர்பார்க்க உரிமை கிடையாது

- தாமஸ் பெயன் (1737 - 1809)

www.padippakam.com



# குறளும் பொருளும்

அங்கவியல் அதிகாரம் 77

## 14. படைமாட்சி

உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை. 761

உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத்
தொல்படைக் கல்லா லரிது. 762

ஒலித்தக்கா லென்னா முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும். 763

அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை. 764

கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
மாற்ற லதுவே படை. 765

மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மெனநான்கே யேமம் படைக்கு. 766

தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து. 767

அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை
படைத்தகையாற் பாடு பெறும். 768

சிறுமையுஞ் செல்லாத் துனியும் வறுமையு
மில்லாயின் வெல்லும் படை. 769

நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தானை
தலைமக்க ளில்வழி யில். 770

www.padippakam.com


# குறளும் பொருளும்

திருக்குறள் இனிய உரை பொருள்

## 14. படையினது நன்மை

நால்வகைப் படையுடன் போருக்கு அஞ்சாமல் பகையை வெல்லும் படையே அரசனுக்குச் சிறந்த செல்வமாகும். 761

போரில் சிறுகுலைவு வந்து வலிமை குறைந்தாலும் அவ்விடையூறுக்கு அஞ்சாமல் நின்று தாங்கும் வலிமை மூலப்படைக்கன்றி முடியாது. 762

எலிக்கூட்டம் கடல்போலக் கூடி ஒலித்தால் நாகம் மூச்சு விட்டாலே அவை அழியும். அது போலப் பலமற்றவர் பலர் திரண்டு ஒரு வீரனை எதிர்த்தால், அப்பலரும் கெடுவர். 763

போரில் அழியாமல், பகைவரின் வஞ்சனைக்கு அகப்படாமல், தொன்றுதொட்டு வந்த அஞ்சாமை உடையதே படையாகும். 764

எமனே சினந்து எதிர்த்து வந்தாலும் ஒன்று திரண்டு எதிர்த்து நிற்கும் ஆற்றலுடையதே படை. 765

வீரம், மானம், சிறந்த நடை, தலைவனின் நம்பிக்கை ஆகிய நான்கு பண்புகளுமே படைக்குச் சிறப்பாகும். 766

மாற்றார் வகுத்து வரும் போர்ப்படையின் ஆற்றலைத் தாங்கும் நிலை அறிந்து செல்வதே கொடிப் படைக்கு வலிமை ஆகும். 767

போர் வீரமும், எதிர்ப்பைத் தாங்கும் ஆற்றலும் இல்லை என்றாலும், படையின் அணிவகுப்பினால் பெருமை உண்டாகும். 768

தன் செல்வ அளவு சிறிதாகத் தேய்தலும், தலைவரிடம் நீங்காத வெறுப்பும், வறுமையும் இல்லாது இருக்கும் படையே வெல்லும் படையாகும். 769

நிலையான போர் வீரர்கள் பலர் இருந்தாலும் படைத்தலைவன் இல்லாத படை நிலைத்து நிற்காது. 770

படிப்பகம்

www.padippakam.com



# கலீல் ஜிப்ரானின் சிந்தனை முத்துக்கள்.

## உறுத்தல்

சூரியனைப் பார்த்து நிலம் கத்தியது:-

'நீ செய்வது சரிதானா?'

சூரியன் அதிர்ச்சியுற்றான்:

இதுவரை அவனை யாருமே இப்படிக் கேட்டதில்லை.

'என்ன சொல்கிறாய்?'

'இருளை நீ மறைக்கலாம்... அழகான விண்மீன்களை எப்படி நீ மறைக்கலாம்?'

சூரியன் திடுக்கிட்டான்.

'ஒவ்வொரு ஒளியிலும் ஒவ்வொரு அழகு இருக்கிறது - உனக்குத் தெரியுமா?'

ஞாயிறு முகிலுள் ஒளிந்தான்.

நிலத்தின் குரல் அவன் காதில் ஓங்கி ஒலித்தது...

'வெளிச்சத்தை
மறைக்கலாமா
வெளிச்சம்'

## குறை

கடை.

தராசில் பொருட்களை ஏற்றும் போதெல்லாம் தட்டு ஒரு பக்கம் சாய்ந்தது. படிக்கல் இருக்கும் தட்டு மேலேயே நின்றது.

உருளைக் கிழங்குகளும் வெங்காயங்களும் இதை உற்றுக் கவனித்தன.


'ஓ! இது கொடுமை!' என்று கத்தியது உருளைக்கிழங்கு.

வெளியே தலை நீட்டிக்கொண்டிருந்த வெங்காயமும் 'இது பச்சைத் திருட்டு' என்று வயிற்றெரிச்சலைக் கொட்டியது.

இரண்டும் குரலெழுப்பின:-

'தராசை
முதலில்
எடைபோடு!'

www.padippakam.com

# அத்திவாரக் கற்கள்

வீடு கட்டி முடிந்தாயிற்று

அதன் நேர்த்தியான வடிவமைப்பு, அலங்காரவளைவுகள், சிற்பவேலைகள் பொருத்தமான இடங்களுக்கேற்றாற் போல் பூசப்பட்ட வர்ணங்கள் என, எல்லாமே சேர்ந்து மிகவும் லாவண்யம் மிக்க பேரழகான வீடாய் மிளிர்ந்தது அந்த வீடு.

அவ் வீட்டின் அழகில் மயங்காதவரும், கதைக்காதவர்களும் எவருமிலர்.

" மழையில் நனைந்து அசிங்கப் படாமலும், வெயிலில் காய்ந்து வெளுறாமலும் உன்னழகை நான் தானே பாதுகாத்து வருகின்றேன். மழைக்காலத்தில் என்னில் சிறு வெடிப்பு ஏற்பட்டால் கூட உன்னது அழகு அதோ கதிதான் என்றது கூரைத்தகடு."

"என்னில் உன்னை வைத்துப் பூட்டாது போனால் நீ கீழே விழுந்து நொருங்கி இருப்பாய். என்னோடு ஒட்டியிருந்து கொண்டு பெரிய வெண்டைக் கதை கதைக்கிறாயே நீயென்று ஒரே குரலில் முறைத்தன பனஞ் சிலாகைகளும் பனைமரங்களும்."

ஓ..... உங்களுக்குள் எதற்கு வீணான சர்ச்சை உங்களையெல்லாம் எவ்வளவு சிரமப்பட்டு நான் தாங்கி வைத்திருக்கின்றேன் தெரியுமா? அதோடு விதம் விதமான கலர் கொண்டு பல் வகையான ஓவியங்களை என்னில் வரைந்ததனால் தான் இந்த வீடே அழகாயிருக்கிறது.

ஆகவே இந்த வீட்டின் வடிவுக்கு முழுக்க முழுக்க நானே காரணம் என்று பறைசாற்றியது சுவர்.

இவ்வாறாக அங்குள்ள எல்லாக்கட்டடப் பொருட்களும் அந்த வீட்டின் அழகுக்கு தான் தானே காரணமென்று ஒவ்வொன்றும் தலை கனத்து உரிமை கொண்டாடின.

நீங்கள் கதைத்தவற்றை யெல்லாம் நாங்கள் கேட்டுக் கொண்டு தானிருந்தோம் ஏன் உங்களுக்குள் மோதுப்பட்டு முரண் படுகிறீர்கள்.

எங்கெல்லாமோ இருந்து எங்களை சேர்த்தெடுத்து இங்கு கொண்டு வந்து கொட்டினார்கள். இந்த வீட்டின் உயர்ச்சிக்காக ஒன்றாக இணைந் தோம்.

அழுக்கேறி ஊத்தையாக மண்ணுக்குள் புதைந்து கிடக்கிறோம்.

உங்களின் ஒவ்வொரு பாரத்தையும் நாங்களே காவந்து நிற்கின்றோம்.

அடித்தளம் சரியாக அமையா விட்டால் முடிந்தளமும் சரியென்று சொல்வார்களே நீவிர் கேள்விப் படவில்லையா?

நாங்கள் பலமாக இல்லை யென்றிருந்தால் கட்டும் போதோ, கட்டி முடிந்த பின்போ இடிந்து வீழ்ந்தி ருக்கலாம் எங்களின் உறுதியான பலத்திலேயே இந்த வீடு நிமிர்ந்து நிற்கிறது.

இனி எக்காலத்திலும் வீழ்ந்து போக நாங்கள் அனுமதியோம் என்று கூறி அமைதியாயின அத்திவாரக்கற்கள்.

www.padippakam.com



*கல்வியின் குறிக்கோள் ஒவ்வொரு மாணவனின் சொந்த இலட்சியத்தை வளர்த்து, இறுதியில் அதை அடைவதற்கு வழிகாட்டுவதாக இருக்க வேண்டும்.*

---

குறிக்கோள்:

உன் பாதை கரடு முரடானதாக இருக்கலாம், கற்களும் முட்களும் எங்கும் பரவியும் கிடக்கலாம், பயங்கர உயிரினங்கள் பாதையில் தென்படலாம், உன் காலிலோ பாதணி இல்லை தகுந்த பாதுகாப்பு இல்லை என்பதெல்லாம் உண்மையாக இருந்தாலும் நடப்பதை நிறுத்தாதே. இலட்சியப் பாதையில் வைத்த கால்களில் வந்துமோதும் வேதனைகளைப்பற்றி சற்றும் சிந்தனை செய்யாதே. கூடிய விரைவில் கால்களை நல்ல இடத்தில் ஊன்றி நடக்க முயற்சி செய். சாத்தியப் படவில்லை என்றால் முள்ளோ கல்லோ எந்த இடமாயினும் கால் வைக்கக் கவலைப்படாதே. அப்போது வேதனை அதிகமாகும் என்பதைப் புரிந்து கொண்டுதான் நீ நடக்க வேண்டும். நீ வாழ்க்கையில் வெற்றியை விரும்புகின்றாய் அல்லவா? சோம்பி உட்காராதே. கிடைக்கும் சந்தர்ப்பம் எதையும் நழுவவிடாதே. உழைக்கப் பின்வாங்காதே. வேதனை தரும் நிகழ்ச்சிகளை கண்டு திகைக்காதே. இதுதான் மனிதன் உயர்வுக்கு உண்மையான காரணம்.

சிலர் எழுதும் கடிதங்கள் அழுகையாகவும் ஒப்பாரியாகவும் இருக்கும். அவர்களுக்கு தைரியத்தை விலைக்கு வாங்குங்கள் என்று யோசனை கூறினேன். எந்தக் கடையில் தைரியத்தை விலைக்கு வாங்கலாம் என்று பலர் கேட்கிறார்கள். புத்தகக் கடைகளில் எல்லாம் ''பாரதியார் பாடல்கள் என்று தைரியம் விற்கப்படும் போது, ஏன் பலர் அழுது புலம்புகிறார்கள் என்பது எனக்கும் புரியவில்லை.

**டாக்டர் M.S. உதயமூர்த்தி**

ஒவ்வொரு நாள்பொழுதும் புலரும் பொழுதும், இன்றுதான் வாழ்க்கை புதிதாய்த் தொடங்குகிறது என்று நினையுங்கள். இறந்தகாலம் நேற்றுடன் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டது என்று நம்புங்கள். அதைத் கிளறாதீர்கள். இன்றைய தினத்தை மட்டுமே மனதில் கொண்டு செயல்படுங்கள். நீங்களும் இன்றைய தினமும் முழுமையாகக் கைகோர்த்துக்கொண்டு செயல்படுங்கள்.

**ஆனன்**

உடலின் எல்லா உறுப்புக்களும் ஒன்றாகத் தூங்கத் தொடங்குவதில்லை. முதலில் கண்கள், பின்பு வாசனையை அறியும் உறுப்புகள், பின்பு சுவைமொட்டுக்கள், காது, கடைசியில் சருமம்.

www.padippakam.com



நாம் சுகம் கெட்டு, நோயுற்று இருக்கும்போதே ஆண்டவன் நம்மை மிக நெருங்கி இருக்கிறான். சுகமாக இருக்கும்போது நாம் அவனை விட்டு விலகி நிற்கிறோம். நோய் வாய்ப்பட்டு இருக்கும் போதுதான் அவனின் நினைவு வருகிறது.

லாரென்ஸ்

கடவுள் காலம் தோறும் சம்பளம் கொடுப்பதில்லை. வாழ்க்கையின் முடிவில் கொடுக்கிறான்.

பழமொழி

பொருள்கள் பெரியவைகளாகத் தோன்றும்போது, வியந்து நிற்கின்ற மனமும் மனிதனும் குறுகியிருப்பதாகத், சிறியவைகளாகத் தோன்றுவார்கள். மனத்தையும் தன்னையும் பெரியதாகச் செய்துகொண்டு பார்த்தால், இந்த உலகத்தில் மிகப் பெரிய பொருள்களும் சிறியவைகளாகத் தோன்றும்.

இதுதான் வாழ்க்கை! நாம் ஏதோ ஒரு திசையில் ஏதோ நோக்கத்தோடு நின்று கொண்டிருக்கும் போது, நம்முடைய நினைவில் அந்த வினாடிவரை தோன்றாத ஏதேனும் ஒரு புதிய திசையைக் காண்பித்து, அந்த வழியில் நாம் புறப்பட வேண்டியிருப்பதன் அவசியத்தை, யாராவது நமக்கு நினைவு படுத்திக்கொண்டே வந்து சேர்கிறார்கள்.

யாரை அதிகமாக வெறுக்கின்றோமோ, அவர்களின் மேல் கூட அன்பு செய்ய துணிவு வேண்டும். அதுதான் கருணையின் எல்லை.

பேதைகள் கூடச் சில சமயங்களில் வெற்றி பெறமுடியும். விதி மட்டும் நல்லதாக இருக்க வேண்டும். விரும்பியதை விரும்பியபடியே அடைவதை விடப் பெரிய வெற்றி ஏதும் பேதைகளுக்கு இருக்க முடியாது.

இந்த வாழ்க்கை வீதியில் நம்மோடு நெருங்கிய துணையாக வரத் தவிப்பவர்கள் கூட, ஏதேதோ கோபதாபங்களால் பாதி வழியிலேயே நின்று போகிறார்கள். துணையாய் எப்போது எதற்காக வந்தார்கள் என்று தெரியாமல், நாமே சிலரை மறந்து விடுகின்றோம். கடைசி வரை உடன் வர யாரோ சிலரால் தான் முடிகின்றது. நாமே சிலரை நடுவழியில் தவிக்க விட்டுவிட்டு மேலே நடந்து விடுகின்றோம்.


மணிபல்லவம் நூலில் இருந்து - நா. பார்த்தசாரதி

தொகுப்பு: திருமதி புனிதமலர் இராஜேஸ்வரன்
Elsdorf

www.padippakam.com



## கவிதைச் சோலையில்



### மாற்றம் மலரட்டும்.

தூற்றுகின்ற வேற்றுமையை
மார்கழியின் பனிவிரட்டி
பறக்கின்ற பறவைகளின் மகிழ்ச்சி
பாரிலுள்ள மக்களின் மனங்களில் நிலைத்து!
இறக்கின்ற நேயங்கள் உயிர்ப்புப்பெற்று
இனிமைகள் எங்கும் மிளிர்ந்திடவேண்டும்!

அலை மோதும் மனங்களில்
அமைதி மலர வேண்டும்!
கசப்பான காரியங்கள்
கண்முன்னே வராமல்
காசினி முழுவதும் களிப்புக்கொள்ள வேண்டும்!

துன்பத்தில் சிக்கித் தவிக்கும்
மானிடர் மகிழ்வு கொண்டு
இடுக்கன்களைந்து இன்பம் பெற்று
இருண்ட எம்தேசம் வளம் பெறவேண்டும்!

சித்தம் கலங்கி சிலையாய் நிதமும் நிற்பவரும்!
நாதியற்றவரும் குழம்பி வாழ்வோரும்
நீதிபெற்று நிம்மதியாய் வாழ்ந்திட
மாற்றமொன்று மலர்ந்திட வேண்டும்!

---

பகீரதி சுதேந்திரன்.
ஜேர்மனி.

படிப்பகம்

www.padippakam.com



## வன்முறை

மானிடனுக்கு நோய்
ஏற்பட்டால்
மருந்தால் குணமாக்கலாம்
வன்முறை என்னும்
கொடிய நோய்க்கு
இவ்வுலகில்....வன்முறை
பிடித்த ஒருவரை மட்டுமல்ல
அந்த கூட்டத்தை
அழித்தாலும் தொடரும்
பயங்கரமான தொற்று நோய்
கிருமிதான் வன்முறை
எயிட்ஸ் நோயை விடக்
கொடுமையான நோய்
வன்முறை தலைப்படாது
ஆரம்பத்தில் களை எடுத்தல்
நன்று ....இல்லையேல்
இந்த உலகையே அழிக்கும்
கொடிய அரக்கன் வன்முறை

## உயிர்ப்பு

மனிதன் இன்பத்தில்
அவனை அணைக்கின்றபோது
இருவரின் உணர்வுகள்
ஒன்றாக சேரும் போதும்
உயிரணுக்கள் ஒன்றாக
சேரும் போதும் ஒரு
உயிர் உதயமாகின்றது
மீண்டும் மானிடன்
உயிர்ப்பு பெறுகிறான்.

## சுயநலம்

குண்டுகள் விழுகின்றன
உயர்மாடிக் கட்டிடங்கள்
சிதைகின்றன
மக்கள் கூக்குரல்
கேட்கின்றது
காப்பாற்று ...காப்பாற்று ...என்று
எல்லோரும் தங்களை
காப்பாற்றவே தலைப்படுகின்றனர்
ஒரு குழந்தையுடன்
ஒரு தாய் உதவி கேட்டு
ஓலமிடுகின்றாள்
உதவிக்கு யாருமில்லை
இவர்களா மனிதர்கள்
சுயநலத்தின்
சொந்தக்காரர்கள்

## உழவன்

உலகிலே சுதந்திரமானவன்
சுதந்திரத்தாயின் குடிமகன்
ஏர்கொண்டு குடிகாக்கும்
குடிமகன்
சுதந்திர பூமியில்
பஞ்சத்தைப் போக்கும்
தலைமகன் - என்றும்
எறும்புபோல் கடுமையாக
உழைக்கும் உழைப்பில்
சேம்போறிகள்
வயிறு வளர்க்கின்றனர்.
உழவே உலகில்
சிறந்தது.

சுழமுருகதாசன்
Lüdenscheid

படிப்பகம்

www.padippakam.com



# நாட்டுப் பற்றும் தமிழுணர்வும்

தமிழ்மொழி என்று எனது நா, உச்சரிக்கும் வேளையிலே
தமிழீழம் நம் தாயகம் என்னும் போதினிலே
தமிழராகிய எமது அகம் குளிர்கிறது மகிழ்வினிலே
தாய்நாடாம் எம் தமிழீழத்தில் நாம் கொண்ட பற்றும்
தாய்மொழியாம் எம் மூச்சாம், அதுவே எம் பேச்சாம் - அந்த
தமிழுணர்வும் எம்மவரின் இரு விழிகள் பாரீர்!.
நாட்டுப் பற்றில்லான் நாடோடி ஆவான் - சொந்த
நாகரிகம் மறந்தவன், நாட்டுப் பற்றே இழந்தவன்
நமது நாடும் நமது மொழியும் நானிலத்தில் சிறக்க
நமக்குத் தேவை, நாட்டுப் பற்றும் நம் தமிழுணர்வுமே!

எம்மவர் எங்கு வாழ்ந்தாலும் ,சிறந்து உயர்ந்தாலும்
நம்மினம் தமிழினம் என்றே , அதுவும் தனியினம் என்றே
நின்று நிலைத்திட, முத்திரை குத்திப் பதித்திடுவோம்
எம்நாடு தமிழீழம், அங்கே வேண்டாம் முரண்பாடு!
நம் நாட்டில் சுதந்திரமாக வாழ்ந்திட,வேண்டாம் கட்டுப்பாடு!
நாமமது தமிழரென வாழ்வதற்கு, ஏன் தட்டுப்பாடு?
எமக்கே உரிய கட்டுக்கோப்பில், உடன்பாடு கொண்டு
சொந்த மண் எம் மண்ணைச் , சுவீகரிக்க நீ பாடுபடு!
எந்த மண்ணில் வாழ்ந்தாலும், அது எம் மண் அல்லவே
ஏற்றப்பாடும் ஒருமைப்பாடும், வளர்ந்திடத் தோள் கொடு!

தாயகப் பற்றுடனே, என்றும் நீ தமிழில் பாடு!
தன்னிறைவில் ஏற்றம் காண , பாடு! நீ ஏற்றப்பாட்டு!
அந்நிய நாட்டினில் வாழ்வதனால், அந்நிய மொழிகள்
அன்னை மொழியாகும், என்ற எண்ணத்தையே வெட்டி விடு!
சுயநிர்ணயம், சுயாட்சியில் வேண்டும் உறுதிப்பாடு! - அதனால்
சுயநாட்டுப் பற்றுடனே, முன்னின்று திட்டமிடு!
உதிரத்தில் தமிழ்ப்பால் , ஓடும் வேளையிலே உன்
உட்சுவாசத்தின் ஊடாக, தமிழ்மூச்சு வெளிவருகையிலே
உன்னை விட்டுத் , தமிழுணர்வு ஓடமுடியுமா? - அது
உடலை விட்டு உயிர் பிரிவது போல் ஆகுமே!
பன்னிய பலமொழிகள் , படித்திட்டாலும் - இன்று
பற்பல அறிவியலும் பொறியியலும் கற்றிட்டாலும்
இன்னமுதுத் தமிழுணர்வு , இயல்பாக உன்னுடனே
உன் நரம்புடனே , பிணைந்திட வேண்டுமன்றோ?
தன்மானத் தமிழர் என்றும், உயிருக்கு நிகரான தமிழென்றும்
தலைநிமிர்ந்து நிற்போம்! தமிழரென்று சொல்வோம்!!

www.padippakam.com



தமிழா! நீ பேசுவது தமிழா? , இது உனக்கு அழகா? - உன்
அம்மாவைப் புறக்கணித்து , சித்தியோடு வாழ்வா?
தமிழாலே ஏற்றம்; அதில் என்றும் இல்லை மாற்றம்
பற்றுக்கள் பலவகை, ஒவ்வொன்றும் தனிவகை
நாற்று நட்டு வளர்வது போல் ; நாம் இங்கு வாழ்ந்தாலும்
நாம் வதியும் நாடுகள் என்றும் வேற்று நாடுகள் தான்!
சுற்றும் சூழல் வேறானாலும் , கற்போம் எம் மொழியை
பற்று வைத்துப் போற்றுவோம் நாம் பிறந்த மண்ணை!
வெற்றுக் கலாச்சாரங்களை, வெட்டி எறிவோம்!
தொற்றிவிடும் போலிகளைப் பொசுக்குவோம்!!
புற்று நோயாக வளரும் வேண்டாத மோகங்களை,
அறுவைச் சிகிச்சை செய்து , தமிழ் உதிரத்தை ஏற்றுவோம்!

போற்ற வேண்டும் நம் நாட்டைப் புற்றுடனே! அதில்
நிற்றல் வேண்டும் நிலையாக , தமிழுணர்வு கொண்டே
ஏற்ற வேண்டும் தமிழ்க்கொடி! ஏற வேண்டும் தாயகக் கொடி!!
தோற்றதில்லை எம்மினம் , தோற்கும் என்பதும் இல்லையே!
காற்றில் கலந்திடும் நிலை வந்தாலும் , கருமந்தனில் பிசகாத
ஆற்றல் கொண்ட மாவீர முத்துக்களை விளைவித்தே
நாற்றிசைக் கண்களையும் கவர்ந்த, மறவர் பூமி நமதே!
நமது நாட்டுப் பற்றும் நம்மொழி உணர்வும் - பிரியாது
நமது உடலோடு இணைந்த உயிரணுவாகிட வேண்டும்
வாட்டும் துன்பம் வந்து வாழ்க்கைத் தடம் மாறினும்
வாடாத உறுதியுடன் வளரவேண்டும், எமது இலட்சியம்

வாழ்க! தாய் மொழி ! வாழ்க! எமது தாயகம்!
மலரட்டும்! எமது கலாச்சாரம் ! மணம் பரப்பட்டும் பூச்சரமாக!

- வேலணை வீணா -

விஞ்ஞானியின்
புதுக்கவிதை
கணிப்பொறி ________

விபத்தில் மரணம்
பொருத்தம் பார்த்து
முடித்த மாப்பிள்ளைக்கு ________

கடவுளிடம் காத்திட
வேண்டி திரும்பினான்
காணவில்லை காலணியை ________

தாய்ப்பாலைப் பழித்து
புட்டிப்பாலை புகழ்வர்
ஆங்கிலப்பள்ளியானர் ________

www.padippakam.com


# தைமகளே நலமா..?

கைகளை வீசியபடி வாசலுக்குக் களிப்போடு வந்தவளே
கவனத்துடன் காத்திருக்கிறேன் கதைப்பதற்கு நானும்தான்
மெய்யாக நாங்களன்று மெலிந்துதினம் வாடுகையில்
மெல்லமெல்ல நீயும்வந்து மெதுவாகவே நலம்கேட்டாய்
செய்வதறியாது அகதிகளாய் செத்துக்கொண்டிருக்கையிலே
சினந்துன்னை விரட்டியது செயற்கையில்லை உண்மைதான்....

மையெழுதிய கண்ணுடனே மனமகிழ்வுடனே வந்தவளே
மாற்றமொன்று வந்ததென்று எம்மண்ணுக்கு வந்தாயா
ஐமூன்று வருடங்களாய் மிக அல்லல்பட்டுக்கிடந்தவேளை
அவமதித்துன்னை அனுப்பியதாய் அர்த்தம் கொள்ளாதே
கையிழந்து கண்ணிழந்து கால்களையிழந்து தவித்தாலும்
காலம் கூடிவந்து அமைதியில் களித்துநாம் இருக்கின்றோம்....

வெய்யிலுக்கு நிழலில்லை இருக்க வீடில்லை வாசலில்லை
வீதியோரத்தில் அன்று கண் விழித்திருந்ததைக் கண்டாயே
பையில்கூடப் பணமில்லை பசிதீர்த்திட உணவுமில்லை
பாலகர்கள் பாலுக்கழுதிட்ட பரிதாபத்தினையும்கண்டாய்தானே
பொய்யில்லை நாங்களின்று போசாக்காய்தான் இருக்கின்றோம்
போய்முடிந்த காலத்தினை ஒருபொருட்டாக நினைக்கவில்லை....

கொய்ததலைகளும் சிதைந்து குடலறுந்த உடலங்களுமாய்
கோரங்கள் பல நிகழ்ந்ததைக் குவலையம் காணவில்லை
செய்தியறிந்த ஒருசிலர் சிரம்தாழ்த்தி எமைப்பார்த்ததையும்
சின்னச்சின்ன உதவிகளாய் செய்ததையும் மறக்கவேயில்லை
கையிலிப்போது வசதிகள்வந்து கலப்பையோடு நடக்கின்றோம்
கஞ்சி குடிப்பதைக்கூடக் கௌரவமாகவே நினைக்கின்றோம்....

பெய்தமழைவெள்ளம் பேரிடியுடன் புயல்காற்றும்வந்து
பேருழிக்காலம்போல் பெரிதாய் எமை வாட்டும்வேளை
தெய்வமாய் தடுத்தவர்கள் தேடித்தேடிக் காத்தவர்கள்
தேரேறிச்செல்லும்போது தெருவில் நின்று அழுதோமே
நெய்விளக்கேற்றி எம்மை நேசித்தவர் கல்லறைகளில்
நெஞ்சுருகி அஞ்சலிசெலுத்துவதை நீயும்வந்துபார்த்தாயா....?

www.padippakam.com


தையோடு கூடிவந்த தண்மையான செய்தியைக்கேட்டு
தள்ளாதவயதிலுமிவன் பூரித்து துள்ளுவதைப்பார்த்தாயா
தேய்தளங்கள் தேசமின்று தெம்புடனே நிமிர்ந்ததனால்
தேசமெல்லாம் கூடிவந்து செய்யும் உதவிகளையறிவாயா
கொய்தமலர் வாடிடாமல் கொள்கைவீரர் கல்லறைகளில்
கொட்டிவணங்கி நிற்கும் கூட்டத்தைக் நீயும்கண்டாயா...?

வையகமெல்லாம் சுற்றிப்பார்த்து வலம்வந்து ஓய்ந்தவளே
வரும் வழியில் எங்கள்மண் வாசனைதனை நுகர்ந்தாயா
மெய்வருத்தக்கூலிவருமென்ற மேன்மையான உண்மையினை
மீட்டுவந்த மாவீரர்களால் மெய்யாகவே கண்டுகொண்டோம்
தைப்பிறப்பில் வந்தவளே தரணியெங்கும் வாழுமுறவுகளுக்கு
தணியாததாகம் விரைவில் தணியுமென்று உரைத்துவிடுவாயா...?

பொய்முகத்து மனிதர்களெல்லாம் போயொழிந்த பின்னால்தான்
போர்தணிந்த எம்பூமியின்று பூவாய்ச்சிரிக்கிறதைப் பார்த்தாயா
செய்தொழிலும் சீரியமும் மிகச்சிறப்பாகவே நடக்கின்றது
சீரியபண்புகளால் மக்களின்முகத்தில் சிரிப்பினைக் கண்டாயா
செய்மதியூடாகவே தினம் செய்திகளையறியும் உறவுகளுக்கு
சிரிப்போடு எங்களின் நலத்தையும் செப்பிடுவாயா தைமகளே...?

- அம்பலவன்புவனேந்திரன்..

*உங்கள் கவலை நீங்கவேண்டுமானால் அடுத்த ஒவ்வொரு காரியத்திலும் உங்கள் கவனம் அதிகரிக்கவேண்டும் - பேணாட்சோ.

*உயிர் உடலுடன் வாழ்கிறது.சத்து குறைந்து இயங்க இயலாதவாறு, உடல் தேயும் பொழுது, பருவுடல் நீத்து நுண்ணுருவாக வெளிச்செல்கிறது.

*நீங்கள் எப்படி வாழ்கிறீர்கள் என்பதில் மிகவும் கவனமாக இருங்கள். ஒருவேளை நீங்கள் மட்டும்தான் பலருக்கு வாசிக்கக் கிடைத்த விவிலிய மாக இருக்கலாம். - W.J. டோம்ஸ்.

படிப்பகம்

www.padippakam.com



## ஒரு கவிஞனும் சில கவிதைகளும் ...!

உள்ளத்தின்
ஒரு இடத்தில்
ஏதோ ஒரு நெருடல்
இன்னும் காயாமல் ஒட்டியிருக்கும்
சமூகத்தின் வலி தேய்ந்த நினைவுகளைப்போல ...

ஏழைகளின்
பள்ள மேடுகளை
சரி செய்ய நினைக்கிறது மனது
வளைந்த சமூகத்தை நிமிர்த்தும் நெம்பாக சிறு கவிதை ...

தந்தை
தந்த தமிழ்ப்பற்றுக்கு
கனதி அதிகம் தான்
அதனால் தான் இடர்பட்ட போதும் எழுதத்தூண்டுகிறது ...!

இந்த கவிதைகளில்
உள்ளத்தின் வலி இருக்கும்
உண்மைப் பொருள் இருக்கும்

தொலைந்த
வாழ்வினை
தேடிய பயணம் போல்
ஓட்டைக் கூரையூடே கண்கள்
ஊடுறுக்கும். பார்வைக்குள் ஒரு கோடிக் கனவிருக்கும் ...

ஒளியில்

இருந்து பிரியாத
ஏழு நிறங்களின் தன்மைகளாய்
என்னில் இருந்து பிரியாத நட்பின் வாசனை இருக்கும்.

ஆனாலும்
இந்தக் கவிதைகள்
அரங்கேறாது தடுக்கப்படும்
சபை மறுக்கப்பட்ட சில சமுதாயத் தொண்டனைப்போல ..?

படிப்பகம்

www.padippakam.com


புரியாமல்
புதிர்போட்டு எழுதினால்
சிறந்த படைப்பாய் வரவேற்கப்படுமாம்

காதல்
இரசத்தில் விரசத்தை
நனைத்தால் பதிப்பிற்காய் ஏற்பார்களாம்

மானுடத்தை
மறந்து எழுதினால்
பரிசிற்குரியதாய் தெரிவு செய்யப்படுமாம் ...!

பதிப்பிற்காய்
மறுக்கப்பட்ட சில கவிதைகள்
வேறு யாரோ பெயர்களில் வெளிவந்தது

இருந்தும்
பாறையைப் பிழந்த
ஊற்றுப்போல இன்னும் வேகமாய்
வெளிவரும் பல கவிதைகள் ...!
கவி ஆக்கம்
மட்டுவில் ஞானக்குமாரன் (யேர்மனி)

## வேதனையே உனக்குத்தான்

**வேதனையே வேதனையே உன்னை**
**நான் கேட்கிறேன்**
**சிகரெட்டின் புகையை இழுத்து தள்ளுகிறாயே**
**சுத்தக்காற்றைச் சுவாசி**
**பேனா பிடித்த கைத்தழும்புகள் - இன்று**
**சிகரெட் பிடித்த வடுச்சுவடா**
**கோவைப்பழ உதடுகள் - இன்று**
**நாவற்பழமாகி விட்டதோ**
**ஒவ்வொரு முறையும் இழுக்கும்போது**
**மூக்கும் கண்ணும் சிவக்கிறதோ**
**நுரையீரல் சுரக்கமும், கல்லீரல் கனமும் குறைந்து போச்சோ**
**இருதயம் நின்றுவிடக்கூடாதல்லவா**
**மேகமே உன் புகையைப் பார்த்து ஏமாந்துவிட்டதோ.**

*திருமதி ஜெரா. நடேசன்* - Havixbeck

## இறைவனைத் தேடுகிறோம்

உருண்டு உயர்ந்து
புரண்டு துவண்டு
நுரைகக்கி கரை கக்கி – மீண்டும்
அலையாயும் அலைகளெல்லாம்
நீங்கள் அலைந்து தேடுவது யாரை?
அலைகள் சொன்னது கடலைத்
தேடுகிறோம்.
உடலெல்லாம் நெருப்பாக
இருளுக்குப் பகல் தந்து
சுற்றி சுற்றி வரும் சூரியனே!
நீ சுற்றிச் சுழன்று தேடுவது யாரை?
சூரியன் சொன்னது
விண்ணைத் தேடுகிறேன்.
காற்றோடு ஒளியோடு
காதலிக்கக் கருத்தரிக்க
கிளைகளை மேலெழுப்பி

கீழே கீழே ஓடும் வேர்களே
நீங்கள் ஓடித் தேடுவது யாரை?
வேர்கள் சொன்னது மண்ணைத்
தேடுகிறோம்.
வானில் வட்டமிட்டு ஆடும்
கடதாசிப் பறவை காற்றாடியே
நீ ஆடித் தேடுவது யாரை?
காற்றாடி சொன்னது
காற்றைத் தேடுகிறேன்.
ஆதாம் முதல் அடியேன் வரை
மானுடம் தேடுவது
யாரை? யாரை? யாரை?
மானுடம் சொன்னது
இத்தனையும் படைத்த
ஆதியந்தமில்லா அநாதி
இறைவனைத் தேடுகிறோம்!......


*சில்லையூர் சிங்கராசா*

### அறிந்துகொள்ளுங்கள்

- முதன்முதலில் கிறிஸ்மஸ் மரத்தை மெழுகுவர்த்திகளால் அலங்கரித்தவர் மாட்டின் லூதர்.
- கிறிஸ்மஸ் தினத்தில் பிறந்த விஞ்ஞானி சேர் ஐசக் நியூட்டன்.
- முதன் முதலாக கிறிஸ்மஸ் பாடலை இயற்றியவர் புனித பிரான்சிஸ் ஆசிசியார்.
- முதன்முதல் கிறிஸ்மஸ் மரம் வைக்கும் வழக்கம் ஆரம்பமான நாடு ஜேர்மனி.

## நாளைய வரலாறு!

கு. தேவேந்திரன்



அடாவடிகளின்
அடிக்கல் நாட்டு விழா
குள்ளநரிகளின்
கும்பாபிஷேகம்

களவாடிகளின்
காவடி தூக்கல்...

பந்தாக்களின்
பாலாபிஷேகம்...

இரக்கமற்றவர்களின்
இராஜ கோபுரங்கள்

சூத்திரதாரிகளின்
சூலங்கள்...

நுனிப்புல் மேய்பவர்களின்
108 சங்காபிஷேகம்....

மாக்களின்
மஞ்சல் நீராடல்...

தீயவர்களின்
தீமிதிகள்...

காலிகளின்
கரகம் பாலிப்பு

இதயமற்றவர்களின்
இடும்பன் பூஜை.

திறனற்றவர்களின்
திருவிழாக்கள்

உலுத்தர்களின்
உண்டியல் கீதம்

மடத்தனங்களின்
மணிமகுடம்

வரலாற்றில் இன்று
எங்கள் கோயில்கள்
கோயில் மாடுகளாய்....

## தமிழைக் காப்போம்

செ.ப. இளவாணன்,
தலைநகர்.

பார்வையை
பரிதவிப்பவர்
ஊர் உலகில்
உயிர் மொழியை

இழந்திட்டு
நாமல்லவா?
உயர்ந்த
உதறிடுவதா?

உயிரே
உதட்டளவில்
பயிரை
பார்த்து

தமிழென்று
உரைப்பதா?
வாட விட்டு
மகிழ்வதா?

மொழி
முயன்று
வழிவழி
வரவேற்று

வல்லுநர்கள்
முடிவெடுப்பதே
வந்ததென
வாழ்த்துவோம்!

இனிமைத்
இன்னுயிரை
இனிய வரலாறு
என்று ஏக்கம்


தமிழுக்கு
ஈந்தவர்கள்
ஏதுமில்லை
வரக்கூடாது?

கனிதரும்
கன்னித்
இனிதாகக்
எழிலோடு

சுவையாம்
தமிழை நாம்
காத்து
வாழ்வோம்!

www.padippakam.com





## எழுத்தாளர் கணபதி கணேசனின் மறைவு

மலேசியா, தமிழகம், தமிழ் ஈழம் இன்னும் பல நாடுகளில் நன்கு அறிமுகமான திருவாளர் கணபதி கணேசன் அவர்களின் மறைவு தமிழ் உலகுக்கு நிகழ்ந்த பேரிழப்பாகும்.

நவீன இலக்கியத்தில் அன்னவருக்கு இருந்த ஈடுபாடு மதிப்பிற்குரிய ஒன்றாகும். இலக்கியங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டும் அதனைச் சரியான தராசில் நிறுத்துப்பார்ப்பதில் அன்னவர் தவறியது கிடையாது.

மலேசிய மண்ணில் செம்பருத்தியின் பொறுப்பாசிரியராக இருந்து, நவீன இலக்கியத்தை வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதில் தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

இவரின் இழப்பு, தமிழ் இலக்கியத்திற்கு பேரிழப்பாகும் என்பதில் இரண்டு விதக் கருத்துகள் இருக்க முடியாது.

எங்களின் கவசங்களில் ஒன்று கழற்றப்பட்டுவிட்டது என்கிற கவலை எங்களுக்கு எப்போதுமிருக்கிறது.

அன்னாரினை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு மலேசிய நவீன இலக்கியச் சிந்தனையின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

படிப்பகம்

ணபதி கணேசலிங்கம் மிழீழத்தின் வடமாநிலத்தில் யாழ்ப்பாண பகுதியில் 03-03-955 ஆம் ஆண்டில் பிறந்தார். ஆரம்பக்கல்வி முதல் உயர்க்கல்வி வரை யாழ் இந்துக் கல்லூரியில் பயின்றார்.

1970ஆம் ஆண்டிலிருந்து இறக்கும் வரை கணபதி கணேசன், மதுரா என்ற புனைப் பெயர்களில், ஈழநாடு, தினகரன், சிரித்திரன், செவ்வந்தி, வீரகேசரி போன்ற இலங்கைப் பத்திரிகைகளுக்கும் இலண்டன் ஈழகேசரி, மலேசியா இதயம் போன்ற இதழுக்கும் எழுதி வந்தார்.

ரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த மேகம்' என்ற சிறப்பத்திரிக் கைக்கு சிரியராகவும் பணியாற்றி ந்தார். சிறுகதை, கவிதை, ஆய்வுக் ட்டுரைகள் போன்ற வற்றில் மிகவும் ழமான ஆளுமையை பெற்றிருந்தார். றிப்பாக மக்களிடம் செய்தி இலகுவாக சென்றடைய வேண்டும் என்ற ஒரே லக்குடன் செயல்பட்டு வந்தார்.

1980ஆம் ஆண்டுகளுக்கு பின் தமிழகம், மலையகம் ஆகிய இடங்களில் தன்னுடைய இடம் பெயர்ந்த வாழ்க்கையை மேற்கொண்டு இருந்தார்.

வர் இதுவரை மூன்று கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இத் தொகுதிகளில் மிழ், தமிழன் என்ற வட்டத்தை விட்டு அவர் மீறவில்லை எனக் கூற முடியும். அவரே ரிடத்தில் குறிப்பிடுகிறார் ; பற்றி எரியும் நெருப்பின் மத்தியில் இருந்துகொண்டு நிலவை சித்து கவிதை எழுதும் கலை எனக்கும் இன்னும் கை வரவில்லை என்று.

1998ஆம் ஆண்டு செம்பருத்தி இதழின் உதவி ஆசிரியராக பொறுப்பேற்று மலையக மக்களின் வாழ்வியலில், உரிமைகளை, சமூகவியல் பிரச்சனைகள் போன்றவற்றை புள்ளிவிபரங்களுடன் வாசகர்களுக்கு அறியத் தந்தார். அத்துடன் அலுவலகத்தில் சக வேலையாளரிடம் மிகவும் அன்புடன் தந்தையாக, நண்பனாக, ஆசிரியராக, நல்வழிகாட்டியாக இருந்து பல இளம் எழுத்தாளர்களை உருவாக்கியவர்.

அவர் தற்போது எம்மிடத்தில் இல்லை, ஆனால் அவர் விதைத்த விதைகள் அவரின் பணியை தொடர்ந்து மேற்கொள்வர்.

## -- அஞ்சலி --

அமரர் கணபதி – கணேசன் அவர்கள் உலகம் அறிந்த எழுத்தாளர், கவிஞர், பத்திரிகை ஆசிரியர், விமர்சகர், தமிழ் ஆய்வாளர், சிந்தனையாளர், அறிஞர் இவரின் மறைவு தமிழ்பேசும் நல்லுலகில் பேரிழப்பாகும்.

கடந்த 10 வருடங்களாக அன்னார் ,,மண்" சஞ்சிகையோடு மலேசியாவிலிருந்து கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டதோடு ,,மண்" சஞ்சிகையை மெருகூட்டி, வளர்ச்சிபெறச்செய்ததிலும் பெரும்பங்கு கொண்டார் என்பதை தெரிவிக்கிறோம். தமிழையும், தமிழ்மக்களையும், தமிழ்மண்ணையும் தன் வாழ்நாளில் நேசித்து வாழ்ந்த இந்த உத்தமருக்கு ,,மண்" சஞ்சிகை மனமார்ந்த நன்றி அறிதலைத் தெரிவிக்கும் வேளை பிரிவுத்துயரிலும் பங்குகொள்கின்றது. பிரிவால் வாடும் உறவுகளுக்கும் ஆழ்ந்த அனுதாபங்கள். ஓம் சாந்தி......

– ஆசிரியர் –

www.padippakam.com



# குறுக்கெழுத்துப்போட்டி முடிவு - 73

(கார்த்திகை - மார்கழி 2002)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மா | வீ | ர | ர் | நா | ள் | மோ |
| ம | ம | ரு | ந | ட் | க | ர் |
| னி | ண் | ட் | ல் | ரு | ரு | தா |
| ந | ம் | ரி | ர | ர் | வ | ந் |
| ர் | ம | தி | வீ | ர | ன் | ந |
| தா | ர் | ரு | ல் | ற் | று | பு |
| ம் | த | டி | க | று | ற் | கா |

பங்குகொண்டவர்களும் பரிசு பெறுபவரும்!...

| | | |
|---|---|---|
| திரு:- | R. செல்வராசா | - Castrop Rauxel |
| திரு:- | க. தவராசன் | - Menden |
| திருமதி:- | சுகந்தி யோகிஸ்வரன் | - Göttingen |
| திருமதி:- | ஜெயந்தா பாலச்சந்திரன் | - Bochum |
| திருமதி:- | கல்பனா ஞானக்கிருஷ்ணன் | - Sinsheim |
| திருமதி:- | ஜெயா நடேசன் | - Havixbeck |
| திருமதி:- | சுலோசனா புவனேந்திரன் | - Duisburg |
| திருமதி:- | றஞ்சனா தவராஜ் | - Wadgassen |
| திருமதி:- | அற்புதராசா | - Soest |
| திருமதி:- | ராதா புத்திசிகாமணி | - Sundern |
| செல்வி:- | சுவிதா சிறிஸ்கந்தராசா | - Duisburg |

**இவர்களுக்கு „மண்“ சஞ்சிகை பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றது. இவர்களில் அதிஸ்டசாலியாகத் தெரிவு செய்யப்பட்டுப் பரிசு பெறுபவர்:**

திருமதி கல்பனா. ஞானக்கிருஷ்ணன் - **Sinsheim**

www.padippakam.com



# குறுக்கெழுத்துப்போட்டி – 74

(தை – மாசி 2003)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 |
| 08 | 09 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

<u>இ. – வ.:</u>

01-06: உலகமெங்கும் வாழும் தமிழர் கொண்டாடும் திருநாள்.

15-18: விஞ்ஞான தொழில்நுட்பத்தில் ஐரோப்பிய, அமெரிக்க வளர்ந்த நாடுகளோடு போட்டியிடும் ஆசியநாடு இது.

31-34: இது செய்து வாழ்ந்தால் தலைகாக்கும் என்பார்கள்.

43-48: சிங்களஇனவாத அரசுகளால் திட்டமிட்டு தமிழர் நிலம் அபகரிக்கப்பட்டு வரும் பிரதான தமிழ்மாவட்டம்.

<u>வ. – இ.:</u>

12-08: சிலரின் திட்டமிட்ட கீழ்த்தரமான செயற்பாட்டை இந்த மிருகத்தின் செயற்பாட்டுக்கு ஒப்பிடுவார்கள்.

26-23: இந்த மிருகத்திலிருந்து தான் மனிதன் தோன்றினான் என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். (கு)

42-38: வேகமாகச் சுற்றுவது. (கு)

49-48: ஒருவர் செய்யும் நல்ல செயலை அவர் இருக்கும்போது பாராட்ட வேண்டும். சிலர் அப்படி அல்லாமல் அவர் இறந்தபின் இது வைப்பார்கள்.

<u>கீ. – மே.:</u>

27-06: பிரயாண சாதனங்களில் ஒன்று.

35-07: விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே இரண்டு தடவைகள் சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற்ற நாடு.

43-22: நீர்ப்பதார்த்தங்களை விஞ்ஞானத்தில் இப்படி அழைப்பார்கள்.

<u>மே. – கீ.:</u>

01-22: பலம் என்று பொருள்படும்.

12-40: கணவனை இழந்த பெண்கள் நெற்றியில் இது இடக்கூடாது என்பது தமிழர்களின் பாரம்பரியக் கலாச்சாரமாம்.....

17-38: இந்தியாவை இப்படியும் அழைப்பார்கள்.

23-44: தமிழீழத்தில் கணவன் இழந்த அவர்களின் வாழ்வுக்கு உதவியளிக்க வேண்டிய மனிதாபிமானம் நம்மில் வளரவேண்டும் உதவவேண்டும். (கு)

-முடிவு திகதி 20.02.2003-

www.padippakam.com



## படித்துச் சுவைத்தவை

## ஜனவரி ஒன்று

ஜனவரி 1ஐ சீனா குடியரசுநாளாகக் கொண்டாடுகிறது.

ஜனவரி 1ஐ சூடான், சிரியா, சமோவா, செக்கோஸ்லோவேகியா போன்ற நாடுகள் சுதந்திர தினமாக கொண்டாடுகின்றன.

1.1.1772 உலகில் முதன் முதலாக பயணிகள்காசோலை லண்டனில் அறிமுகமானது.

1.1.1785 உலகப் புகழ் பெற்ற டைம்ஸ் பத்திரிகை லண்டனில் யுனிவர்சல் டெய்லி ரெஜிஸ்டர் என்ற பெயரில் தொடங்கியது.

1.1.1862 மணியாடர் அனுப்பும் முறை தொடங்கப்பட்டது.

1.1.1862 அமெரிக்காவில் அடிமை இன கறுப்பர்களுக்கு ஆபிரகாம் லிங்கன் விடுதலை அளித்தார்.

1.1.1883 உலகில் முதன் முதல் தீயணைப்புப்படை லண்டனில் அமைக்கப்பட்டது.

1.1.1909 இல் இங்கிலாந்தில் வயதானவர்களுக்கு ஓய்வூதியம் அறிமுகமானது.

1.1.1916 லண்டனில் சீனிப் பங்கிடு அமுலுக்கு வந்தது.

1.1.1923 சோவியத் குடியரசு தோன்றியது.

1.1.1942 உலக நாடுகள் ஐ.நா. சபை அமைக்கப்பட்டது.

## ஜனவரி 26

26.1.1862 இல் இந்தியாவில் தந்திமுறை அமுலானது.

26.1.1866 சூயஸ் கால்வாயில் போக்குவரத்து தொடங்கியது.

26.1.1874 பம்பாய், கொல்கத்தா இடையே ரெயில் போக்குவரத்து ஆரம்பமானது.

படிப்பகம்

www.padippakam.com



26.1.1884 காந்தி பிறந்த போக்கப்பந்தரில் ரயில் நிலையம் திறக்கப்பட்டது.

26.1.1885 இந்திய தேசிய காங்கிரஸ் உதயமானது.

26.1.1888 இந்தியாவில் தொலைபேசி பயன் படுத்தப்பட்டது.

26.1.1908 முதன் முதலாக சாரணர் படை தொடங்கப்பட்டது.

26.1.1917 கனடாவில் உலகின் முதல் விமானப்படைபயிற்சிக் கல்லூரி திறக்கப்பட்டது.

26.1.1930 தேசிய காங்கிரஸ் விடுதலை நாளாக அறிவித்தது.

26.1.1931 எரவாடா சிறையிலிருந்து காந்தி விடுதலை செய்யப்பட்டார்.

26.1.1950 இந்தியா குடியரசானது, இந்திய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

26.1.1978 முதல் இந்திய வானில் செயற்கைக்கோள் ஏவப்பட்டது.

திருமதி. ரஞ்சனா தவராஜ்

வீரத்தில் சிங்கம்
வேகத்தில் சிறுத்தை
எப்போது மனிதனாவாய்__________

பசியோடு காத்திருந்தான்
பிணத்தின் வருகைக்காய்
வெட்டியான்__________

உழவன் எழுதிய
உன்னதக் கவிதை
நெல்மணி__________

குழந்தையைக் காப்பாற்றுங்கள்
தொலைக்காட்சி
அரக்கனிடமிருந்து__________

படிப்பகம்

www.padippakam.com


# ஆரோக்கியமாக வாழ்வோம்

நாம் அன்றாடம் உணவை உட்கொள்வதை நடைமுறையில் வைத்துள்ளோம். அப்படி நாம் அனுதினமும் சாப்பிடுகின்ற எல்லா வகையான உணவுகளுமே நமது உடம்பிற்குத் தேவையான எல்லா சத்துக்களையும் கொடுப்பதில்லை. சில வகையான உணவில் கொழுப்பு சத்து அதிகமாகவும், சிலவற்றில் எந்த சத்துமின்றியும் இருக்கின்றன. எந்த உணவு அதிக கலோரியை தருகின்றதோ அதனைத்தான் மருத்துவ உலகம் சத்துணவு என்றழைக்கின்றது. தானியங்கள் பச்சையான காய்கறிகள், பால், பழங்கள், போன்றவற்றில்தான் நல்ல தரமான சத்துக்கள் அடங்கியுள்ளன.

தினம் ஒரு கீரை:

கீரையில் ஏராளமான வைட்டமின்களும், தாதுச் சத் துக்கள், காரடீன், பொட்டாசியம், மக்னீசியம், பாஸ்பரஸ் சத்துகளும் உள்ளன. அரைக்கீரை, பசலைக்கீரை, முருங்கை, கொத்தமல்லி, கறிவேப்பிலை போன்ற கீரைகளில் கால்ஷியம், இரும்புச்சத்துகளும் நிறைந்திருக்கின்றன. எல்லா சத்துக் களையும் நம் உடல் கொள்வதில்லை. கீரைகளை உண்டுவிட்டு ஒரு கொய்யாப் பழத்தை சாப்பிடவும். பூரணமாக உட்கிரகிக்க இந்த கொய்யா உதவுகிறது.

காரட் சாப்பிடுங்கள்-

காரட்டில் 'ஏ' வைட்டமின் அதிகமாக இருக்கிறது. தினம் காரட் சாப்பிட்டு வந்தால் கண்பார்வை பிரகாசமாக இருக்கும். புற்றுநோய், முடக்கு வாதநோய், இருதய நோய் போன்ற வற்றை உருவாக்கும் காரணிகளை தடுக்கிறது. மேலும் வைட்டமின் 'சி' மற்றும் 'பி' வைட்டமின், பொட்டாசியம், கால் சியம், கார்போஹைட்ரேட்டும் நிறைந்திருக்கிறது. நார்த்தன்மையும் இருப்பதால் மலமிளக்கியாகவும் செயல்படுகிறது. ஆரோக்கியமான சருமத்திற்கும், முடிக்கும் நல்லது காரட். பற்களையும், எலும்புகளையும் வலுப்படுத்தும். நோய் எதிர்ப்புச் சக்தியையும் தருகிறது.

தானியவகை நல்லதே-

தானியவகையில் புரோட்டீன் சத்து குறைவாக இருந்தாலும், நார்ச்சத்து மிகுந்துள்ளதால் அவை இரத்த ஓட்டத்தின் வழியே சென்று கொழுப்பைக் குறைக்கிறது. உலர்ந்த பயிரில் பி வைட்டமின், கால்சியம், இரும்புச்சத்தும், மக்னீசியம், பொட்டாசியம் போன்றவை இருக்கின்றன. கொத்தமல்லியைவிட இதில் இரும்புச் சத்து அதிகம். அபூர்வமான சத்தான காப்பரும் உள்ளது. இது புற்றுநோய் இருதய நோய்களை குறைக்க உதவுகிறது.

www.padippakam.com



தினந்தோறும் இறந்து கொண்டிருக்கும் சிறுகுழந்தைகளில் சுமார் 17 சதவிகிதம்வரை உணவில் நச்சுத் தன்மை காரணமாக் இறக்கிறார்கள் என்பது உங்களுக்கு தெரியுமா?

குழந்தைகள் சுவையாக சாப்பிட வேண்டும், ஆரோக்யமாக வாழ வேண்டும்என விரும்பும் தாயே, அவளுக்கு அறியாமல் செய்யும் ஒரு சில தவறுகளால் குழந்தைகளின் உயிர் பறிபோய்க் கொண்டிருக்கிறது. சிறிய அளவிலான நச்சுத் தன்மை ஆரோக்யமான வரை பெரும்பாலும் பாதிப்பதில்லை, ஆனால் உடல் நலம் குன்றியவர்கள், குழந்தைகள், கர்ப்பிணிகள், வயதானவர்களை நச்சுத்தன்மை பாதித்து விடுகிறது. பாக்டீரியா, வைரஸ் மற்றும் ரசாயணங்கள் உணவுப் பொருட்களில் சேர்வதால் உணவு நச்சுத் தன்மை உடையதாக மாறுகிறது.உணவு சமைக்கும் சமயத்தைவிட, அதை பாதுகாத்து பரிமாறும் சமயத் தில் தான்நச்சுத்தன்மை அதிகம் அடைகிறது. என்பதுதான் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மை.

உணவில் நச்சுத்தன்மை வராமல் இருக்க சில வழி முறைகளை பார்ப்போம். சமைக்கும் முன் சூடான நீரில் கைகளை கழுவிக்கொள்ள வேண்டும். நகங்கள் சுத்தமாக வெட்டப்படிருக்க வேண்டும்.

சமையலுக்கு பயன்படுத்துப்படும் பாத்திரங்கள் முறையாக கழுவப் பட்டிருக்கவேண்டும். சமையலறையில் ஒட்டடை, தூசி அதிக்மாக இருக்க கூடாது. சமைப்பவரின்கைகளில் காயம், புண் இருந்தால் அதை சரியாக கட்டுப்போட்ட பின் சமைக்க வேண்டும். சமைக்கும் போது முடிவாருதல், மூக்கை சிந்துதல்,இருமல் போன்றவற்றைதவிர்க்க வேண்டும்.

சமையலை அதிக வெப்பநிலையில் ஒரே நேரத்தில் முடித்துவிட வேண்டும். சமைத்த உணவை எந்த காரணம் கொண்டும் திறந்து வைக்காதீர்கள். சமைக்கப்பட்ட உணவுகளை எந்த காரணம் கொண்டும் வெளியே வாங்காதீர்கள்.

ஒவ்வொரு நேரத்திற்கும் தனித்தனியாக சமைத்துக் கொள்ளுங்கள். பழையஉணவை அடிக்கடி சூடாக்கி சாப்பிடுவதால் பிரயோஜனம் இல்லை.காய்கறிகள்? மாமிசம் போன்றவைகளை தண்ணீரில் நல்ல படியாகசுத்தப்படுத்திய பின் சமைக்கவும்.

குழந்தைகள் பூவைப் போன்றவர்கள். அவர்களுக்கு சமைக்கும் போது அன்புடனும்? சந்தோஷத்துடனும் மட்டுமின்றி, எச்சரிக்கை யோடும் செய்யுங்கள்.

தொகுப்பு: அருந்தவம். சோஸ்ற்.

www.padippakam.com




## நோயும் மருத்துவமும்

1. **மஞ்சள் காமாலை:**
மஞ்சள் காமாலை என்ற நோய் சாதாரணமாக ஆரம்பித்து உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்திவிடுவது உண்டு. கணையம் சரிவர இயங்கமுடியாத நிலையில் பித்தம் அதிகமாகி உடம்பிலுள்ள இரத்தத்தில் கலந்து உடல் முழுவதும் பரவிவிடுவதின் காரணமாக கண்கள், நகம் மஞ்சளாகி, சிறுநீரும் மஞ்சள் நிறமாகி கழியும். இந்தச் சமயத்தில் கல்லீரல், மண்ணீரலில் நீர்சேர்ந்து வீக்கம் வந்துவிடும். மஞ்சள் காமாலையை முற்றாக முற்றவிட்டால் நோயைக் குணப்படுத்துவது கடினமாகி விடுகின்றது. சித்த மருத்துவ வைத்தியத்தின் மூலமும் இதனை குணமாக்கமுடியும். ஆனால் ஆங்கில வைத்தியமே சிறந்தது. உடனடியாக வைத்தியசாலை சென்று சிகிச்சை பெற்றுக்கொள்வது நல்லது. அதிகமாக நீர்ப்பதார்த்தங்கள் அருந்துவது மிகவும் சிறந்தது.

2. **நாம் பேசும் நேரம்:**
ஒரு நாளைக்கு ஒரு மனிதன் 30 ஆயிரம் வார்த்தைகள், நிமிடத்திற்கு 150 சொற்களையும், மணிக்கு 9000 சொற்களையும் பேசுகிறான். மொத்தப் பேச்சைச் சேர்த்தால் ஒரு நாளைக்கு சுமார் நான்கு மணி நேரம் நாம் பேசுகின்றோம்.

*திருமதி ஜெயா நடேசன்* - Havixbeck



**2003**

புதுவருட, தைப்பொங்கல் திருநாட்களையொட்டி வாழ்த்துமடல்கள், தொலைபேசி, தொலைநகல், மின்அஞ்சல் மூலம் வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொண்ட அன்பு உள்ளங்களுக்கு நாமும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், நன்றிகளையும் வழங்கி வணங்குகிறோம்.

www.padippakam.com



## வாசகர்கடிதம்

மண் ஆசிரியர் தோழர் வ.சிவராசா அவர்கட்கு வணக்கம்.
நலம் நலம் மலர்க நலமோடு வாழ்க. பிறர் நலம் காக்க வாழ்க.
திங்கள்தோறும் இடைக்கும் 'மண்' இதழை விரிக்கும்போது; "இந்த முறையாவது சிவராசாவிற்கு ஒரு கடிதம் எழுதிவிட வேண்டும்" என்ற எண்ணம் பிறக்கும் - பிறந்தவுடன் இறக்கும். இது என் இயலாமை.

பல்வேறு வேலை-பணத்தேடல் போன்றவற்றில் என்னை தொலைத்துவிட்டேன் என்ற உண்மையை மறைக்காமல் சொல்லிவிடுகின்றேன். துன்பங்களைத் தேடி தூங்கிக் கோன்டேன் என்றுதான் சொல்ல வேண்டும்.
'மண்' இதழையம் உங்களையும் மனமார பாராட்ட வேண்டுமென்ற எண்ணம் பலமுறை எழுந்து வீழ்ந்துள்ளது.
இன்று விடிந்தது...
ஓர் இதழை வெளியீடு செய்வதில் எவ்வளவு பாடு உண்டு என்பதை நான் அறிவேன் எவ்வளவு உழைப்பு இழப்பு பொறுப்பு உண்டு என்பதனை ஓரளவு நானும் அறிவேன். இவ்வளவு செய்திகளைத் திரட்டி தொகுத்து தவறாமல் வெளிவிடுகிறாரே என்று பல முறை மலைத்துள்ளேன். எவ்வளவு நேர்த்தியான இதழ். மனமார பாராட்டுகிறேன். வாழ்க தொடர்க தொண்டு.
அருவி சஞ்சிகை வழக்கம் போல் தொடர்ந்து வெளியிட வாய்ப்பில்லை. முறையாக கவிதைகள் கிடைப்பதில்லை. போதுமான கவிதைகள் கிடைத்தால் - நேரம் கிடைப்பது அரிதாகின்றது. நேரம் கிடைத்தால் - போதுமான பணம் கிடைப்பதில்லை. இதுவரையிலான இதழ்களை என் சொந்தப் பணத்திலேயே வெளியிட்டுள்ளேன்.
ஆனால்...
அருவி தொடர்ந்து வெளிவரும், நினைத்தபோது வெளிவரும். எல்லாவகையான சாத்தியக்கூறுகளும் ஒன்றாகினால். அருவி தவறாமல் வெளிவரும். மிக விரைவில் புதில் இதழ் அனுப்பிடுவேன்.
தொடர்வு கொள்க.

...வணக்கம்...


*தொழமையுடன்*
அருண் - Malaysia

**வாழ்கையிலிருந்தும் அரசியலில் இருந்தும் விலகி நிற்கும் கல்வியானது, பொய்யும் பித்தலாட்டமுமே என்பதை நாம் பகிரங்கமாக என்றும் பிரகிடனம் செய்வோம்.**

லெலின்

www.padippakam.com





## யேசுபாலன் மனிதனாக அவதரித்தார்

அருள்மொழி வல்ல திரு அவதாரன்
பாவங்கள் போக்கும் தேவகுமாரன்
கன்னிமரியாள் மடியினில் மீட்பனாய்
கைந்துணி ஒன்றில் கண்களை திறந்து
ஆநிரைந் தொழுவில் அவதரித்ததினால்
ஆண்டவர் யேசு அவனியில் மனிதனானார்
அவரின் மகிமை அதிகரித்தோங்க
அமலனின் கருணை அன்புறக் கலந்து
வானோர் சேனை வாழ்த்தியே போற்றி
ஆயர்மக்கள் அனைவரும் புகழ்ந்து
மானிடமக்கள் மாண்புடன் வணங்கி
உலகத்தில் நல் மனந்தோருக்கு
அமைதியை உண்டாக்க ஏழ்மையில் பிறந்தார்

*திருமதி ஜெயா நடேசன்* - Havixbeck

www.padippakam.com





**<u>சுமையான வாழ்வைச் சுகமாக்கும் ஔடம்.</u> ( விவிலியம் )**

விண்ணை,மண்ணை ஆண்டளந்த ஆதிநாயகனின்
விண்ணொளி வீசும் தன்னிகரில்லா பேரருட்சோதியின்
தேனிலும் தேனடையிலும் தெள்ளமுதின் பேரினிதாகிய
தெய்வீகத் தமிழ்மணங்கமழும் திருவிவிலியம் படித்திடுவோம்.

வையத்தில் எமை வளமுடன் வாழ வைக்கும் கர்த்தனே!
வார்த்தை வடிவில் வாழுகின்றீர் என்றும் எங்களுடனே!
கைகூப்பி தொழுதுந்தன் பதம் பணிந்தோம் சத்தியனே!
கை தூக்கி எம்மைக்காத்து வழி நடத்துவீர் பொற்பரனே!

அன்பியம் என்ற பண்புநிறை அமைதி வாழ்வைத் தேடி,
அன்பில் விளைந்த சமுகமாய் அனைவரும் கூடி,
ஆதித்திருச்சபையின் நெறியான விசுவாசத்தை நாடி,
அவனியில் நாம் வாழ ஆவியானவரே வாரும் இப்போ ஓடி,

பிரிவினைகள் சபைப் பிளவுகள் யாவையும் களைவோம்.
பிள்ளைகள் நாம் ஒரே தேவனின் இறைகுலம் என்போம்.
பகைமைகள் பிணக்குகள் தகர்த்து நண்பர்களாவோம்.
பகிர்ந்துண்டு வாழ்ந்து தினம் திகழ்திருவிருந்தில் அமர்வோம்.

அமர தீபமாம் கருணாமூர்த்தியின் சுவைமிகு பொன்னுரைகளை
ஆசையோடு கூடி நாம் உளம் உணர்ந்தே படித்திடுவோம்
ஆண்டவன் இயேசு வாழ் இல்லமாக எம்முளத்தை மாற்றுவோம்
ஆதியந்தமிலா மூவொரு இறைவனை முழுமையாய் விசுவசிப்போம்.

ஊதாரி மகன் எம் வாழ்வை சீர் குலைத்திடாமல்
உத்தமன் இயேசுவின் அடிச்சுவட்டில் எம் கால்கள் பதித்து,
நித்தம் வறுமையில் சிறுமையில் வாடும் ஏழைகட்காய் - எம்
வாழ்க்கையை இழப்போம். வாழ்வைக் கொடுப்போம்.

**சில்லையூர் சிங்கராஜா.**

படிப்பகம்

www.padippakam.com



# மீட்பளிக்கும் மீட்பரின் வருகை!

*'சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது.'*

சமாதானத்துக்கான ஒளிக்கீற்றுக்களை தமிழீழத்தின் தாயகப் புதல்வருக்கு தோற்றுவித்த, ஆலோசனைக் கர்த்தர். வலிமை மிகு இறைவன் நித்திய பிதா: சமாதானத்தின்அரசரின், 2002ன் கிறிஸ்மஸ் சிறப்பு விழாவினை நினைவு கூருகிறோம். இந்த விழாவானது, நம்மைப் பழையனவற்றைக் களைந்து புதியனவற்றில் புதுமுகம் செய்ய விடுக்கும் அழைப்பாகும். *"நீ உன் பொல்லாத வழிகளை விட்டு விலகி, மனம் திரும்பி மன்னிப்பு பெற்று, என்னை நோக்கிக் கூப்பிட்டால் நான் வந்து உனக்கும் உன் தேசத்திற்கும், சந்தோசத்தையும் சமாதானத்தையும் தருவேன்"*, என்று திருமொழிந்த கிறிஸ்து பெருமானின் பிறப்பின் போது அருளப்போகும் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள அவர் விடுக்கும் அமைதியின் அழைப்பு.

ஆதியிலிருந்தே மக்கள் இறைவனை ஏதோ ஒரு வடிவில் வழிபட்டு வந்திருக்கின்றனர். ஆதிப் பெற்றோர் பாவம் செய்த போது, அவர்களை மீட்க, விண்ணக வாழ்வை பெற்றுத்தர ஒரு மீட்பர் பிறப்பார் என இறைவனால் முன்மொழியப்பட்டது. திரு விவிலியத்தின் பழைய ஏற்பாட்டிலும், மறு சமய நூல்களிலும் இறைவன் இவ்வுலகிலும் மக்கள் மேலும் அக்கறை கொண்டு, காலத்திற்குக் காலம் புனிதர்களையும் தீர்க்க தரிசிகளையும் அனுப்பியுள்ளதாக அறிகிறோம். இறைவன் தன்னைப் பல வழிகளில் வெளிப்படுத்தியுள்ளார். இந்து, வைஸ்ணவ மரபில் அநீதி ஆட்கொள்ளும்போது, இறைவன் பல வேளைகளில் தன்னைப் பல வடிவங்களில் தோன்றி நீதியையும் தர்மத்தையும் இவ்வுலகில் நிலைநாட்டியதாக அறிகிறோம்.

கிறிஸ்துவின் பிறப்பில் இறைவன் ஒரு உருவம் மட்டும் எடுக்கவில்லை. அவர் இயேசுவில் மனிதனானார். மானிட வடிவத்துள் புகுந்தார். காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். இறைவனை அந்த இனத்தாரைப் பல்கிப் பெருகச் செய்தார். அவர்கள் மகிழ்சியை மிகுதிப்படுத்தினார். அறுவடை நாளில் மகிழ்ச்சியுறுவது போல் அவர் திருமுன் அகமகிழ்கிறார்கள் மிதியான் நாட்டுக்குச் செய்தது போல் அவர்களுக்குச் சுமையாக இருந்த நுகத்தை அவர் உடைத்தெறிந்தார். அடிமையின் தளைகளை கட்டவிழ்த்துவிட்டார். அவர்களை ஒடுக்குவோரின் கொடுங்கோலை அவர் ஒடித்தெறிந்தார். போர்க்களத்தில் போர்வீரர் அணிந்திருந்த காலணிகளும் இரத்தக்கறை படிந்த ஆடைகள் அனைத்தும் நெருப்புக்கு இரையாக எரிக்கப்படும், ஏனெனில் ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார். ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார். அவர் நமக்குள் குடி கொண்டார். அவர் இம்மானுவேல் என அழைக்கப்பட்டார். அதாவது இயேசு நம்மோடு என்று பொருள்படும். அவர் அதிகாரப் பலத்தோடு வருகை தரவில்லை ஒரு சிறு பாலகனாக அவதரித்தார். விசித்திரமான

படிப்பகம்

www.padippakam.com



அற்புதங்களைப் புரியவில்லை. மாறாக மனமாற்றத்தை விரும்பினார். அத்துடன் நீதியும் அன்பும் அறமும் அரசோச்சும் ஆட்சியை எதிர்பார்த்தார்.

அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு உரிமைகள் பறிக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டவர்கள், செய்யாத குற்றத்திற்காகச் சிறையிலடைக்கப்பட்டு சித்திர வதைகளுக்குட்பட்டவர்கள். யாவராலும் கைவிடப்பட்டு தனிமையில் நாம் ஏன் இன்னும் உயிரோடு வாழ வேண்டும் என்று மனவிரத்தியுற்றோர், தீராத நோயில் வீழ்ந்து சுகம் பெறத்துடிப்போர். வலுவற்றோர், வறுமையுற்று, சிறுமையுற்றோர் இவர்களுடன் தன்னை ஐக்கியமாக்கினார். அதிகாரமும், இராணுவ ஆட்சிப் பலமும் கொண்ட அராஜக அரசினாராலும், பட்டத்தையும் பதவியையும் பேரையும் புகழையும் தக்க வைத்துக் கொள்வதற்காக உண்மை நீதி நேர்மை நியாயம் என்பவற்றைக் குழி தோண்டிப் புதைத்துவிட்ட அநியாய வாதிகளாலும் அற்ப சொற்ப சலுகைகளுக்காக அதர்மத்தின் வழியில் நடந்து, சொத்து சுகம் சேர்க்க வேண்டும் என்பதற்காக குற்றமற்ற இரத்தங்களைக் காட்டிக் கொடுத்து வயிறு வளர்க்கும் எட்டப்பர்களால், உத்தமமான பக்தர்கள் தாம் மட்டும் தானென்று வேடமிட்ட தலைமைப் பணியாளர்களால் அமரகாவியம் இயேசு பிடிபட்டு நையப் புடைக்கப்பட்டு, அடிபட்டு, உதைபட்டு, பரிகசிக்கப்பட்டது, தம் கடைசித் துளி குருதியை இளக்கும் வரை சிலுவையில் அறையப்பட்டும், அவர் உலகை, உலகத்தின் மக்களைக் கை நெகிழவில்லை. தனது ஆவியை அனுப்பி தனது சீடர்களின் மூலமாகவும், தொடர்ந்து மக்களை வழி நடத்தி ஒளி கொடுத்து மக்களே தங்கள் வரலாற்றை உருவாக்க வேண்டுமென விரும்பும் கிறிஸ்து, அவர்களுக்குப் புதிய பார்வை நிலைக்கும் புத்துணர்வு, வரம்பு கடந்த பிரசன்னம், தொடர்ச்சியான உந்துதல்களை வழங்குகிறார். முரண்பாடுகளுக்கு முடிவை அவரே வழங்கவில்லை. ஆனால் மானிடராகிய நாம் உண்மை, நன்மை, நீதி நோக்கிய முடிவை நாமே எடுக்க எம்மைச் சவாலாக்குகிறார். இறுதியில் வெற்றியடையப் போவது, உண்மை, நீதி, நேர்மை, நியாயம், தர்மம் என்று உறுதியுரை பகருகிறார்.

காலங்காலமாகப் புரையோடி இருந்த சமூக மற்றும் இன வேறுபாடுகளைக் களைந்து, நீண்டகாலப் போர் ஏற்படுத்திய உடல் உளப்பாதிப்புக்களையும், இழப்புக்களையும் அழிவின் கரங்களாகக் கொள்ளாமல் ஆக்கத்தின் படிகளாகக் கொண்டு உயர்ந்து எழுந்து செயற்படுவது இன்றைய காலத்தின் கட்டாயமும் அழைப்புமாகும். கிறிஸ்து பிறப்பின் அர்த்தத்தை மக்களுக்கு உணர்த்துவதற்காக புனித நிக்லஸ் முகமூடி அணிந்து கொண்டு இரவிரவாக, ஏழைகள் வறியவர்கள் இல்லங்கள் முன்பாக உணவு பதார்த்தங்களையும் பண முடிச்சுக்களையும் இட்டுச் சென்றார். இன்று ஏழைகளாக, அநாதைகளாக ஒதுக்கப்பட்டவர்களாகக் காணப்படும் எங்கள் உடன்பிறப்புக்களுக்கு எங்களின் நத்தார் பண்டிகையின் பங்களிப்பு என்ன? அநாவசிய கொண்டாட்டங்களுக்கு ஆடம்பரமாக செலவு செய்து, அளவுக்கு அதிகமாக உணவுகளைத் தயார் செய்து பசியாத போதும் புசிக்க முடியாத பட்சத்தில் இரவோடிரவாக கழிவுச் தொட்டிகளில் வீசும் அந்த

www.padippakam.com



உணவுப் பண்டங்களுக்கு செலவிடும் பணத்தை மீதப்படுத்தி, எங்கள் சொந்த மண்ணில் ஒரு நேரக் கஞ்சிக்கு அல்லாடுகின்ற எம் அன்புறவுகளின் பசியகற்ற உதவ வேண்டாமா? எம் சோதரங்களின் வேதனையில் நாங்கள் இன்னும் பார்வையாளர்களாகத்தான் இருக்க வேண்டுமா? பங்காளிகளாக எம்மை இந்தக் கிறிஸ்து பிறப்பின் நினைக் காலத்திலாவது மாற்றிட வேண்டாமோ? இரண்டு ஆமிரத்து இரண்டாம் ஆண்டுகளுகளுக்கு முன்பு பிறந்த கிறிஸ்து பெருமான் இன்று இப்பூவுலகில் பிறப்பாரென்றால், அன்று பெத்லேகமாகக் காணப்பட்ட சிற்றூர் இன்று தமிழீழ மாக மாறாதா? "இதோ உங்கள் யாவருக்கும் மகிழ்ச்சியூட்டும், மாபெரும் நற்செய்தியை அறிவிக்கின்றேன். இன்று தாவீதின் ஊரிலே ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் பிறந்திருக்கிறார்." என்று வான தூதர் இடையர்கள் வாயிலாக எமக்கு அறிவித்தது போல் இதோ என் மக்களே! உங்களுக்கென்று ஒரு தேசம் மலருகின்றது. உங்கள் கண்ணீர்கள் யாவும் துடைக்கப் பெற்று உங்கள் தமிழீழத் தாயகத்திலே உங்கள் கால்களைப் பதிக்கும் நாள் விரைவில் வருகிறது, என்ற நற்செய்தியை மாபரன் இயேசு, வான தூதர் வழியாய் எமக்கு அறிவிப்பார் என்று நம்பிக்கை நிறைந்த வேண்டுதல்களோடு காத்திருப்போம். அதற்கு எம்மை நாம் தூய்மைப் படுத்துவோம். நாம் சகோதரர் என்ற உணர்வோடு பழையன மறந்து புதிய பாதையில் எமது அழகிய நாட்டைக் கட்டியெழுப்பி, ஆயுதத்தில் வைத்த நம்பிக்கையை முற்றும் துறந்து, அன்பு வழியில் அமைதி காண, விடிவு காண முன் வந்திருக்கும் அனைத்து அரசியல் அதிகாரிகள் மற்றோருக்கும் சமாதானத்தின் அரசர் தம் திருக்கர ஆசிகளை அபரிவிதமாகப் பொழிந்து, பாதுகாத்து, வழி நடத்தி வருவாராக.

"விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடி வருகின்றது."

(லூக்கா .1, 79)

இதயமெங்கும் பொங்கும் மகிழ்ச்சி நிறைந்த இனிய நல் கிறிஸ்து பிறப்பின் நத்தார், புதுவருட மங்களகரமான வாழ்த்துக்களுடன்.

சில்லையூர் சிங்கராஜா - Olfen

தவறுகளை ஒத்துக் கொள்ளும் தைரியமும், அதனை திருத்திக் கொள்வதற்கான பலமும் தான் வெற்றி பெறுவதற்கு சிறந்த குணாம்சமாகும்.

(லெனின்)

www.padippakam.com



# நாகரிகம்

நாகரிகம் என்று நினைப்பதால் எல்லோரும் உடம்பில் குத்திக்கொள்கிறார்கள். தாங்கள் பார்ப்பதற்கு அழகாக இருக்கவேண்டும் என்பதற்காகவும் உடம்பில் குத்திக்கொள்கிறார் கள். ஆபரணங்களை உடம்பில் போட்டுக்கொள்வது ஒன்றும் புதிதல்ல. உண்மையுள்ள அடிமைகள் தங்கள் எஜமானருக்கு விசுவாசமுள்ளவர்களாக இருப்பதற்கு அடையாள மாக குத்திக்கொண்டார்கள். பண்டைய நாகரிகங்களிலும் குத்துவதென்பது முக்கியத் துவமுள்ளதாக இருந்திருக்கிறது. அஸ்டெக்குகளும், மாயா சமுதாயத்தினரும், ஆன் மீக நம்பிக்கைகளின் காரணமாக தங்கள் நாக்கில் குத்தியிருக்கிறார்கள். உதட்டில் குத்திக்கொள்வது இன்னும் ஆபிரிக்காவிலும், தென்அமெரிக்க, இந்தியர்கள் மத்தியிலும் பழக்கமாக இருந்து வருகிறது. மேல்வநீசியர்கள், இந்தியர்கள், பாகிஸ்தானியர்கள் மத்தி யில் மூக்கில் குத்தி பலவகையான அலங்காரப் பொருட்களை அணியும் பழக்கம் காணப்படுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்புவரை மேற்கத்திய உலகில் பொதுவாக பெண்கள் தான் காதுகளை குத்திக்கொண்டனர். ஆனால் இப்போது ஆண்களாக இருந்தாலும் பெண்களாக இருந்தாலும், பருவ வயதினரும், இளம் பிள்ளைகளும் உடலில் எங்கு எல்லாம் ஆபரணம் அணியமுடியுமோ அங்கெல்லாம் அணிகின்றனர். இளைஞர்கள் நிறையப்பேர் புருவங்களிலும், நாசித்துவாரங்களிலும், காதுகளிலும், நாக்கிலும், உதட்டி லும், தொப்புள்களிலும் குத்தி வளையங்களையும் நகைகளையும் அணிந்து கொள்கின் றனர். சில இளைஞர்கள் சுதந்திரமாக இருப்பதைக் காட்டி கொள்ளுவதற்கும் தாங்கள் எல்லோரையும் போல இல்லை என்பதையும் காட்டிக்கொள்வதற்கும், தங்களுக்கு என்று ஒரு தனித்தன்மை வேண்டும்என்பதற்காகவும் குத்திக்கொள் கின்றனர்.

பிரபலங்கள் மத்தியில் உடலில் குத்துவது, ஆண்கள் காதணிகள் அணிவது மதிப் புள்ளதாக இருந்தாலும் மேற்கில் இது இன்னும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப் படவில்லை. நீண்டகாலமாக சிறைவாசிகள், மோட்டார் சைக்கிள் ரவுடிக்கும்பல்கள், ராக் இசைக்குழுவினர்களின் முத்திரையாகவே இருந்தது. இதற்கு ஒரு காரணம் என லாம். காதில் மேல்புறத்தில் பல ஓட்டைகள் குத்துவதால் நோய் தொற்றிக்கொண்டால் காதின் மேற்புறவளைவை இழக்க நேரிடலாம். காதின் கீழ்ப்பாதியில் குத்துவது சரியானதே. உடலில் சில இடங்களில் குத்துவது ஆபத்தானது. அநேகருக்கு இதில் பயிற்சி இல்லாது இருப்பதும், நண்பர்களிடம் அல்லது பத்திரிகைகளில் படித்தும், வீடியோக்களைப் பார்த்தும் கற்றுக்கொண்டிருப்பார்கள். சுகாதார முறைப்படி எப்படி செய்வது என்பதும் தெரியாது இருக்கும். உடல்உறுப்புக்களின் அமைப்பு தெரியாது இருக்கும். தவறான இடத்தில் குத்துவதால் நரம்பு வெட்டப்பட்டு நிரந்தரமான சேதம் ஏற்படும். நோய்தொற்றும் வாய்ப்பும் இருக்கிறது. குத்திக்கொள்வது குறித்து உங்களுடைய தனிப்பட்ட கருத்து என்னவாக இருந்தாலும், உங்களுடைய தோற்றம் உங்கள் மனப்பான்மையையும், வாழ்க்கைப் பாணியையும் குறித்து இருக்கின்றன என்ற உண்மையை மறுக்கமுடியாது. உங்களைச் சுற்றியுள்ள உலகம் அதன் வார்ப்புக்குள் உங்களை திணிக்க அனுமதியாதீர்கள். ஏனென்றால் நீங்கள் தான் அதனால் வரும் விளைவுகளோடு வாழவேண்டும்.

*திருமதி ரஞ்சனா தவராஜ்.* – Wadgassen

www.padippakam.com



## அங்கலாய்க்கும் உலகம் ஆறுதல் பெற முடியாதா?

சிந்திக்கும் ஆற்றலைக் கல்வி என்ற கலத்தின் வழியே செலுத்தும்போது, உலகத்தைக் காக்கத்தக்க திசையை நோக்கிச் செலுத்தும் பொறுப்பே மிகவும் முக்கியமானது என்பதை நினைவில் இருத்தி வர வேண்டியது மிக முக்கியமாகும். இதில் தவறிக் கொண்டிருக்கின்ற அறிவுலகமானது, முன்னேற்றத்தை விரைவதாக நினைத்துக்கொண்டு, முழு அழிவை நோக்கித்தான் செல்ல விரைந்து கொண்டிருக்கின்றதோ என்று உலகின் ஒரு பக்கம் இன்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றது.

உலகம் வேறு, நாம் வேறு என்று நம்மை நாமே அன்னியப்படுத்திக் கொள்ளும் பலவீனமான மனப்பான்மை, தனிமனித சிந்தனையிலிருந்து அகல வேண்டும். அகன்றால்தான் உலகத்தை அவதானிக்கும் கடமையை நமது மனம் உணர முடியும். ஒரு சந்ததி முற்று முழுதான வறுமையிலும் நோயிலும் வாடி, வதங்கி, அழிந்து கொண்டிருப்பதை அது செயற்கையானது என்று தெரிந்திருந்தாலும்கூட, சும்மா பார்த்துக் கொண்டிருக்கும் உலகநாடுகள், தாம் அழிவுக்கான ஆயுத உற்பத்திக்குச் செலவிடும் பணத்தில் கொஞ்சம் நிறுத்தினாலும்கூட உலக வறுமை ஒழிக்கப்பட்டுவிடப் பெரும் பங்காற்றல் முடியும்.வறிய நாடுகள், பணக்கார நாடுகள் என்ற நிலைமையை மாற்றும் எண்ணம் இல்லாத உள்ளுணர்வுதான் நோயை முழுக்கக் குணப்படுத்திவிட வழி செய்யாது, மீண்டும் மீண்டும் தொடர வைத்து, அதில் பணம் பண்ண விழையும் கொடூர புத்தியுள்ள வைத்தியனாக அரசியலுலகை ஆட்டிக் கொண்டிருக்கின்றது என்ற உண்மை கசந்தாலும் மறுக்க முடியாததாயிருக்கின்றது.

பாதுகாப்பு என்பது என்ன? நிம்மதிதானே! தனக்கு வேண்டும் அதை, மற்றவர்க்கு மறுக்கும் கொள்கையை எப்படி அதற்குள் வகுக்க முடியும்? பெரிய நாடுகள் சிறிய நாடுகளின் வளர்ச்சியை மனதார அங்கீகரித்தால், அதற்கான நடவடிக்கையை சரியாக எடுத்தால், வறுமை இன்று நிரந்தரமாகப் பூட்டி வைக்கப்பட்டு விட முடியும்.

ஆனால் அதுபற்றிய தனிமனித சிந்தனையும் கல்வியும் அரசியலும் கனவில் காடேகித் தேன் சேர்க்க முனைகின்றன. அதனால்தான் நடக்குமா, நடக்காதா என்று சந்தேகிக்கும் நிலையில் நமது சிந்தனைகளும் சுழன்று கொண்டிருக்கின்றன. அழிவாயுத பலம் மிகுந்தால்தான் உலக அரசியல் அரங்கில் உயர் இடம் கிடைக்கும் என்பதும் அப்படி இருப்பதே கௌரவம் என்பதுமாக உலகம் அழிவில் பெருமையைத்தேடி நிற்கும் வழிமுறையின் பின்னணியில், அமைதிக்கான அடிக்கல்லைத் தகர்க்கும் தவறு பொதிந்து கிடக்கின்றதே! இதை வல்லரசுகள் இருக்கின்றன? உணராமலா

வாழ்வழிக்கும் ஆயுதங்களின் உற்பத்திக்குத் தொழிற்கூடமமைத்து வாழ்வளிக்கவும் தொழில் அளிக்கவும் அவை அவசியம் என்று கருத்துச் சொல்லும் வல்லரசுக்களின் கொள்கையில் நியாயம் நசுங்குகின்றதே! இதை உலகம் உணர முடிகின்றதா? வீடும் நாடும் நல்லதைச் செய்வதில் இணைந்து சிந்தித்தால், வீதியில் தொடங்கி, ஊர் வரை வளர்ந்து, உலகமே வியக்கும் ஆற்றலை ஒவ்வொரு நாடும் பெற்றுத் திகழ முடியுமே! இது ஏன் இருக்க முடியாத கானல்போல் இருந்து கொண்டிருக்கின்றது?

போதிப்பவன் பொய்யனென்றால் போதனையில் பொய்தான் இருக்கும். அந்தப் பொய்

படிப்பகம்

www.padippakam.com



மனதில் அழுந்தினால் வளர்வதும் வளர்ப்பதும் பொய்யாகவே இருக்கும். இன்றைய உலகின் பயங்கரவாதங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் இந்தப் பொய்மையின் பிரதிநிதிகளின் பங்களிப்புத்தான் தொண்ணூறு வீதம் பொறுப்பு. மதங்களென்றும் மார்க்கங்களென்றும் அமைக்கப்பட்ட வழிகாட்டும் கருவிகளில் பொய்யையும் மோசடிகளையும் புகுத்தி நிறைத்துக் கெடுத்துவிட்டு, பற்றுக்களுக்கு வெறியூட்டிவிட்ட இந்த அராஜகிகளால்தான் இன்று உலக நிம்மதிக்கே உலை வைக்கப்பட்டுக் கிடக்கின்றது. தனிமனித உரிமைகளை சாதிகளின் பெயர்களினாலும் மதங்களின் பெயர்களினாலும் மொழிகளின் பெயர்களினாலும் ஊர்களின் பெயர்களினாலும் பணபலமும் ஆள்பலமும் கொண்டு, மனிதரில் ஒரு பகுதியினர் திட்டமிட்ட விதத்தில் நசுக்கி, நாசப்படுத்திக் கொண்டிருப்பதை அரசியலுலகம் அறிந்தும் அறியாதது போல அலட்சியப்படுத்திக் கொண்டு, தனது சுயநல வெற்றிக்காக ஒதுங்கி நிற்பதால் கண்ணீரே நித்தியமாய் மனிதத்தின் ஒரு பகுதியின்மேல் விழுந்து கொண்டிருப்பதை எந்த அடிப்படையில் அங்கீகரிப்பது நியாயமாக இருக்க முடியும்?

சுதந்திரமும் வாழ்வுரிமையும் இயற்கையானவை. அவற்றைக் கண்டிக்கப் போடப்படும் மனசாட்சியற்ற தடை முறைகள் அனைத்துமே மனித உரிமை மீறல்கள்தாம். ஆனால் ஒரு நாட்டிலாவது இதன் தவிர்ப்பிற்கான முன்மாதிரிகை காணப்படவில்லையே! எல்லாமே வலிமையின் அடிப்படையில்தான் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற, பகிரங்கமாக வெளிப்படுத்தப்படாதஇ கொள்கையொன்று நடைமுறையில் இருப்பதுதான் இதற்குக் காரணமா?

அதுதான் சரியென்றால் பலாத்காரமே சரியென்றதாகக் கணிக்கும்படி நேர்கிறதே! இதன் மூலம் நெருப்பை அணைக்க நெருப்பையே நாட விழையும் தவறுக்கு அத்திவாரம் உருவாகின்றதே! இதனால் எவருக்கும் மிஞ்சப் போவதென்னவாம்? சாம்பலே வெற்றியென்றால் சத்தியம் செத்துப்போகுமே! நியாயத்தை நினைப்பதும் அதைப்பற்றி யோசிப்பதும் அதுபற்றிப் பேசுவதும் கலந்துரையாடுவதும் வீண் கால விரயமான முயற்சிகள் என்ற கருத்து நம் மனங்களில் பலவற்றில் இன்று மிதந்து கொண்டிருக்கின்றதே! இது செயற்கையை இயற்கையாய் ஏற்றுக் கொள்ளும் பலவீனமல்லவா! இது சரியா? நியாயமா? தொடரலாமா? தனி மனித சிந்தனை மற்றும் மன பலவீனம்தான் இன்றைய உலக பலவீனமாக வளர்ந்து வருகின்றன என்பது கவனிக்கப்படுகின்றனவா? தனி மரத் தொகுப்பே தோப்பாகுகின்றது. தனி மனிதத் தொகுப்பே சமுதாயமாகுகின்றது.

ஒவ்வொரு தனிமனிதனின் நடத்தையும் நடவடிக்கையும் ஒரு சமுதாயத்தில் சில சந்தர்ப்பங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திவிடக் கூடும். உலக சரித்திரத்தில் பதிந்துள்ள வரலாற்றுப் பதிவுகளின் முக்கிய இடத்தில் தனி மனிதர்களே இடம் பெற்று இருக்கிறார்கள். ஒரு புத்தர், ஒரு காந்தி, ஒரு விவேகானந்தர், ஓர் இயேசு, ஓர் கிட்லர், ஓர் அலெக்சாந்தர், ஒரு நெப்போலியன் , ஓர் இந்திரா, ஒரு கார்ள் மாக்ஸ், ஒரு பண்டாரநாயக்கா என்று சரித்திரத்தை மாற்றி வைத்தவர்கள் தனிமனிதர்களே என்ற உண்மை கடந்த காலத்துக்கு மட்டும்தானா பொருந்தும்? நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் கூடப் பொருந்துகின்றதல்லவா?

அப்படிப் பொருந்துமென்றால, பொருந்த வேண்டுமென்றால் அதற்குள் நாம் ஒவ்வொருவரும் அடங்கியாக வேண்டுமா, இல்லையா?

---

1. கொள்ளியைச் சுமக்கும் அன்பனே!

அதை வைத்துவிட்டு, ஒரு விளக்கைப் பிடிக்க வா!

உலகம் இருண்டு கிடக்கின்றது. அதன் இருளை அகற்ற நாமும் உதவ வேண்டியிருக்கிறது.

2. கோவிலைச் சுற்றித் திரியும் நண்பனே!
சற்று நகர்ந்து இப்பக்கமாக வா!
இறைவனை அழைத்து வந்து உள்ளே இருத்த வேண்டும். ஏனெனில் அவரை மனிதாபிமானமின்மை என்ற சவுக்கால் அடித்துப் பாவிகள் வெளியே துரத்தி விட்டிருக்கிறார்கள்.

3. நடந்து செல்லும் சகோதரனே! உன்னைச் சுற்றிலும் பசியால் வாடும் மனிதர்களை அடையாளம் காண்கிறாயா? வா. வந்து பார். உண்மையான ஏழைகள் பலரும் தன்மான உணர்வினால்
வறுமையைச் சிரித்துக் கொண்டே சகித்துக் கொண்டிருக்கும் அநியாயம் நடந்து கொண்டிருப்பதை அவதானித்துப் பார். சரியானவர்களைத் தேடிச் சரியாக உதவி செய்ய, சரியான மனிதர்களை உலகம் தேடிக் கொண்டிருக்கிறது. நீ உனது பங்களிப்பை ஏதோ ஒரு விதத்தில் உண்மையாக செய்ய நினை.

4. நாம் வாழ வேண்டும். ஆனால் சரியாக வாழ வேண்டும். அதற்கு, சரியென்றால் என்னவென்று சரியாகத் தெரிய வேண்டும். இதற்கான பயிற்சியை நீயே உன் அனுபவத்தால் தேடிப்பார்க்க முயல வேண்டும். தேடியதை அறிவோடு மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள முன் வருவாயா?
ஏனெனில் தனிமனித அலட்சியங்கள்தான் சமுதாய விரோதிகளின் வெற்றிப்படிகளாக இருக்கின்றன. அவர்களை ஏற விட்டு விட்டால், நீதான், உன் சமுதாயம்தான் மிதிபட்டு மூழ்கிப்போகும். மறந்து விடாதே!

5. பகலில் விளக்குகள் தேவையில்லை. ஆனால் பகலே இரவானால்?
இதுதான் இன்றைய உலகமாக இருக்கின்றது. ஆகவே விளக்குகள் இரவும் பகலும் தேவைப்படும் அத்தியாவசியங்களாகிவிட்டன.
அந்த விளக்குள் நீயும் நானும்தான் என்று நினைத்தாலே நல்லது செய்யும் நல்ல எண்ணங்கள் நமக்குள் உருவாகும். இதுவரை நீ இதை அனுபவப்பட்டிருக்காமலிருக்கலாம். பரவாயில்லை. இன்றிலிருந்தாவது கொஞ்சம் கொஞ்சமாக இந்தக் கடமைக்கு உனது பங்களிப்பையும் நல்க முனைந்து வா! நிமிர்ந்து வா! துணிந்து வா!
ஏனெனில் இன்றைய உலகில் புண்ணியங்கள் புதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நாம்தான் நம்மால் இயன்றதைச் செய்து அவற்றைக் காப்பாற்ற வேண்டும்.

6. உன்னருகினிலே இருக்கும் சூழலைக் கவனித்துப் பார். ஓராடைக்கு மேலில்லாமல் மானம் காக்க மறுவழியின்றி சித்திரவதைப்பட்டுக் கொண்டிருக்கும் உன்னைப்போல சகோதர இரத்தங்கள் ஓராயிரம் மௌனமாக அழுது கொண்டிருக்கின்றனவென்பது தெரியும். உலகக் கவர்ச்சியில் இழுபடும் உன் மனதை ஓரிரு நிமிடங்கள் இவர்களுக்காகவும் நீ சிறிதுநேரம் ஒதுக்கி,
எப்படி உதவலாம் என்று நினைத்துப் பார். உன் பிறப்பின் பெருமையே அதில்தான் இருக்கின்றது. மற்றவரை நினைக்காத மனம் வளர்ந்திருந்தால் சட்டமும் திட்டமும் நீதிகளும் மருத்துவமும் உனக்கு இன்று நீ கேட்காமலே கிடைக்கத்தக்க அத்திவாரம் அமைந்திருந்திருக்குமா? உனக்காக உன்னை அறிந்திராதவர்கள் நினைத்துச் செய்தவைகள்தாம் இன்று உன்னைக் காத்து நிற்கின்றன. அதைத் தொடருவது உன் கடமையும் தானென்று உனக்குப் புரிகிறதா?

www.padippakam.com



7. ஓ! என் நண்பனே! நீ வெறும் தனி நபர் அல்லன். நீயும் ஒரு தூணன். சமுதாயத்தின் தாங்கி. இதை மறந்துவிட்டு, மற்றவர்களிடம் உன் கடமையை எதிர்பார்க்காதே! உன் பங்களிப்பைக் கொடிகட்டிச் செய்ய வேண்டாம். உன் சக்திக் கேற்ப சின்னஞ் சிறிதாகவாவது செய். செய்தே தீருவேன் என்று உறுதி எடு. அடுத்தவர்க்காகச் செய் அடுத்தவர் பார்க்கச வேண்டும் என்று செய்யாதே! உன் தர்மம் உன்னைக் காக்கும். அது உன்னையும் அறியாமலே உன்னை உயர்த்துகின்றதா இல்லையா என்று அனுபவப்பட்டுப் பார். தர்மத்தின் சக்தி சொல்லிப் புரியாது. அனுபவப் பட்டுத்தான் புரிய வேண்டும்.

8. கோவில் விளக்கு எரியநீ கொடுக்கும் எண்ணெய்யில் சிறிதளவை ஓர் ஏழையின் வீட்டின் விளக்கெரியவும் பசி தணியவும் கொடுத்துவி விட்டு அமைதியாக அந்த இதயங்களின் நன்றிப் பிரதிபலிப்பை அவதானித்துப் பார். இறைவன் உன் கண்முன்னே நிற்கின்றானா இல்லையா என்று தெரியும்.

சத்தியம் சாகக் கூடாது என்றால் நீ தூங்கக் கூடாது. உலகம் நிறைவுற வேண்டுமென்றால் வறுமை வாழக் கூடாது. அழிய வேண்டும். அதற்கு உன் ஒவ்வொரு கரமும் இயங்க வேண்டும். செய்வாயா?

எழிலன்

குறிப்பு: இது எனது புதிய நூலான "இறைவா! கொஞ்சம் நில்லு" என்ற நூலில் இடம் பெறவிருக்கின்றது.

## தீமை கொல்லும்

பழிவாங்குவது ஆரம்பத்தில் இனிக்கும். சிறிது போதில் கசப்பாக மாறும். இறுதியில் எய்தவனையே திரும்பி வந்து கொன்று விடும்.

✣ ✣ ✣ ✣ ✣ ✣

நம்மை மற்றவர்கள் எப்படி நடத்த வேண்டும் என்று நினைக்கிறோமோ, அப்படியே நாம் மற்றவர்களை நடத்த வேண்டும்.

✣ ✣ ✣ ✣ ✣ ✣

பேராசை கொண்டவர்கள் என்றுமே திருப்தியடையமாட்டார்கள் என்றும் பெரும் துன்பமே அடைவார்கள்.

மானிடப்பிரியனின்
தொடர்கதை........

அத்தியாயம் – 3

# கானல்

நீண்ட நேரமாக சினோ விழுவது நிற்கவில்லை. பஞ்சுகள் பறப்பதுபோல், வெள்ளை, வெள்ளையாக பார்ப்பதற்கே அழகாக இருந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை ஊரே அமைதியில், வீதியில் வாகனங்களின் போக்குவரத்துக்கள் மிகவும் குறைவாகவே காணப்பட்டன. அவனது வீடு மலைக்கு மேல் இருந்தது. ஜேர்மனியில் உள்ள வெஸ்ற்பார்லின் மாநிலத்தில் உள்ள கொக்சவலர்லாண்ட் எனனும் பகுதியில் பிற்லோன் என்னும் கிராமம். அவன் விரும்பித் தெரிவுசெய்த அழகான கிராமம். வெய்யில் காலத்தில் என்றாலும் பனி விழும் காலம் என்றாலும் சரி அமைதியும், அழகுமாக இருக்கும். உயர்ந்த மலைகள் நிறைந்த பிரதேசம். மழைவீழ்ச்சிக்கும் பனிவீழ்ச்சிக்கும் பெயர்போன பகுதி. இம்முறை நல்ல வின்ரர். நிறையவே சினோ விழும். எங்கும் எங்கும் வெள்ளைக் கம்பளம் விரித்ததுபோல். வெய்யில் படும்போது கொட்டிப் பரவி விட்ட வைரத் துகழ்களின் மேல் ஒளித்தெறிப்பு நிகழ்வது போல் கண்கள் பனிச்சிடும்.

மாதவன் கண்விழித்தபோது நேரம் காலை 8 மணியிருக்கும். அவன் படுக்கைக்குப் போகும் போது அதிகாலை இரண்டு மணி. கொஞ்ச நாளாக அவன் என்றுமில்லாத உற்சாகத்துடன் காணப்பட்டான். மனதில் மகிழ்ச்சி. நேற்று மாலையில் இருந்து இலங்கைக்கு ரெலிபோன் எடுத்து அலுத்துப் போய்விட்டது. தொலைபேசித் தொடர்பு கிடைக்காமல் மனம் வேதனைப்பட்டது. இரவு 8 மணிக்குப் பிறகு அவன் முயற்சிக்கவில்லை, அவர்கள் அங்கே படுத்திருப்பார்கள். மற்றவர்களுக்குத் தொந்தரவு செய்வதை அவன் விரும்பவில்லை. படுக்கையைவிட்டு எழவே மனமில்லை. கார்த்திகை மாதம் கடும் குளிர். இரவு அவன் மெசட நககருக்குப் போய் வீட்டிற்கு வரும்போது கார் ஓடும் போது இருந்த கஸ்ரம் அவனுக்குத்தான் தெரியும். மெசடே கொக்சவல்ர்லாண்டில் கொஞ்சம் பெரிய பட்டினம். நிறையக் கடைகள். தலைமை அலுவலகங்கள் யாவும் அங்கேயே இருந்தன. அவனது நெருங்கிய நண்பன் குமார் மெசடெயில் தான் இருந்தான். நேற்று மாலை குமாரைச் சந்திக்கப் போன மாதவன் நீண்ட நேரமாக அவனுடன் பேசிக்கொண்டிருந்தான். அவன் அங்கு நிற்கும்போதே பனி விழ ஆரம்பித்தது. அவன் வீட்டிற்குப் புறப்படும்போது கலா சொன்னாள், "அண்ணன் நின்றிட்டுக் காலையில் போகலாம். காலநிலை அவ்வளவு சரியில்லை, தெரியுந்தானே மெசடே பிறிலோன் பாதை சினோ விழுந்தால் ஓடவே முடியாது. இன்று சனிக்கிழமை உப்பும் போடமாட்டார்கள்..." கலா, குமாரின் மனைவி. குமார், மாதவனின் நீண்டகால நண்பன். இருவரும் ஒன்றாகவே இலங்கையில் இருந்து வந்தார்கள்.

www.padippakam.com






குமாரும் சேர்ந்தே மறித்தான். "இல்லை குமார்... நான் அவருக்கு ரெலிபோன் எடுக்கவேண்டும். ஆட்கள் வந்துசேர்ந்தினமோ தெரியவில்லை... பலமுறை எடுத்துப்பார்த்திற்றேன், லயின் கிடைக்கவில்லை. இவங்கட ரெலிபோன் காட்டும் இப்படித்தான். விளம்பரம் என்றால் அந்தமாதிரி. எந்தனை காட் மாறி மாறி வாங்கிப் பார்ப்பது. நேரே நின்றால் அந்தமாதிரிப் பேச்சுவாங்குவார்கள். ஒன்றைப் பார்த்து ஒன்று. எல்லாமே அப்படித்தான்...!" அவன் ஆத்திரத்துடன் கத்தினான். குமார் கலாவுக்கு கண்ணைக் காட்டினான். மாதவனுக்குக் கோபம் வருகிது... எல்லாம் புனிதம் வரும்வரை." "நீங்க சும்மா இருங்கோ! பின்ன இருக்காதே. 12 வருசத்திற்குப் பிறகு கதைக்கப் போகினம். ஆசையாகத் தானே இருக்கும்! நான் கொழும்பில் நின்றபோது ஒரு நாளைக்கு நீங்கள் எத்தனை தரம் எடுப்பியள்...!" கலா மாதவனுக்காக வக்காலத்து வாங்கினாள். "நீ மாத்திரம் என்ன. தற்செயலாக மணித்தியாலக்கணக்கில் எடுக்காமல் விட்டால், ஏன் இவ்வளவு நேரமாக எடுக்கேல்லையென்று கோவிச்சிற்று கொஞ்ச நேரம் கதைக்காமல் இருப்பாய்...!", "சரி சரி. எங்கடை கதையை விட்டுட்டு. மாதவன் அண்ணனை மறியுங்கோ! இங்கேயும் ரெலிபோன் இருக்கு. எடுத்துப் பார்க்கலாம்தானே. சாப்பிட்டுவிட்டு நாளைக் காலையில் எழும்பிப் போகலாம். அங்கே போயிருந்து புனிதத்தை நினைத்து நித்திரை கொள்ளாமல் விழித்திருப் பதைவிட்டு, இங்க நிற்கலாம் தானே..?"

மாதவன் பல தடவைகள் குமார் வீட்டில் படுத்ததுண்டு. ஆனால் இன்று அவனுக்கு அங்கு நிற்க முடியவில்லை. மற்றவர்களுக்கு முன்னால் அவளுடன் முதலில் கதைப்பது ஒருமாதிரி இருந்தது. அது வெட்கமாக இருக்குமோ! என்று யோசிக்கவேண்டிய நிலையில் மாதவன் இருந்தான். வெட்கம்தான். இருவரும் எவ்வளவு தூரம் மறித்தும் மாதவன் நிற்கவில்லை. "கலா பிட்டைக் கட்டிக் கொடுத்துவிடு அவன் வீட்டிற்குப் போய் கற்பனையில் மிதக்கட்டும்."

அவன் வீட்டிற்கு வரும்போது மாலை 7.30 மணியிருக்கும். வந்தவுடனேயே பல தடவைகள் ரெலிபோன் எடுத்துப்பார்த்தான். கிடைக்கவில்லை. வவுனியாவுக்கு வந்து அவர்கள் மாவனுக்கு ரெலிபோன் எடுக்கவில்லை. பதிலாக டெய்சி ரீச்சருக்குச் சொல்லியிருந்தார்கள். இன்றைக்கு அவர்கள் எப்படியும் இங்கு வருவார்கள் என்று டெய்சி ரீச்சர் சொன்னார். பிறகு எடுத்துப்பாருங்கோ என்று அவதான் சொன்னா. அவனுக்கு தொலைபேசித் தொடர்பு கிடைக்காதது எரிச்சலையூட்டியது. கலா கட்டிக்கொடுத்த பிட்டைப் பிரித்துச் சாப்பிடுவதற்கு முதல் ஒரு பியர் குடித்தால் நல்லது போல் பட்டது. பியர் ஒன்றை எடுத்துக் குடித்தான்.

அவன் தனிமையில் குடிப்பது குறைவு. குமார், வேறு நண்பர்கள் வந்தால் சந்தோசம் தானே! கலா வந்தால் அவளே சமையலைக் கவனிப்பாள். அலட்டல், அசைல் என்றுகலா மனம்விட்டுச் சிரிப்பாள். புனிதத்தைப் பற்றிக் கதையும், காதல் விவகாரமும். மாதவனின் மனதில் இருந்து வெளியில் வரும். கண்ணீரும் வரும். மறுநாள் எழுந்திருக்கவே மனம் கூசும். கலாவின் நக்கல் கதைகள் அடுத்த நாள் அவனை வெட்கித் தலைகுனியவைக்கும். எத்தனை வருடங்கள் காத்திருந்த காதல். இப்போதுதான் அவளை அனுப்புவதற்கு தாய் சம்மதம் தெரிவித்துக் கடிதம் எழுதியிருந்தா. அவன் எதிர்பாராத நேரத்தில் இந்தச் சந்தோசச் செய்தி கிடைத்தது. அவனுக்குத் துள்ளிக்குதிக்க வேண்டும்போல் மகிழ்ச்சி. குமாருக்கும் கலாவுக்கும் தான் புனிதம் வரப்போகின்றாள் என்பதை ரெலிபோனில் சொன்னான். அவர்களுடன் விருந்துண்டு மகிழ்ந்தான். அதன் பிறகு அவன் வருவதற்கு வேண்டிய முயற்சிகளை மள மள வென்று மேற்கொண்டான்.

அநேகமாக நேற்றிரவு நீர்கொழும்பிற்கு வந்திருக்கவேண்டும். போர்வையை விலத்தி ரெலிபோனை எடுத்தான். அப்போது ரெலிபோன் மணி ஒலித்தது. றிசீவரை எடுத்தான். "...கலோ! இலங்கையில் இருந்து கதைக்கிறம். மாதவனுடன் கதைக்கலமோ!..." அவனுக்கு உடலில் நடுக்கம் எடுத்தது. "...கலோ!"......

வளரும்....

www.padippakam.com



# செய்திச்சாரம்

**இலங்கை:**

14-11-02

- முஸ்லீம்-சிங்கள மக்கள் மத்தியில் கலவரம், கொழும்பு மாளிகாவத்தையில் கலவரம், பல வியாபாரதாபனங்கள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன. சிங்கள-பௌத்த வெறியரின் அட்டூழியம்.
- யப்பானிய உயர்மட்டக்குழு ஒன்று வன்னிக்குச் சென்று பல இடங்களையும் பார்வையிட்டனர்.

18-11-02

- இலங்கை இராணுவத்திலிருந்து இதுவரை 45000 பேர் தப்பியோடி தலைமறைவாகி உள்ளனர். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம் பெறும் குற்றச்செயல்களில் இவர்களே ஈடுபட்டு வருகிறார்கள் எனத் தெரிய வந்துள்ளது.
- கல்வி அமைச்சின் தேசிய விளையாட்டு போட்டிகள் கொழும்பு *சுகததாசா* விளையாட்டரங்கில் நடைபெற்றபோது முற்று முழுதான சிங்கள மொழிப் பிரயோகத்தால் தமிழ் மாணவர்கள் பாதிப்பு.

20-11-02

- தமிழ் ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இதுவரை 3768 பெண்போராளிகள் மாவீரர்கள் ஆகி இருப்பதாக "சுதந்திரப் பறவைகள்" பத்திரிகை தெரிவித்துள்ளது.
- மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைக்குச் சென்றோர்களில் 2 மாதங்களில் 66 பேர் மரணம். தொழில் புரியச் சென்ற இலங்கை வாசிகளின் 66 சடலங்களும் கொழும்பு வந்து சேர்ந்தன.
- 2002 நவம்பர் மாதம்வரை இலங்கையில் 436 எய்ட்ஸ் நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர். இவ்வருடம் தை தொடக்கம் ஆவணி வரை 9 குழந்தைகளுக்கும் இந்நோய் பிடித்துள்ளது. தற்போது 7200 பேர் வைரஸ் தாக்கத்தால பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

22-11-02

- தேயிலை உற்பத்தி, கடற்தொழில் அபிவிருத்திக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 5 கோடி டொலரை இலங்கைக்கு வழங்க இருக்கின்றது.
- இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் 70மில்லியன் டொலரை நிதி உதவி வழங்க இருப்பதாக நோர்வேயில் நடைபெற்ற மகாநாட்டில் தீர்மானம்.
- சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் இரண்டாகப் பிளவு ரணில் அரசின் புதிய நெருக்கடி.

06-12-02

- இலங்கை இனப் பிரச்சனை தீர்வுக்கு சமஷ்டிமுறையிலான தீர்வினை ஆராய இருதரப்பும் இணக்கம் ஒஸ்லோ மகாநாட்டில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவுபடிப்பகம்

www.padippakam.com



12-12-02
- தமிழீழ நீதிமன்றம், பொலீஸ், வங்கி, சிறைகளை மூடுமாறு ஜனாதிபதி போலீஸ் மற்றும் முப்படைத்தளபதிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.
- இலங்கை சமாதான நல்லெண்ண நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்த டென்மார்க் நாடு 190 கோடி ரூபாவை கடன் உதவியாக வழங்கவுள்ளது.
- தமிழீழப்பகுதிகளெங்கும் இவ்வருடம் வெகு சிறப்பாக மாவீரர் நினைவு நாள் கொண்டாடப்பட்டது.

26-12-02
- விடுதலைப்புலிகளுக்கு நோர்வேநாடு நவீன ஒலிபரப்புச் சாதனங்களை வழங்கியுள்ளது. „புலிகளின் குரல்" வானொலிச் சேவை விரிவு படுத்தப்படவுள்ளது.
- யாழ்மாவட்டத்தில் 2003ல் மேலும் 20 பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட இருப்பதாக பிரதிப் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் தர்மசிறி தெரிவித்துள்ளார்.
- வடக்கு — கிழக்கு மாகாண புனரமைப்புக்கு உலக வங்கி 3 கோடிடாலர் உதவியை வழங்கியுள்ளது.

உலகம்:—

07-11-02
- மூத்த காங்கிரஸ் தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான வாழப்பாடி இராமமூர்த்தி தனது 62 ஆவது வயதில் மாரடைப்பால் காலமானார்.

14-11-02
- வியட்நாம் வர்த்தகமையப் பகுதியில் தீவிபத்து 100 பேர் வரை பலியானார்கள்.
- இத்தாலியில் பூமி அதிர்ச்சி 26 பேர் பலி, பலர் காயம், பல வீடுகள் கட்டிடங்கள் இடிந்து நாசம்.

16-11-02
- அமெரிக்காவின் கிழக்குப் பகுதியில் சூறாவளி, பலகட்டிடங்கள் சேதம், 35 பேர் பலி. பலரைக் காணவில்லை.

- ஈராக் மீது தாக்குதல் நடைபெறின், 40 மில்லியன் மக்கள் உயிரிழப்பர் என மருத்துவ நிபுணர்குழு எச்சரித்துள்ளது.

- கென்யாவில் விடுதி மீது தற்கொலைத்தாக்குதல், இஸ்ரேலியா விமானத்தை சுட்டுவீழ்த்தவும் தீவிரவாதிகள் முயற்சி, 3 இஸ்ரேலியர் உட்பட 12 பேர் பலி, 80 பேர் காயம்.

www.padippakam.com



20-11-02

- இந்திய காஷ்மீரில் காங்கிரஸ் மக்கள் ஜனநாயகக்கட்சி பதவி ஏற்றுள்ளது.
- துருக்கி நாட்டின் புதிய பிரதமராக அப்துல்லா பதவி ஏற்றுள்ளார்.

05-12-02

- உலக அழகிப் போட்டியை நைஜீரியாவில் நடாத்துவதற்கு, அந்நாட்டு முஸ்லீம்களின் கடும் எதிர்ப்புப் போராட்டத்தில் 200க்கும் அதிகமானோர் பலி.
- லண்டனில் நடைபெற்ற உலக அழகுராணிப் போட்டியில் துருக்கி நாட்டுப் பெண்மணி உலகஅழகியாகத் தெரிவு.

19-12-02

- பங்களாதேஷில் தியேட்டர் ஒன்றில் ஏற்பட்ட வெடிகுண்டு விபத்தில் 15 பேர் பலி, 300 பேர் படுகாயம்.
- அவுஸ்த்திரேலியாவில் ஏற்பட்ட காட்டுத்தீவிபத்தில் 173000 ஏக்கர் காடுகள் எரிந்தன. ஆயிரக்கணக்கான வீடுகளும் எரிந்தன.

26-12-02


- இந்திய — குஜராத் சட்டமன் பேரவைத்தேர்தலில் பாரதீய ஜனதா கட்சி அமோக வெற்றிபெற்றுள்ளது. மொத்தம் 181 தொகுதிகளில் இக்கட்சி 127 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

## சாதுரியத் திறன் விடைகள்

1. கானா
2. காசுப்பியன் சீ ஈரானில் உள்ளது
3. தாய்லாந்து
4. கிவி
5. டயட்
6. விண்வெளியில் முதலில் பயணம் செய்த மிருகம்
7. ஸ்கர்வி
8. பேரரசர் ஹீ ஹலாங்
9. தோரா
10. வீனஸ் கிரகம்

www.padippakam.com







# நாட்டோ (NATO) நாடுகள்


நாட்டோ என்று அழைக்கப்படும் தாபனம் 1949ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும். ஆதிக்கம் செலுத்தும் நாடுகளின் வல்லமையை குறைப்பதற்காகவும், போர் தவிப்பை அடிப்படை நோக்கமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. நாடுகளின்சமாதானம், அமைதி நிலவ இந்த நாடுகள் செயற்பட்டுவருகின்றன. நாட்டோ நாடுகளின் தலைமை அலுவலகம் பெல்ஜியம் நாட்டில் அமைந்துள்ளது.

- மொத்தமாக 19 நாடுகள் தற்போது அங்கம் வகிக்கின்றன
- 1949ம் ஆண்டு 11 நாடுகள் ஒன்று சேர்ந்து ஆரம்பித்தன
- 1952ல் கிறீஸ்லாந்தும், துருக்கியும் சேர்த்துக் கொள்ளப்பட்டன
- 1982ல் ஸ்பெயினும், போர்த்துக்கலும் சேர்த்துக்கொள்ளப்பட்டன
- 1999ல் போலந்து, செக்கோ, கங்கேரிநாடுகள் சேர்த்துக்கொள்ளப்பட்டன
- 2004ல் Bulgarien, Estland, Litauen, Lettland, Rumänien, Slowakei, Slowenien ஆகிய 7 நாடுகளும் நாட்டோ தாபனத்தில் சேர்ந்துகொள்ள இருக்கின்றன

www.padippakam.com





## அமெரிக்கா - ஈராக்

அமெரிக்கா - ஈராக் நாடுகளுக்கிடையில் போர்மூளும் அபாயம் கிட்டிவருவதாக உலக போர் அவதானிகள் கருதுகிறார்கள். ஈராக்கில் இரசாயன அணு ஆயுத பரிசோதனைகள் நடைபெற்றுவருகின்றது. ஈராக் நாட்டை சுற்றி அமெரிக்கா தனது படைப்பலங்களை அதிகரித்து வருகிறது. ஈராக்கை சுற்றியுள்ள நாடுகளில் அமைரிக்காவின் படை ஆயுத பலத்தை இங்கே காணலாம். Türkei, Zypern, Jordanien, Saudi-Arabien, Dschibuti, Diego Garcia, Oman, Katar, UAE, Bahrein, Katar, Kuweit ஆகிய நாடுகளில் நிலைகொண்டுள்ள அமெரிக்க படைகளின் எண்ணிக்கை-களையும் படைப்பலத்தையும் இங்கே காணலாம்.

படிப்பகம்






## கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் நூல் அறிமுகம்

மூன்று நூல்களின் அறிமுக விழா அண்மையில் கடந்த 02.11.2002 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் சங்கரப்பிள்ளை நினைவு மண்டபத்தில் இடம் பெற்றது. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்களின் தலைமையில் நிகழ்ந்த இந்நிகழ்வில் நூலகவியலாளர் என். செல்வராஜா அவர்களின் ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான நூல்விபரப்பட்டியலான நூல்தேட்டம் என்ற நூலின் முதற் தொகுதியும் யாழ்ப்பாணப் பொது நூலகம் ஒரு வரலாற்றுத் தொகுப்பு என்ற நூலும் தமிழ் அறிஞர் ஐ.தி.சம்பந்தன் அவர்களின் தமிழ் அகதிகளின் சோக வரலாறு என்ற நூலும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன.

சுடரொளி வெளியீட்டுக் கழகமும் கொழும்புத் தமிழ்ச்சங்கமும் இணைந்து இந்த விழாவினை வெகு சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தன. சிறப்பு விருந்தினராக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதித் தலைவர் திரு. செல்லச்சாமி அவர்கள் வருகை தந்திருந்தார்.

இந்நிகழ்ச்சிக்கென, தமிழகத்திலிருந்து பத்திரிகையாளர்களும், தமிழறிஞர்களும் வருகை தந்திருந்தனர். தாய்லாந்திலிருந்து தமிழ்ப்பண்பாட்டுக்கழகத் தலைவரும், மலேசியாவிலிருந்து, மலேசிய எழுத்தாளர் சங்கத்தலைவரும் சமுகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் நூல்வெளியீட்டு நிகழ்ச்சிகளில் முன்னெப்போதுமில்லாத வகையில் மண்டபம் நிறைந்த தமிழறிஞர்களின் முன்னிலையில் இந்த நூல்வெளியீட்டு நிகழ்வு அமைந்ததாக, கொழும்புத் தமிழ்த் தினசரிகள் தமது செய்திகளில் குறிப்பிட்டிருந்தன.

www.padippakam.com



பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்கள் தன் தலைமை உரையில் ஈழத்துத் தமிழ் நூல்களுக்கு முழுமையான ஒரு நூற்பட்டியல் இல்லாத நிலையில் அதனை முழுமையாக ஆவணப்படுத்தும் நோக்குடன் 1000 நூல்களின் குறிப்புரையுடன் கூடியதாக புகலிடத்திலிருந்து வெளிவந்திருக்கும் இந்த முதலாவது தொகுதி ஈழத்தமிழர் அனைவரையும் பெருமிதம் கொள்ள வைக்கின்றது என்றார். தன் நூலகவியல் நுண்ணறிவுடன் இதை விஞ்ஞான பூர்வமாகத் தொகுத்துத் தந்த நூலாசிரியரின் பெயர் என்றென்றும் ஈழத்து நூலியல் வரலாற்றில் நினைவு கூரப்படும் என்றார்.

ஆசியுரை நிகழ்த்திய கம்பவாரிதி கம்பன் கழகம் ஜெயராஜ் அவர்கள் தமிழரின் வரலாறு ஆவணப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதுடன் இந்நூல்கள் இன்றைய சமாதான காலத்தில் தான் கொழும்பில் சுதந்திரமாக வெளியிடக்கூடியதாயிருக்கும் என்றார்.

நூல்தேட்டம் தொகுப்பு பற்றிய தன் ஆய்வுரையில் கொழும்புப்பல்கலைக்கழகச் சட்டபீட விரிவுரையாளர் வீ.ரீ.தமிழ்மாறன் அவர்கள் இப்பாரிய பணியை திரு செல்வராஜா அவர்கள் தனி மனிதனாக நின்று தன் துறைசார் அறிவின் உதவியுடன் மிகச் சிறந்த முறையில் மேற்கொண்டு வருகின்றார் தமிழ் மக்களின் ஆய்வுக்கும், அறிவுத் தேடலுக்கும் தேவையான 1000 நூல்களை குறிப்புரையுடன் கூடியதாகப் படைத்திருக்கின்றார் என்றார். ஆயிரம் நூல்கள் என்ற வரையறை உள்ளதாலும், இது முதலாவது தொகுதி என்பதாலும், இந்நூலில் பல நூல்களின் பதிவுகள் காணப்படாதமையை குறையாகக் காண முயலக் கூடாது என்றார்.

திரு செல்வராஜாவின் யாழ்ப்பாணப் பொது நூலகம் ஒரு வரலாற்றுத் தொகுப்பு என்ற மற்றொரு ஆவணப்பதிவை அறிமுகம் செய்த தினக்குரல் பதிதிரிகையின் பிரதம ஆசிரியர் திரு ஆ.சிவனேசச் செல்வன் அவர்கள், யாழ்ப்பாண நூலகம் தமிழரின் அரசியல் வரலாற்றுடன் நிரந்தரமாகக் கலந்து விட்ட ஒன்றாகும் என்றார். அவர் தன் உரையில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்துக்குத் தாம் நூல் சேகரித்த கால கட்டத்தை உணர்வுபூர்வமாக நினைவு கூர்ந்தார். யாழ். நூலகம் எரிக்கப்பெற்று 20 ஆண்டுகள் நிறைவை நினைவு கூரும் வகையில் துணிச்சலுடன் திரு செல்வராஜா அவர்கள் நூலகத்தின் வரலாறு, அதன் எரிப்பின் பின்னணியில் நின்றோர், அங்கு எரியுண்டு போன நூல்கள் பற்றிய ஒரு மதிப்பீடு போன்ற வரலாற்று மூலாதாரத் தகவல்களை எதிர்கால வரலாற்றாய்வாரள்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் சிறப்பாகவும் ஆதாரபூர்வமாகவும் தொகுத்திருக்கின்றார் என்றார்.

ஐ.தி.சம்பந்தன் அவர்களின் அகதிகளின் சோக வரலாறு என்ற நூலை அறிமுகம் செய்து வைத்தவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சிரேஷ்ட அறிவிப்பாளர் திரு. இளையதம்பி தயானந்தா அவர்களாவார். அவர் தன்னுரையில் 2000க்கும் மேற்பட்ட தமிழ் மக்களைப் பலி கொண்ட 1983 இனக்கலவரத்தை நினைவுமீட்கும் முயற்சியாக வெளியிடப்பட்ட இந்நூல் அகதிகளிடமிருந்து திரு சம்பந்தன் அவர்கள் திரட்டிய தகவல்களின் பதிவு என்று குறிப்பிட்டார்.

இம்மூன்று நூல்களையும் கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் கலாசூரி இ. சிவகுருநாதன் அவர்கள் வெளியிட்டு வைத்தார்.

www.padippakam.com



முதற் பிரதியை தினக்குரல் நிறுவனத்தின் ஸ்தாபகர் திரு. எஸ்.பி.சாமி, கப்பல் கொம்பனி அதிபர் திரு.க. ஜெயபாலசிங்கம், பிரபல வர்த்தகர், திரு. என்.பேரின்பநாயகம், முன்னாள் சுங்க அதிபர் திரு நடராஜா, பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளர் பூ.ஸ்ரீதர்சிங், வேலணை வீரசிங்கம், லீலா உற்பத்தி நிறுவன அதிபர் திரு. ரவீந்திரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

நூல் ஆசிரியர்களான திரு என். செல்வராஜா, திரு. ஐ.தி.சம்பந்தர் ஆகியோர் ஏற்புரை நிகழ்த்தினார்கள். நூலகவியலாளர் திரு. செல்வராஜா தனது ஏற்புரையில் ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் வெளியீடுகள் உலகில் சிதறிக்கிடக்கின்றன. இலங்கைத் தேசிய நூலகமோ, எந்தவொரு அறிவியல் நிறுவனமோ இதுவரை இவற்றைத் தொகுத்து ஆவணப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. இந்நிலையில் எதிர்காலத்தில் இத்தகைய நடவடிக்கையொன்றினை நிறுவனரீதியாக மேற்கொள்ளும் வரையில் நூல்தேட்டம் தொகுப்பு முயற்சி தனிப்பட்ட முறையிலாவது மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும் என்றார். இதற்கான ஆதரவை எதிர்பார்த்தே இந்த நெடுந்தூரப்பயணத்தைத் தான் மேற்கொண்டதாகத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பொதுநூலகம்- ஒரு வரலாற்றுத் தொகுப்பு என்ற நூல் பற்றிக் குறிப்பிடுகையில், யாழ்ப்பாண நூலகம் பற்றிய வரலாற்றை சர்வதேச சமூகத்திற்கும்; எதிர்கால சந்ததியினருக்கும் நினைவூட்டும் வகையிலும், எதிர்காலத்தில் வரலாற்றாய்வாளர்களுக்கு மூலாதார தகவல்களைத் தரும்வகையிலும் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது என்றார்.

பிரதம அதிதி திரு செல்லச்சாமி அவர்கள் நூலாசிரியர்கள் திரு என். செல்வராஜா, திரு ஐ.தி.சம்பந்தர் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். அவர் தன் உரையில், இன்று இந்நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலினால் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மூன்று நூல்களையும் நாம் அறிந்து கொள்ளக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதையும், யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதனால் தமிழர்களுடைய அவலநிலை உலகெங்கும் அறிமுகமாக வழிவகுத்தமையையும் சுட்டிக்காட்டினார்.

தமிழ்ச்சங்கச் செயலாளர் திரு ரகுபதி பாலஸ்ரீதரன் அவர்களின் நன்றியுரையை அடுத்து தமிழ் வாழ்த்துடன் நிகழ்ச்சி இனிதே நிறைவெய்தியது. இந்நிகழ்ச்சியை லண்டன் தீபம் தொலைக்காட்சியினர் முழுமையாகப் பதிவு செய்திருந்தனர்.

---

*விவேகத்துடன் துடிப்பும் ஞானத்துடன் அன்பும் கண்டிப்புடன் கனிவும்கொண்டு விளங்குங்கள்.

*அன்பே சமயத்தின் வேர் அகந்தையோ பாவத்தின் வேர் - துளசிதாசன்

*மனித சுதந்திரத்தைப் பறித்து நன்னடத்தையையும் ஊக்கத்தையும் உண்டாக்க முடியாது - ஆபிரகாம்லிங்கன்.

www.padippakam.com







# அமரர்
# மா மனிதர்
# குமார் பொன்னம்பலம்
# 3வது ஆண்டுநினைவு
# 05-01-2000

## உயிருடன் இருந்த குமாரிலும் பார்க்க அமரர் குமாருக்கே அதிக சக்தி

இன்றைய தமிழ்ச் சமுதாயத்தின் அவலங்களையும், துயரங்களையும் சர்வதேச சமுதாயத்திற்கு மிகவும் துணிச்சலுடன் ஆணித்தரமாக எடுத்துக்கூறிய பெருமை குமார் பொன்னம்பலத்திற்கே உரியது. அவர் சிங்களப் பிரதேசத்திலிருந்துகொண்டு சிங்கள அரசியல் தலைமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களை இலங்கையிலும் பிற நாடுகளிலும் தமிழிலும், ஆங்கிலத்திலும் விபரமாக எடுத்துரைத்தார். அவருக்கு கிடைத்த பெருமை தந்தையார் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தென் ஆசியாவில் மிக்ப் பிரசித்தி பெற்ற குற்றவியல் சட்டத்தரணி என்ற காரணத்துக்காக அல்ல. அல்லது அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் செயலாளர் என்பதற்காகவல்ல. அவருக்கு கிடைத்த தனிப் பெருமை விடுதலைப் புலிகளின் அரசியல் அபிலாஷைகளையும் குமுறல்களையும் எட்டுத் திக்கிலும் பரவச் செய்த தியாக சேவையினால் கிடைத்த பெருமையாகும்.

விடுதலைப் புலிகள் பயங்கர்வாத இயக்கம் என்று முன்னாள் அமைச்சர் கதிர்காமர் செய்த 'கோயபல்சிய' பிரசாரத்தை தவிடுபொடியாக்கிய சிறப்பு இவருக்கே உரியது. தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளின் தியாகங்களை மதித்து அவர்களுடைய அபிலாஷைகளை நன்கு மனதிற் கொண்டு இருந்தாலும் வெளிப்படையாக அவர்களுக்கு ஆதரவு கொடுக்க தயங்கினார்கள்.

படிப்பகம

ஆனால், குமார் பொன்னம்பலம் அஞ்சா நெஞ்சத்துடன் தன்னுடைய கருத்தை ஆணித்தரமாகவும், அழுத்தமாகவும், உறுதியாகவும் விடுதலைப் புலிகளின் அபிலாஷைகளுக்கு ''தலை வணங்குகின்றேன்'' என்று கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் கூறியது சர்வதேச தமிழ் சமுதாயத்தையும், சர்வதேச நடுநிலையாளர்களின் நெஞ்சத்தையும் ஈர்த்தது. இதன் காரணமாக அவருடைய மறைவையொட்டி வேலுப்பிள்ளை பிரபாகரனால் குமார் பொன்னம்பலத்திற்கு ''மாமனிதர்'' என்ற விருது வழங்கப்பட்டது.

இவர் பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்தது சகலருக்கும் தெரிந்த விடயம். ஆனால், புலிகளின் அபிலாஷைகளுக்கு ஆதரவு கொடுத்தபின்பு இவருடைய செல்வாக்கு உலகம் முழுக்கப் பரவியது. ஆகவே, பாராளுமன்றத்தில் தெரிவு செய்யப்பட்ட தமிழர்களிலும் பார்க்க இவருடைய செல்வாக்கு அதி உன்னத நிலையில் இருந்தது. இருக்கின்றது.

விடுதலைப் புலிகளுடைய அபிலாஷைகள்ள உலகத்திற்கு எடுத்துக்கூறுவதற்கு தன்னை அர்ப்பணித்த மனிதர்தான் குமார். இதன் காரணமாக மேற்குலகத்தில் விடுதலை யுத்தத்திற்கு தகுந்த மரியாதை கிடைத்தது. அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், டென்மார்க், அவுஸ்திரேலியா முதலிய நாடுகளுக்கு தனது சொந்தப் பணத்திலேயே பிரயாணம் செய்து அங்குள்ள தமிழர்களுக்கும் அரசியல் பிரமுகர்களுக்கும் தமிழர்களுடைய பிரச்சினையை நன்கு எடுத்துக் கூறினார்.

1997ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைக் கூட்டத் தொடரில் இவர் ஆற்றிய உரை சகல பிரதிநிதிகளினதும் மனச்சாட்சியை உலுக்கியது. 1994ஆம் ஆண்டு பதினேழு சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் இலங்கை அரசை கடுமையாக விமர்சித்தன. ஆனால், 1997ஆம் ஆண்டு குமார் பொன்னம்பலத்தினுடைய முயற்சியினால் எழுபது சர்வதேச புகழ்பெற்ற அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் இலங்கை அரசை மிகக் கடுமையாக கண்டனம் செய்தன. இதற்கு இலங்கை அரசின் பிரதிநிதி தகுந்த பதில் சொல்ல முடியாமல் திணறிவிட்டார். செம்மணி விவகாரம் சர்வதேச கவனத்தை ஈர்ப்பதற்கு பெரும்பங்காற்றிய அர்ப்பணிப்பு குமார் பொன்னம்பலத்திற்கே உரியது.

ஜனாதிபதி தென்னாபிரிக்காவில் இலங்கைத் தமிழர் ''வந்தேறு குடிகள்'' என்று பொய்யான முத்திரை ஒட்டியதை குமார் மிகக் கடுமையாகக் கண்டனம் செய்தார். இவ்விதம் மிகத் துணிவுடன் அநேக விடயங்களை தட்டிக்கேட்டு தெளிவுபடுத்தி தமிழ் மக்களுக்கு ஒரு ''விடிவெள்ளியாகத்'' திகழ்ந்தார்.

இவரின் செயற்பாடுகள் சிங்களத் தலைமைத்துவத்திற்கு ஒரு பிரச்சினையாக இருந்தன. பட்டப்பகலில் சுட்டுக்கொல்லப்பட்டார். இவருடைய மரணச் சடங்கில் பல ஆயிரம் மக்கள் கலந்து கொண்டார்கள். கணிசமான அளவுக்கு சிங்களவரும் முஸ்லிம்களும் கலந்து கொண்டனர். ஆனால், அவருடைய மறைவுக்குப் பின் தமிழ் தாயகத்திலும் மலையகத்திலும் இவரில் ஒரு தனிப்பட்ட பக்தி ஏற்பட்டு விட்டது. இதன் பலனாக இவருடைய

## 3 ஆவது நினைவு தினம்

பெயரைச் சொல்லித்தான் யாழ். குடா நாட்டிலும், மட்டக்களப்பிலும் மூன்று பாராளுமன்ற அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். இந்த அமோக வெற்றிக்கு விசேடமாக பல்கலைக்கழக மாணவர்கள் அதிக ஆர்வம் கொண்டு குமாரினுடைய கட்சியின் அபேட்சகர்களுக்கு ஆதரவு கொடுத்தார்கள்.

இவருடைய தந்தையாகிய ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆரம்பித்த தமிழ்க் காங்கிரஸ் 1940 இலும் 1950இலும் மிக உன்னத நிலையில் இருந்தது. காலப் போக்கில் அதனுடைய செல்வாக்கு மங்கியது. ஆனால், குமாரினுடைய தொண்டுகளை எண்ணியும் அவர் தமிழனுக்காக தன் உயிரைத் தியாகம் செய்ததை எண்ணியும் தமிழ் இளைஞர்கள் இவருடைய கட்சி அபேட்சகர்களுக்கு நேர்மையான முறையில் வாக்களிக்கத் தூண்டினர். அதிக செலவில்லாமல் கிழக்கில் ஒரு ஆசனமும் வடக்கில் இரண்டு ஆசனமும் கிடைத்தன. இதுவே மறைந்த குமார் பொன்னம்பலம் அடைந்த மாபெரும் வெற்றி. இதிலிருந்து தமிழனுக்காக உயிர் நீத்த குமார் இன்னும் அழியாப்புகழ் பெற்று விளங்குகின்றார் என்பதை கடந்த பாராளுமன்றத் தேர்தல் நிரூபித்து விட்டது.

இவருடைய புதல்வர் கஜேந்திரகுமார் 27 வயது நிரம்பிய சட்டத்தரணியாவார். யாழ்ப்பாணத்தில் குமார் பொன்னம்பலத்தின் மகன் என்பதற்காக தங்கள் வாக்குகளை செலுத்தி வெற்றியடையச் செய்தார்கள். இந்த அமோக

www.padippakam.com




வெற்றி கஜேந்திரகுமார் அடைந்த வெற்றி அல்ல. இதை குமார் அடைந்த வெற்றி என்று தான் சொல்ல வேண்டும். காலப் போக்கில் கஜேந்திரகுமாரின் செயல்பாடுகள் தந்தையைப் போல இருக்கவேண்டும்.

குமார் புலிகளுடைய அபிலாஷைகளை ஆதரித்தபடியினால் சிங்கள கடும் போக்காளர் இவர் மீது வெறுப்புக்கொண்டது இயற்கை. அதற்காக குமார் தனது கொள்கைகளை விட்டுக்கொடுக்கவில்லை. தமிழர்களுடைய அபிலாஷைகளை ஆணித்தரமாக சகலருக்கும் தெட்டத் தெளிவாக கூறிவந்தார். இவருக்கு திம்புக் கோட்பாட்டில் அதிக நம்பிக்கை இருந்தது. திம்புக் கோட்பாட்டை சர்வதேச அரங்கில் அங்கீகாரம் பெறச் செய்து அதன் விளைவாகவே தமிழர்களுக்கு விமோசனம் பிறக்க வேண்டும் என்பதே இவரின்

இவருடைய உயிரைப் பறித்தவர்கள் குமார் பொன்னம்பலத்தின் சகாப்தம் ஒழிந்துவிட்டது என்று எண்ணியிருக்கலாம். ஆனால், குமார் மறைந்ததன் காரணமாக இன்று தமிழ்ச் சமுதாயத்தில் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டு அதன் விளைவாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸுக்கு மக்கள் ஆதரவு கொடுத்துள்ளார்கள். தமிழருக்கு விடுதலை கிடைக்கும் வரை குமாரின் உணர்வுகள் முன்னிற்கும். குமாரின் கொள்கைகள், உணர்வுகள் நிச்சயமாக அரசியல் ரீதியாக அதிக பாராளுமன்ற ஆசனங்களைப் பெற அதிக வாய்ப்புகள் உண்டு. உயிருடன் இருக்கும் போது குமார் பெற்றிருந்த சக்தியை விட அமரத்துவம் அடைந்த பின்னர் அவருடைய இலட்சியங்கள், விடுதலை உணர்வுகள் மிகுந்த சக்தி பெற்று விளங்குகின்றன.

# வன்னித் தாய்

ஜெ. கரிகாலன்



அவள் காடு,
ஆயிரமாயிரம் கைகள்
மரங்களே கரங்கள்

அவள் தாய் - மூத்த
தமிழ் குடிகளின் தாய்.

அள்ளி அணைத்துக் காத்தாள்
அவலத்துடன் வந்த தம் மக்கள்

பாரதிபோலொருவன் வைத்த
விடுதலை வேட்கையே
அக்கினிக்குஞ்சாய்
வேங்கைகளின் வீரம் தகித்தது.

அவள் தாய்
அக்கினிக்குஞ்சுகளை
வேங்கைகளாய் ஈன்றெடுக்கிறாள்.

வன்னித்தாய்
வேங்கைகளுக்குத் தாய்.

## ஆதரவற்றோர் உதவிநிதி

| | | |
|---|---|---|
| ☞ ஆரம்ப இருப்பு 01.11.2002 | | = 54.53 |
| ☞ ஆன்பளிப்புக்கள்:- | | |
| ❖ செல்வி லாவண்யா அற்புதராசா - Soest (பிறந்தநாள் அன்பளிப்பு) | +25.00 | |
| ❖ செல்வி சப்றினா நோபேட் - Arnsberg (பிறந்தநாள் அன்பளிப்பு) | +50.00 | |
| ❖ செல்வன் கபிலன் மகாலிங்கம் - Oberhausen (பிறந்தநாள் அன்பளிப்பு) | +50.00 | |
| ❖ செல்வன் பன்னீர் பரராஜசிங்கம் - London (பிறந்தநாள் அன்பளிப்பு) | +50.00 | |
| ❖ திருமதி புஸ்பராணி தர்மகுலசிங்கம - Oberhausen (தாயாரின் 31வது நாள் நினைவு அன்பளிப்பு) | +50.00 | |
| | 225.00 | = 225.00 |
| | | = 279.53 |
| ☞ அனுப்பியது | | |
| ❖ „வாழ்வுதயம்“ மன்னார் (அருட்தந்தை - எஸ் யேசுராசா அடிகளார்) | +200.00 | |
| ❖ வங்கிக்கட்டணம் | +6.39 | |
| | 206.39 | = 206.39 |
| | | = 73.14 |
| ☞ மீதி கையிருப்பு 31.12.2002 | | |

**இம்மாதம் பிறந்தநாள் கொண்டாடிய சிறுவர்கள் தமிழீழ அநாதைச்சிறுவர்களுக்காக அன்பளிப்புகளை வழங்கியுள்ளனர். அத்துடன் ஆதரவற்றோர் நிதிக்கு உதவிவழங்கியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். பிறந்தநாள் கொண்டாடிய குழந்தைகளுக்கும் "மண்" சஞ்சிகை வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.**

– ஆசிரியர் –

www.padippakam.com



Anlage Z 1 zur AWV

**ZAHLUNGSAUFTRAG IM AUSSENWIRTSCHAFTSVE**

Meldung nach §§ 59 ff. der Außenwirtschaftsverordnung (A

1

52: An Kreditinstitut
Stadtsparkasse Duisburg
Königstraße 23-25
47051 Duisburg

Bankleitzahl: 350 500 00

Konto-Nummer des Kontoinhabers/Einzahlers: 0225000421

Zahlung zu Lasten: 1 = Euro-Konto. 2 = Währungskonto — Keine Angabe bedeutet Zahlung zu Lasten des Euro-Kontos

32: Währung / Betrag: EUR 200,00

50: Name des Kontoinhabers/Einzahlers: VY.RAMUTHU SIVARAJAH, M.ERDE

Straße: ANGERTALER STR 98

Postleitzahl / Ort: 47249 DUISBURG

57: Bank des Begünstigten (bevorzugt als S.W.I.F.T.-Code) — BIC (S.W.I.F.T.-Code) — Ist sowohl der S.W.I.F.T.-Code als auch Name und Anschrift der Bank ausgefüllt, wird die Zahlung gemäß S.W.I.F.T.-Code ausgeführt

Name des Kreditinstituts: HATTON NATIONALBANK

Straße: MANNAR BRANCH

Ort/Land: MANNAR, SRI LANKA

Konto-Nummer des Begünstigten bzw. IBAN: 02-1050601-9 — Bank Code/S.W.I.F.T.-Code

59: Name des Begünstigten: REV. FR. S. JESURAJAH

Straße: "VALVUTHAYAM" MAIN STREET

Ort/Land: MANNAR SRI LANKA

70: Verwendungszweck (ggf. für Begünstigten): SPENDE FUER KINDERHEIM

Datum: 27.12.2002

Telefon (Durchwahl): 706480

Ausführungsart (Keine Angabe bedeutet Standard): 0 = Standard (S.W.I.F.T.), 1 = Eilig (S.W.I.F.T.), 2 = Scheckziehung, 3 = Scheckzahlung an Kontoinhaber, 4 = Interpay — 0

Weisungsschlüssel (Weisungen für Kreditinstitut): 1 = Avis an Bank des Begünstigten, 2 = Telefonavis an den Begünstigten, 3 = Telex/Fax Avis an den Begünstigten, 4 = Zahlung gegen Legitimation — 1

71: Entgeltregelung (Keine Angabe bedeutet alle Entgelte z.L. Kontoinhaber): 0 = Entgeltteilung eigenes Entgelt z.L. Kontoinhaber, fremdes Entgelt z.L. Begünstigten, 1 = alle Entgelte z.L. Kontoinhaber, 2 = alle Entgelte z.L. Begünstigten — 0

…mit Schreibmaschine ausfüllen. Bei Handschrift sind Großbuchstaben zu verwenden.

மாபெரும் தியாகங்கள் மூலமே மாபெரும் சாதனைகளைச் சாதிக்க முடியும்.

விவேகானந்தர்

செல்வத்தை உண்டாக்காமல், நுகர உரிமை கிடையாது. அதேபோல் இன்பத்தை உண்டாக்காமல் அதனை நுகர முடியாது.

பெர்னாட்ஷா

எதிர்காலத்தை நமக்கு எவரும் தடை செய்ய இயலாது.

யோன் கம்பெத்தா

www.padippakam.com



# SRI SHANMUGA GIRLS' HOME
## ஸ்ரீ சண்முக பெண்பிள்ளைகள் இல்லம்

54, Vidyalayam Road,
Trincomalee,
Sri Lanka.

T'phone : 026-22521

19. 12. 2002

திரு. வ. சிவராஜா,
ஆசிரியர்,
மணி சஞ்சிகை.

அன்புடையீர்,

எமது [illegible] வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன். பாலகர்களும் இளைஞர்களும் [illegible] [illegible]. [illegible] [illegible], பல [illegible] [illegible] அனைவரும் வாழ்கின்றது. ஆனால் வாழ்க்கைச் செலவு [illegible] தாங்க முடியாமல் உள்ளது. 50 பெண்பிள்ளைகளும், 25 ஆண்பிள்ளைகளும் இங்கு உள்ளனர். மற்றும் பல இல்லங்கள் புதியவை பல மாணவர்களை [illegible]. 2002ம் ஆண்டு திருகோணமலையில் [illegible] இல்லங்கள் [illegible] எமது [illegible] [illegible]. [illegible], [illegible] [illegible] [illegible] பூர்த்தி செய்கின்றது. [illegible]. 25 ஆண்டு சேவை [illegible] சேவை செய்ய [illegible] [illegible]. [illegible] [illegible] நினைத்துள்ளோம். இவ்வாண்டும் [illegible] [illegible]. [illegible], [illegible] [illegible]. 3 மாணவர்கள், [illegible] [illegible]. 3 மாணவர்கள் பட்டப்படிப்பு [illegible] [illegible]. [illegible] [illegible] [illegible] [illegible]. [illegible] [illegible], [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].

இப்படிக்கு,
தங்கள் [illegible]
வி. நடராஜா.

Managing Trustee
Mr. N. Pugendran, B. A (Hons)
Addl. Govt. Agent
Trincomalee.

Secretary & Manageress
Miss. V. Nadarajah, B. Sc.

www.padippakam.com



# அன்பளிப்புகள்



தாயகத்தில் அவதியுறும் அநாதைச் சிறுவர்கள், வலுவிழந்தோர்கள், அங்கவீனர்களுக்கு கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக நாம் உதவிவருவது வாசகர்களாகிய உங்களுக்குத் தெரியுமென நம்புகிறோம்.

இடம்பெயர்ந்து வாழும் நாடுகளில் வசிக்கும் நம்மவர்கள் பிள்ளைகளின் பிறந்தநாள், பூப்புனிதநீராட்டுவிழா, திருமணவிழா ஆகியவற்றை கொண்டாடும் போது ஈழத்தில் அல்லலுறும் ஆதரவற்றோருக்கு சிறு உதவியாக பண உதவி புரியலாம் என நம்புகிறோம். இத் திட்டத்திற்கு பலர் உதவிபுரிந்துள்ளார்கள், புரிகிறார்கள்.

எனவே நீங்களும் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல காரியங்கள் நடாத்தும்போது ஈழத்து அநாதைச்சிறுவர்களையும் நினைவுகூர்ந்து சிறிது உதவுங்கள். நீங்கள் உதவும் சிறிது பணம் எத்தனையோ ஆதரவற்றோரை வாழவைக்கின்றது என்பதை நினைவில் கொள்ளுவோம்......

உதவிபுரியும் அன்பர்கள், பிள்ளைகளின் பெயர்களை எமது சஞ்சிகையில் பிரசுரித்து உதவுவோம். எனவே விரும்பிய அன்பர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு உதவலாம். அல்லது எமது வங்கிக்கணக்கிற்கு நிதி உதவி புரிந்து உதவலாம்.

*ஒன்று சேர்ந்து உதவுவோம்......*
*சிறுதுளி பெருவெள்ளம்......*
*ஆதரவுக் கரம் நீட்டுவோம்......*

~ ஆசிரியர் ~

நிதி உதவி புரியவிரும்பும் அன்பர்கள் கீழ்க்காணும் வங்கிவிபரத்திற்கு அன்பளிப்புக்களை அனுப்பி உதவி புரியுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**Vyramuthu Sivarajah**
**Stadtsparkasse – Duisburg**
**Konto Nr. – 225000421**
**Bankzahl - 35050000**

**ஆதரவற்றோருக்கு ஒன்று கூடி உதவுவோம்**

www.padippakam.com



## 14வது ஆண்டில் காலடி!

உங்கள் „மண்“ சஞ்சிகை 1990 தைமாதம் ஆரம்பிக்கப்பட்டு 2003ம் ஆண்டு தைமாதம் 13வது ஆண்டை நிறைவு செய்து 14வது ஆண்டில் காலடி பதிக்கின்றது.

கடந்தகாலங்களில் „மண்“ சஞ்சிகையின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த, அளித்துவரும் வாசகர்கள், ஆக்கதாரர்கள், நலன்விரும்பிகளுக்கு சிரம் தாழ்த்தி நன்றிகளை பகிர்ந்துகொள்கிறோம்.

எதிர்காலத்திலும் „மண்“ சஞ்சிகையின் வளர்ச்சியில் எல்லோரும் பங்குகொண்டு ஒத்துழைத்துப் பங்காற்றுவோம்... தமிழையும், தமிழ்மண்ணையும், தமிழினத்தையும் நேசித்து ஒற்றுமை பேணி உதவிபுரிந்து வாழ்வோமாக...

- ஆசிரியர் -

*நன்றிகள்...*

# வள்ளுவர்



இல்வாழ்க்கையில் பல கடமைகள் உண்டு. அவற்றையெல்லாம் சரியாக நிறைவேற்றினால்தான் இல்லறம் பூரண அழகு பெறும். இவற்றில் மனைவியின் பங்கு பெரிய பங்கு. இதற்கு வேண்டிய பண்பாடும், அறிவும், மனமும் வீட்டு துணைவியிடம் இல்லாவிடில், எவ்வளவு செல்வம் இருந்தாலும் வாழ்க்கை மாண்படையாது.

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின்
வாழ்க்கை எனைமாட்சித் தாயினும் இல்."

(இல்வாழ்க்கைக்குக் தக்க நற்பண்பு மனைவியிடம் இல்லையானால், ஒருவனுடைய் வாழ்க்கை வேறு எவ்வளவு சிறப்புடையதானாலும் பயன் இல்லை)

படிப்பகம்

மனைவியானவள் மனைமாட்சி படைத்திராத வளாக ஆயின், அந்தக் குடும்பத்துக்கு வேறு வகையில் எவ்வளவு மாட்சியிருந்தும் இல்லாதது போலவே முடியும்.

மனைமாட்சி என்பது பெண்களுக்கு உரிய ஒரு தனிப்பண்பு. கணவனுடன் ஒன்றுபட்டு இல்லறத்துக்கு உரிய உயர்த்த கடமைகளைச் செய்து முடிக்கும் திறமை. இந்தத் திறமை மனைவிக்கு இல்லையாயின், கணவன் எவ்வளவு பண்பட்டவனாயினும் பொருள் படைத்தவனாயினாலும் அந்தக் குடும்பத்தின் வாழ்க்கை அதற்குரிய பண்பை அடையாது.

"வாழ்க்கை எனை மாட்சித் தாயினும் இல்":
என்பது திருவள்ளுவரின் தனி நடை.

நா. தர்மேந்திரன்,

# அவசர புனர்வாழ்வு நிதி




## அவசர புனர்வாழ்வு நிதி

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக எமது தாயகப் பகுதியில் இடம்பெற்ற போர், மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் ஏற்பட்ட விளைவுகள் தாங்கமுடியாதவை; சகிக்கமுடியாதவை; மீளமுடியாதவை. உயிரிழப்பு, உடமையிழப்பு, இருப்பிட இழப்பு அத்துடன் குடும்ப, சமூக கட்டமைப்புக்கள் அனைத்தும் சிதைந்த நிலையில் நாம் வாழ்கின்றோம்.

மேற்குறிப்பிட்ட விளைவுகளை நாம் சுமூகமாக பிரிப்பது எனின்,

- 30,000-க்கு மேற்பட்ட குடும்பங்கள் தங்கள் குடும்பத் தலைவர்களை இழந்து வறுமையில் வாழ்கின்றனர். இவர்கள் உளரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்ட நிலையில் திக்கற்று, நிர்க்கதியற்று எதிர்காலத்திற்காக ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.
- 226,000 குடும்பங்கள் கடந்த இரு தசாப்தங்களாக பல தடவைகள் இடம்பெயர்ந்து முகாம்களிலும், நண்பர் வீடுகளிலும் வசித்து வருகின்றனர். இவர்கள் தமது சொந்த இடங்களுக்கு மீண்டும் செல்லும் நாளை எதிர்பார்த்திருக்கிறார்கள்.
- சுமார் 20,000 சிறுவர்கள் தமது கல்வியின் எதிர்காலமே கேள்விக்குறியாகிய நிலையில் அலைந்து திரிகின்றனர்.
- 2,000 பேர் வரையில் கண்ணிவெடி மற்றும் விமானத் தாக்குதல்களால் தமது அவயங்களை இழந்து, செயற்கை உறுப்பு பொருத்துவதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.
- 5,000-க்கு மேற்பட்ட சிறார்கள் தமது பெற்றோர்களை இழந்து எதிர்காலத்திற்காக ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.
- பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி ஆயிரக்கணக்கானோர் தமது வாழ்நாட்களை சிறையில் கழிக்கின்றனர். இவர்களின் குடும்பங்கள் மிகவும் வறுமையில் வாடுகின்றன.
- ஒரு மனிதனின் வாழ்வாதாரத்திற்கான சமூக, பொருளாதார உட்கட்டுமானங்கள் அனைத்தும் 60 சதவீதமானவை அழிகப்பட்ட நிலை இன்று காணப்படுகின்றது. இவை கணக்கெடுப்பில் அடங்குபவை. கணக்கிடாதவை இன்னும் அதிகம்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், புலம்பெயர்வாழ் மக்களின் முழுமையான பங்களிப்புடன், துன்பப்படும் மக்களின் துயரங்களை ஓரளவு நிறைவேற்றி வருகின்றது. குழந்தைகள் முதல் பெரியோர் வரை 40-க்கு மேற்பட்ட நிரந்தர திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. ஏனினும் பொருளாதாரத் தடையாலும், நிதிகள் உரிய காலத்தில் கிடைக்காமையாலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழுமையாக எமது பணிகளைச் செய்வதில் தடங்கல்கள் ஏற்பட்டன.

இதுவரை காலமும் தங்கள் உதவியில் உயிர் வாழ்ந்த உங்கள் உறவுகளின் பாதிப்புக்களை உடனடியாக நிவர்த்திசெய்ய தற்போதைய நிலைமையைப் பயன்படுத்தி, நாம் அனைவரும் ஒன்றுபட்டு, குறுகிய காலத்தில் துரிதமாகச் செயற்பட முடிவுசெய்துள்ளோம். இவ் ஏட்டில் குறிப்பிட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டு, உங்கள் பங்களிப்புக்களை 25.12.2002 தொடக்கம் 05.01.2003 வரையான காலப்பகுதியில் தவறாது செய்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**கே.பி.றெஜி**
*பொறுப்பாளர்*
*தமிழர் புனர்வாழ்வுக் கழகம்*

# கிளி. மாவட்டத்தில் வெள்ளப்பாதிப்பு.



கிளி. இந்துக்கல்லூரியில் தங்கியுள்ளவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், நெக்கோட் நிறுவனமும் உணவு வழங்குதல்



இடம் பெயர்ந்த மக்களை பதிவு செய்யும் கிராம சேவையாளரும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரும்



இடம்பெயர்ந்த மக்களுக்கு மருத்துவ சேவை வழங்கும் திலீபன் மருத்துவ சேவையினர்.



வெள்ளத்தால் தடைப்பட்ட வீதியில் போக்குவரத்துச் செய்ய மக்களுக்கு உதவும் தெருவெளி நாடகக் கலைஞர்கள்.






வெள்ளத்தால் இடம் பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியுள்ள மக்கள்

தொடர்ச்சியான கனத்த மழை காரணமாக

# கிழக்கில் 1½ இல. மக்கள் இடம்பெயர்வு;

# மட்டு. மாவட்டம் பெருமளவு பாதிப்பு!



வன்னியில் வீதியை மேவிப் பாயும் வெள்ளம்

## வீதிப் போக்குவரத்துக்கும் பெரும் இடையூறு
## பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிரழிவு

கிழக்கு மாகாணத்தில் பெய்த கனத்த மழை காரணமாக ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இதில் மட்டக்களப்பு மாவட்டமே பெரிதும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. மேலும் வெள்ளம் இன்னமும் வடியவில்லை என்பதோடு, வீதிப் போக்குவரத்தும் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வெள்ளப்பெருக்கினால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிரழிவும் ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களில் 2750 குடும்பங்கள் தமது இருப்பிடங்களை இழந்துள்ளன. சுமார் 17000 குடும்பங்கள் தமது இருப்பிடங்களில் இருந்து வெளியேறி பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளன.

இதில், பெரிதும் பாதிப்பிற்குள்ளான மட்டக்களப்பு மாவட்டத்தில் 95000 குடும்பங்கள் பாதிப்பிற்குள்ளாகியுள்ளதாகவும். இதில் 8500 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் மட்டு.

(1[illegible] ஆம் பக்கம் பார்க்க)

**நம்மக்களுக்கு!**


**நாமே உதவ வேண்டும்!**

- வன்னியில் வெள்ளப் பெருக்கினால் -

## பல பகுதிகளில் போக்குவரத்து பாதிப்பு
## ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இடம்பெயர்வு

www.padippakam.com





விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள்,இலங்கை அரசதரப்புப் பிரதிநிதிகள், ஐரோப்பிய நாட்டுப் பிரதிநிதிகளுடனான நோர்வே சமாதானப் பேச்சுவார்த்தையின் போது இலங்கைப் பிரதமர் திரு ரணில் விக்கிரமசிங்காவும், விடுதலைப்புலிகள் அரசியல் ஆலோசகர் திரு அன்டன் பாலசிங்கம் அவர்களும் ஒருவருக்கொருவர் கைலாகு கொடுத்து மகிழ்ந்து கலந்துரையாடினார்கள்.

## „ஈழப்போர்„ கடந்த 30 ஆண்டுகளில்

- இறந்த தமிழ்ப்பொதுமக்கள் 82,000
- இறந்த மாவீரர்கள் 17,650
- வடமாகாணத்தில் அநாதைச்சிறுவர்தொகை 10,000
- யாழ்குடாநாட்டில் விதவைகள் 19,100
- கிழக்குமாகாணத்தில் விதவைகள் 8500
- (இந்த விதவைகள் 70 வீதமானவர்கள், 30 வயதுகூட நிரம்பாத இளம் விதவைகள்)
- அகதிகளாக இடம்பெயர்ந்தவர்கள் மொத்த எண்ணிக்கை 12 லட்சம்
- சொந்த நாடுவிட்டு அகதிகளாக புகலிடம் தேடியவர்கள் 7,5 லட்சம்

✣ புள்ளிவிபரங்கள் வெறும் இலக்கங்கள் மட்டுமல்ல. அதற்குமப்பால் ஒவ்வொரு இலக்கமும் இரத்தமும், சதையும், கனவுகளும் கலந்துசெய்யப்பட்ட ஒரு உயிர்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ERDE

## Einsatz Fur eine Freiheitliche Zukunft



## ஊனமுற்றோர் புனர்வாழ்வுக்கழகம்

### கிளிநொச்சி

**வருடாந்த சந்தா 15-00 யூரோ**

படிப்பகம்